
கல்கி
KALKI 10.3.96
ரூ. 3.00
“ஒரு ஆம்லெட்; ஒரு பம்பரம்!”

டை: சில மெய் தகவல்கள்!

நம் ஊரில் கோட் போட்டு 'டை' கட்டுபவர்கள் ரொம்பக் குறைச்சல் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால், "மாசத்துக்கு அறுநூறு டை விக்குது சார்" என்று மயிலாப்பூர் ரெக்ஸ் ஃபேஷன்ஸ் கிரீஷ் சொன்ன போது ஆச்சர்யமாக இருந்தது.

புது மாப்பிள்ளைகளும் மெடிக்கல் ரெப்களும் காரில் போய் கையெழுத்து போடுகிறவர்களும் நிறைய பெருகி விட்டார்கள். ஆகவே சமீப காலமாக இங்கே 'டை' விற்பனை களஜோராக நடக்க ஆரம்பித்திருக்கிறது!

'டை' பக்கம் கவனம் செலுத்தாதிருந்த 'வான் ஹுசேன்' போன்ற பெரிய ஃபேஷன் நிறுவனங்களெல்லாம் சமீப காலமாக அலறியடித்துக் கொண்டு விதவிதமாக 'டை' தயாரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

பார்க் அவென்யூ, ஜோடியாக், ஷெமாக் என்று காஸ்ட்லி ஜட்டங்களும் வாக், மெட்ரோ போன்ற விலைகுறைந்த வகைகளுமாக 'டை'கள் நிறையவே வரத் தொடங்கி இருக்கின்றன. 125 ரூபாயிலிருந்து 1500 ரூபாய் வரைக்கும் மார்க்கெட்டில் டைகள் விலைபோகின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்!

"பெரும்பாலும் சில்க், பாலியஸ்டர் டைகள், சீனாவிலிருந்து இறக்குமதி ஆகும் துணிகளில் செய்யப்படுகின்றன" என்றார் கிரீஷ்.

ஆங்கிலேய ஆட்சியின் விளைவாக நம் நாட்டுக்கு அறிமுகமான 'டை' கலாசாரம் அறுபதுகளில் கொஞ்சம் மங்கி



இருந்தது. பல நிறுவனங்கள், 'டை அணிவது கட்டாயம்' என்று இருந்த தம் கொள்கையை அப்போது தளர்த்தி விட்டன.

இப்போது, மறுபடி டை ஃபாஷன் சூடுபிடித்திருக்கிறது!

இந்தியாவில், டை தயாரிப்பதை ஒரு குடிசைத் தொழிலாகவே செய்து வருகிறார்கள் டெல்லிக்காரர்கள். இரண்டரை இன்ச்சிலிருந்து நாலரை இன்ச் அகலம், மூன்றரை இன்ச் அகலம்தான் பலரும் விரும்புகிற சைஸ் என்பது 'ரெக்ஸின்' கிடைத்த தகவல்.

அது சரி. டை, நம் பண்பாட்டுக்கு ஒத்து வராத மேல்நாட்டு சமாசாரமில்லையா... என்று கேட்டால்,

"சட்டை பேண்ட், ட்ரவுசர் எல்லாம் மட்டும் நம் ஊர் சமாசாரமா? அதை நாம் ஏற்கவில்லையா? அப்படித்தான்! ஐம்பது வருஷத்துக்கு மேல் நம் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்ற ஒரு பொருள் என்றால், அதுவும் நம் பண்பாட்டில், ஒரு அம்சமாகி விட்டது என்று தான் அர்த்தம்!" என்கிறார்கள் இவர்கள்.

மைக்கேல் ஜாக்ஸன், மடோனா படம் வரையப்பட்ட டைகள், தோல் டைகள், ரெடிமேட் முடிச்சுகளுடனான டைகள் என்று நிறைய வெரைட்டி வந்து விட்டனவாம் இப்போது.

- ஜி.எஸ்.எஸ்.

வண்ணப்படங்கள் : கிருஷ்ணமூர்த்தி

வினோத விளம்பரம்!

● பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் ஒரு வேடிக்கையான மரபு அனுசரிக்கப்படுகிறது. பட்ஜெட் கூட்டம் இன்ன தேதியில் முடிவடைகிறது என்று முன்னமே திட்டமிட்டு விட்டார்கள் என்றால், அன்று இரவு பன்னிரெண்டு மணிவரை கூட்டம் நீடிக்கும். அப்போதும் கூட்டத்தை முடிக்க முடியவில்லை என்றால், பார்லிமெண்ட் ஹாலில் உள்ள கடிகாரம் சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு நிறுத்தப்படும். கூட்டம் முடிந்த பிறகுதான் கடிகாரம் மறுபடியும் இயக்கப் படும். அதாவது பார்லிமெண்ட் ஹால் கணக்குப்படி, அந்த குறிப்பிட்ட நாளில் பட்ஜெட் கூட்டம் முடிந்து விட்டதாக அர்த்தம்!

ஆதாரம் : இராஜனின் வியப்பூட்டும் விந்தைகள்.

தகவல் : எஸ். முகம்மது யூசுப்

● கும்பகோணம் வட்டம் அழகாபுத்தூர் அருள்மிகு சுவர்ணபுரீஸ்வரர் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள சுப்ரமண்யசுவாமியின் இரண்டு கரங்களில் சங்கும் சக்கரமும் இருக்கின்றன! வள்ளிதேவசேனா சமேத சங்கு சக்கரதாரியாக அருள்பாலிக்கிறார், சுப்ரமண்ய சுவாமி!

- கே. என். பாலகிருஷ்ணன்

● தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாள் கிராமத்தில் வசிக்கும் ஓய்வு பெற்ற தமிழ்ப் பேராசிரியர் சிவப்பிரகாசம் பிள்ளைக்கு இதயம் வலது பக்கத்தில் இருப்பதாகக் கண்டறியப்பட்டது. 65 வயதுக்குப் பிறகு தஞ்சை எஸ்.பி.எஸ். மருத்துவமனையில் ஈ.சி.ஜி. பரிசோதனையில் இது கண்டறியப்பட்டுள்ளது. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் அவரை விசேஷப் பரிசோதனை செய்து ஆச்சர்யப் படுகின்றனர்!

பனசை. கி. சங்கர்.

● நாட்டில் லஞ்ச நோய் எல்லா இடத்திலும் புரையோடி இருப்பது தெரிந்த விஷயம்தான். ஆனால் இப்படி ஒரு விளம்பரத்தைக் கொடுக்க அசாத்திய துணிச்சல் தேவை.

"ஆட்கள் தேவை. வங்கிகளின் உயர்மட்ட அதிகாரிகளை சரிகட்டக் கூடியவர்களாக இருக்க வேண்டும். வேலை முடிந்து 'ரிசல்ட்' கிடைத்த பின் தகுந்த சன்மானம் வழங்கப்படும். பம்பாய், ஜெய்பூர், தில்லி, சென்னை, கல்கத்தா, ஹைதராபாத், மங்களூர், மனிபால், பூனா, பாட்டியாலா, இந்தூர், போபால் முதலிய இடங்களில் வேலை உள்ளது." - இந்த விளம்பரத்தை ஆமதாபாத்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்று, சென்ற ஆண்டு அக்டோபர் 14ம் தேதி "எகனாமிக் டைம்ஸ்" பத்திரிகையில் வெளியிட்டுள்ளது.

நன்றி : பிசினஸ் இண்டியா

தகவல் : கிருஷ்ணவேணி ரங்கநாதன்.

● நாணய சேகரிப்பிற்கு ஒரு டிப்ளமா படிப்பு உண்டு.

எங்கே என்கிறீர்களா? வடநாட்டில் உள்ள வாரணாசி பல்கலைக்கழகத்தில் தான்.

டிப்ளமா படிப்பு மட்டுமா? சிறந்த சேகரிப்புகளுக்கு தேசிய அளவில் விருதே உண்டு.

விருதின் பெயர் என்ன தெரியுமா?

தேசிகாச்சாரி விருது. என்ன, தமிழ்ப் பெயராக இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா?.. கரெக்ட். தேசிகாச்சாரி திருச்சியைச் சேர்ந்தவர்தான்.

- எஸ்.எம். வள்ளியப்பன்.

சுஜாதா பக்கம்



"யாரைத்தான் நம்புவதோ பேதை நெஞ்சே" என்று ஒரு பழைய சினிமாப் பாட்டு உண்டு. அதை ஸாரே ஜஹா(ன்)ஸே அச்சாவுக்குப் பதில் பாட வேண்டும்! நாட்டின் அத்தனை அரசியல்வாதிகளும் ஜெயின் சகோதரர்களிடம் கைச்செலவுக்குப் பணம் வாங்கியிருக்கிறார்கள். டயரியில் இனிஷியல் இருக்கிறதோ, கேஸ் போடப் போகிறார்களோ என்பதெல்லாம் இரண்டாம் பட்சமாகி, மக்களின் நம்பிக்கையை இவர்கள் மொத்தமாக இழந்துவிட்டார்கள். 'நான் உன்னை விடப் புனிதம்' என்று அவர்கள் எடுத்துக் கொண்ட ராஜினாமா முயற்சிகள் பரிதாபத்துக்குரியன. ராவ், வாதாபியை விழுங்கிய ரிஷி போல கம்மென்று இருக்கிறார்.

இந்தச் சூழ்நிலையில் ஒரு பொதுத் தேர்தல் வருகிறது. யாரை நம்பி நாட்டை ஒப்புவிப்பது என்கிற கேள்விக்கு தேர்தலுக்கு அருகாமையில் தான் பதில் கிடைக்கும். இப்போது தேர்தலில் பண ஆதிக்கத்தைக் குறைப்பது பற்றிச் சிந்திக்கலாம்.

தேர்தலுக்குப் பண உதவி அரசாங்கமே அளிப்பது என்பதை முதல் தீர்வாகச் சொல்கிறார்கள். இது எந்த நாட்டிலும் இருப்பதாகவே தெரியவில்லை. நடைமுறையில் சாத்தியமில்லாதது.

நாட்டின் அநிச்சயமான தேர்தல் சூழ்நிலையில் பார்லிமெண்ட் தொடங்கி, அடிக்கடி தேர்தல் வைத்தே அரசாங்கம் போண்டியாகிவிடும். மேலும், கொடுத்த பணத்தை அவர்கள் தேர்தலுக்காகத்தான் செலவழிக்கிறார்கள் என்பது என்ன நிச்சயம்? இப்போது ஒவ்வோர் எம்பிக்கும் தங்கள் தொகுதியில் செலவழிக்க ஒரு கோடி கொடுத்திருக்கிறார்களே, எங்கே கணக்கு? யாராவது ஏதாவது செய்திருக்கிறார்களா? தகவல் இல்லை. ஏப்ப சப்தம் மட்டும் கேட்கிறது.

இரண்டாவது, அமெரிக்க முறை. அந்த அந்தக் கட்சிகள் மாநாடு நடத்தி, செல்வந்தர்களிடம் தேர்தல் செலவுக்காகப் பணம் வசூலிப்பது. அதாவது ஜெயின், ஹவாலா போன்ற காரியங்களை நேர்மையாக்குவது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் போது ரிபப்ளிக், டெமாக்ரட் கட்சி இரண்டுமே மாகாணத்துக்கு மாகாணம் மாநாடு நடத்தி, பட்டன் விற்றால் நூறு டாலர், டின்னர் சாப்பிட்டால் ஆயிரம் டாலர், அதுவும் வேட்பாளருக்கு அருகில் உட்கார்ந்து சாப்பிட பத்தாயிரம் டாலர் என்று வசூலித்து, அதை ஒருவிதமாகக் கணக்கும் காட்டுகிறார்கள்.

இம்முறையை அனுசரிக்க, நமக்கு வசூலித்த பணத்துக்குக் கணக்குக் காட்டும் குறைந்தபட்ச யோக்கியம் இல்லாத வரை இதுவும் சாத்தியமில்லை. அமெரிக்க ஜனநாயகம் ஒரு ஃபெடரல் அமைப்பு. இருப்பது இரண்டு கட்சிகள்தான். அங்கே லஞ்சம் இல்லையென்று சொல்ல முடியாது. அமெரிக்க லஞ்சத்துக்கும் நம் லஞ்சத்துக்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அங்கே கடமையை மீற லஞ்சம் கொடுக்க வேண்டும். இங்கே கடமையைச் செய்யவே லஞ்சம் கொடுக்க வேண்டும். லஞ்சத்தில் நமக்குத்தான் டாக்டர் பட்டம்!

இது இப்படியிருக்க, வரும் தேர்தலில் 'ஹமாரா மகான் பாரத்'தில் என்னதான் நிகழும்? 'கேயாஸ்' தியரிப்படி யோசிக்கலாம்.

இந்த நாட்டின் ஒரே ஒரு மனச்சாட்சிப் பெட்டகமாக சுப்ரீம் கோர்ட்டு மட்டும் இருக்க, அடுத்த தேர்தலில் ஆடம்பரச் செலவு, ஹவாலா செலவு என்று பார்லிமெண்டின் எல்லா இடங்களிலும் தேர்தல் பெட்டிஷன் போடுவார்கள்.

எல்லா வழக்குகளையும் கவனிக்க ஜட்ஜுகளுக்கு அவகாசம் போதாமல், நடந்த தேர்தல்களில் பாதிக்கு மேல் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்குள், அடுத்த தேர்தல் வந்து, அல்லது பார்லிமெண்ட் கலைக்கப்பட்டு தொண்டி அரசாங்கம் பொறுப்பிலிருக்க....

நாம் ஆரம்பித்த எல்லா சீர்திருத்தங்களையும் நல்லதோ கெட்டதோ, கிடப்பில் போட்டு, பழைய குருடியின் கதவைத் தட்டுவோம்! அதற்கு ஒரே பரிகாரம் மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தைத் திருத்தி, தேர்தல் செலவின் உச்சவரம்பை அதிகரித்து, ஏதோ கொஞ்ச நாட்களுக்காவது ஏழைகள் வேட்டி சட்டையும் இரண்டு கிலோ அரிசியும் லட்டுவும் மூக்குத்தியும் பத்தடி கார் சவாரியும் கிட்டுவதை நடைமுறையாக்குவது!

India is a functioning anarchy என்று கால்ப்ரெய்த் சொன்னது எத்தனை நிஜம்! இதில் முக்கியமான சோகம், அறிவு ஜீவிகள் சும்மா இருப்பது தான். டபிள்யு பி யீட்ஸ் (WB YEATS) என்னும் ஐரிஷ் நோபல் பரிசுக் கவிஞர் அறுபது வருஷத்துக்கு முன் எழுதிய கவிதையில் :

"சிறந்தவர்கள் எல்லா இடநம்பிக்கைகளையும் இழந்திருக்க, மிக மோசமானவர்கள் உணர்ச்சி தீவிரம் நிரம்பியிருக்கிறார்கள்."

(The best lack all convictions while the worst are full of passionate intensity) என்று சொன்னது இரண்டு உலக மகா யுத்தங்களுக்கு இடைக் காலத்தில்.

இப்போது நம் சிறந்தவர்களிடம் இட நம்பிக்கை போய்விட்டது என்று சொல்ல இயலாது. குறிப்பாக இளைஞர்களிடம் நம்பிக்கை நிறையவே உள்ளது. பிரச்னை என்னவெனில் மார்க்ஸிசம் தவறியபின் இந்த நம்பிக்கையை மாட்ட வேறு ஆணி கிடைக்கவில்லை.

(மீண்டும் அடுத்த வாரம்)

அம்மாசத்திரம்...

கும்பகோணத்திலிருந்து மாயவரம் செல்லும் வழியில் அமைந்துள்ள இந்தக் கிராமத்தில், ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர்கள் ஜாலியாக சுற்றி வருவதை அடிக்கடி பார்க்க முடியும். உள்ளூர்வாசிகளுக்கு இது பழகிப் போன சமாசாரம். ஸ்வீடனிலிருந்து வாழ்த்துக்களும் கடிதங்களும் இங்கு வந்தவண்ணமிருக்கின்றன.

அம்மாசத்திரம் மக்களின் விருந்தோம்பல் பண்பு பற்றி ஸ்வீடன் தலைநகரான ஸ்டாக்ஹோமில் நடைபெறும் சுற்றுலா செமினாரில் கேள்விப்படுவோர் இப்படியும் நடக்குமா என்று ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர தடபுடலான திட்டங்களைத் தீட்டும் சுற்றுலாத் துறையினரால் சாதிக்க முடியாததை இந்தக் கிராம மக்கள் தங்கள் தூய்மையான அன்பினால் சாதித்து வருகிறார்கள். இங்கு வரும் ஸ்வீடன்வாசிகள் தங்களின் இந்த இனிய அனுபவங்களை தங்களுக்கு நெருக்க மானவர்களிடம் பகிர்ந்து கொள்வதால் அவர்களும் தமிழகத்தை நோக்கிப் புறப்படு கிறார் கள்.

அம்மா சத்திரத்திற்கும் ஸ்டாக்ஹோமுக்கும் இடையே இப்படி நல்லுறவுப் பாலம் அமைக்க அடித்தளம் போட்டவர் 'பாரத் தர்ஷன்' என்ற சுற்றுலா அமைப்பாளரான இராம. மெய்யப்பன்.

'யூத் ஹாஸ்டல் அசோஸியேஷன் ஆஃப் இந்தியா'வின் நிகழ்ச்சிகளில் கல்லூரிப் பருவத்திலேயே துடிப்புடன் பங்கேற்று தமிழ்நாடு மாநில செயலாளராக 1985 முதல் 1992 வரை செயல்பட்டார். இவரது செயல் வேகம் தேசியத் துணைத் தலைவராக இவருக்கு மகுடம் சூட்டியது. அகில இந்திய அளவில் ஒவ்வொரு வருடமும் இமய மலைப் பகுதியில் நடைபெறும் இளைஞர்களுக்கான 'டிரெக்கிங்' பயிற்சி முகாம்களைச் செம்மையாக நடத்தியதால் எல்லா மாநில யூத் ஹாஸ்டல் வட்டாரங்களிலும் மெய்யப்பன் ஹீரோவானார்.

இவருக்கு யூத் ஹாஸ்டல் மூலம் ஸ்வீடனைச் சேர்ந்த 'கிறிஸ்டியன் யூத்விக் (45



• அமுதா வீட்டில் யுவோன் & செஸ்டின்





• அம்மாசத்திரத்தில் ஒரு திருமணம்

ஸ்வீடனுக்கு ஒரு பாலம்

வெல்லாம் யூத்விக் மூலம் அறிந்த மெய்யப்பன், இந்திய கலாசாரத் தூதராக மாறி விட்டார்.

அவரின் முதல் வெற்றி, இந்தியாவைப் பற்றி உருப்படியாகத் தெரிந்து கொள்ளும் வகையில் ஒரு நூலகத்தை ஸ்டாக்ஹோமில் யூத்விக் மூலம் அமைத்ததுதான். 10 வருட காலம் வழக்கறிஞராகச் என்பவரின் நட்பு கிடைத்தது.

நார்வே, ஸ்வீடன், டென்மார்க் நாடுகளில் இருந்து இந்தியா வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இந்திய கலாசாரப் பெருமைகளை உணரவைக்க சரியான வழிமுறைகள் இல்லை. ஐரோப்பிய மீடியா இந்தியாவைப் பற்றி தப்பும் தவறுமாக பிரசாரம் செய்கிறது என்பதை

சென்னையில் வருமானவரி வழக்குகளை நடத்தி 'வாய்மை வெல்லுவதில்லையே' என்று நொந்து போயிருந்த மெய்யப்பனுக்கு 'பாரத் தர்ஷன்' என்ற தென்னக சுற்றுலாவை ஏற்பாடு செய்யும் திட்டம் கரும்பு தின்னக் கூலி கிடைத்தது போல் ஆகிவிட்டது.

ஸ்டாக்ஹோம் நூலகத்திலும் யூத்விக் நடத்தும் ஒருநாள் செமினாரிலும் இந்தியா பற்றிய நிஜமான வடிவம் ஸ்வீடன் சுற்றுலாப் பயணிகளுக்கு ஓரளவுக்கு கிடைக்கிறது.

உடல் அழகைக் காட்டும் வகையில் பெண்கள் அரைகுறை ஆடைகளை அணிந்து செல்லக் கூடாது, கோவிலுக்குச் செல்லும் போது குளித்து விட்டு, நெற்றியில் திருநீறு அல்லது குங்குமம் வைத்துக் கொண்டு செல்ல வேண்டும். பெண்களோடு ஆண்களும், ஆண்களோடு பெண்களும் கைகுலுக்கி 'ஹலோ' சொல்லுவதைத் தவிர்த்து, இருகரம் கூப்பி வணங்க வேண்டும் என்றெல்லாம் விதிமுறைகளை விளக்கிய பிறகுதான் ஸ்வீடனிலிருந்து சுற்றுலாப் பயணிகளை சென்னைக்கு விமானம் ஏற்றுகிறார் யூத்விக்.

சென்னை வந்ததில் இருந்து 29 நாட்கள் அவர்களை தமிழகம், கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் பல்வேறு இடங்களுக்கும் அழைத்துச் சென்று விதவிதமான அனுபவங்களைச் சுவைக்கச் செய்கிறார் மெய்யப்பன்.

சென்னை விமான நிலையத்திலிருந்து சுற்றுலாக் குழுவினரை அண்ணா நகரில் இருக்கும் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்று செட்டிநாட்டு உணவை ருசிக்கச் செய்கிறார். சுற்றுலா எப்படி திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அவர் அப்போது விளக்கும் போதே, இது ஒரு வித்தியாசமான பயணம் என்பதை அவர்கள் புரிந்து கொள்கிறார்கள். அசத்தும் அவரது ஆங்கிலப் பேச்சும், சிரிக்கும் கண்களும், விஷய ஞானமும், சுற்றுலாப் பயணிகளை வசீகரித்து விடுகின்றன. 29 நாட்களும் மெய்யப்பன் சொல்லுக்கு மறுவார்த்தை சொல்லாமல் முழுமையாக ஒத்துழைக்கிறார்கள்.

முதல் வகுப்பிலும், இரண்டாம் வகுப்பிலும் ரயில் பயணம், பல்லவன் மற்றும் சோழன் பஸ் பயணம், அம்மாசத்திரத்தில் மாட்டு வண்டி சவாரி, கேரள 'மாநிலம் தோட்டப் பள்ளியில் 'படகுப் பயணம்' கொல்லிமலையிலும், ஆனைமலையிலும் 'டிரெக்கிங்' என எல்லாவித அனுபவங்களையும் பெறவைப்பது மெய்யப்பன் -



• ஆசை ஆசையாக ஆம்லெட்!



• மெய்யப்பன் -
குட்டியானையுடன்

யூத்விக் கூட்டுத் திட்டத்தின் தனித்தன்மை. ஸ்டார் ஹோட்டல்களிலும் சுற்றுலாக் குழு தங்குகிறது. மின்னொளி இல்லாத மலைவாழ் மக்கள் குடிசைகளிலும் தங்குகிறது.

ஒவ்வொரு குழுவும் பரவசமூட்டும் பல இடங்களைக் கண்டுகளித்தாலும் எல்லாவற்றையும் விட சிறப்பாகக் கருதுவது அம்மாசத்திரத்திலும், கொல்லிமலையிலும் தங்களுக்கு உணவளித்து, உபசரித்து அன்பு வெள்ளத்தில் மூழ்கடிக்கும் மக்களைத்தான்.

அம்மாசத்திரத்தில் தங்கியிருந்த 14 பேர் அடங்கிய ஒரு குழுவினருடன் நாமும் சில தினங்கள் செலவிட வாய்ப்புக் கிடைத்தது. ஐந்து வீடுகளில் தங்கியிருந்த இவர்கள் இரு நாட்கள் அந்தக் கிராமத்தையும் வயல்வெளிகளையும் சுற்றி வந்தார்கள். மொழி புரியாவிட்டாலும் எல்லோரிடமும் சகஜமாகப் பழகி இரு நாட்களிலேயே நெருங்கிய உறவினர்களாகி விடுகிறார்கள்.

நெசவாளர்கள் அதிக எண்ணிக்கையில் வசிக்கும் ஒரு வீதியில் வீட்டு வாசலில் மின்னலடிக்கும் வெண்ணிறக் கூந்தலுடன் ஒரு மூதாட்டி நின்று கொண்டிருந்தார். ஸ்வீடிஷ் பெண்மணிகள் சிலர் அவரைப் பார்த்து ஏதோ பேசுவதைக் கவனித்த அந்தப் பாட்டி, "என்ன... என் தலைமுடியை போட்டோ எடுக்கணுமா?" என்று அள்ளி முடிந்திருந்த கூந்தலை அவிழ்த்து விட்டு பொக்கை வாய்ச் சிரிப்போடு போஸ் கொடுத்த காட்சி அழகோ அழகு.

பேருந்தில் பயணம் செய்தபோது, இடம் இல்லாமல் நின்று கொண்டிருந்த தன்னை, இரண்டு ஆண்களை அதட்டி எழச்செய்து, உட்கார வைத்த இன்னொரு பாட்டியைப் பற்றி நன்றியோடு நினைவுகூர்ந்த ஆசிரியர் பயிற்சி நிலைய ஆசிரியை யுவோன் (56), "பாஷை புரியாவிட்டாலும் இந்த மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடிகிறது" என்கிறார்.


பல்கலைக் கழக மாணவிகளான லூயிஸும் ஹெலனாவும், "இதுபோன்ற அன்பான உபசரிப்பை இதுவரை அனுபவித்ததேயில்லை" என்று கழுத்தைச் சாய்த்து கண்ணை மூடிப் புன்னகையுடன் சொல்லும் போதே அவர்கள் மனசுக்குள் பொங்கும் சந்தோஷம் நம்மையும் பற்றிக் கொள்கிறது. சீனா, திபெத், ஸ்ரீலங்கா நாடுகளுக்குச் சென்று வந்திருக்கும் ஹெலனா(23) கிழக்காசிய நாடுகளைப் பற்றிப் படிக்கும் மாணவி. சீனர்கள் முரட்டுத்தனமானவர்கள். ஆங்கிலம் தெரிந்திருந்தும் பேச மாட்டார்கள். ஆனால் இங்கு அப்படியில்லை. எல்லோரும் இனிமையாகப் பழகுகிறார்கள்" என்கிறார் இவர்.

தன் வீட்டில் தங்கியிருந்த மூன்று விருந்தினர்களுக்குச் சோறு சாப்பிடத் தெரியவில்லையே என்ற கவலை சிறுமி ஆர்த்திதேவி(14)க்கு. "சாதத்தோடு சாம்பார், ரசம் எல்லாம் சேர்த்து பிசைந்து சாப்பிடத் தெரியவில்லை. நாம் பிசைந்து கொடுக்காவிட்டால் வெறும் சோற்றைத் தின்கிறார்கள்" என்கிறாள் இந்தச் சிறுமி.

ஆர்த்திதேவியின் பாட்டி சாவித்திரி (70)க்கோ "ரொம்ப சாப்பிட மாட்டேங்கிறாங்க" என்ற வருத்தம். "தலைக்கு மேல் இரண்டு விரலை வச்சுக் காட்டி மாட்டுக் கறி வேணுங்கிறாங்க. நம்மாலே அதெல்லாம் முடியுமா?" என்று சிரிக்கிறார்.

"எக்ஸலண்ட்", "ஸோ நைஸ்", "வெரி ஹேப்பி" "ஃபைன்" "சூப்பர்ப்" என்று எல்லா விருந்தினர்களுமே தங்கள் அனுபவம் பற்றி சந்தோஷம் கொப்பளிக்கச் சொல்கிறார்கள்.

அமுதா என்பவரின் வீட்டில் தங்கியிருந்த இரண்டு ஆசிரியைகளான யுவோன் மற்றும் செல்டின் ஆகியோரைச் சந்திக்கச் சென்றோம். அந்தச் சிறிய வீட்டில் ஒரு கயிற்றுக் கட்டிலில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். நாமும் மெய்யப்பனும் சுவரில் சாய்ந்தவாறு தரையில் அமர்ந்ததும் அவர்களும் சடாரென்று கட்டிலை விட்டு இறங்கி தரையில் அமர்ந்து விட்டார்கள். நாங்கள் எவ்வளவோ மறுத்தும் கேட்காமல், "காலை மடக்கி சம்மணம்



ஃபோனிலும் குண்டு!

யாஷ்யா ஐயாஷ் இதுவரை 70 இஸ்ரேலியரைத் தீர்த்துக் கட்டியிருக்கிறான். பல்வேறு விதமான குண்டுகளை காரிலும், கடிதத்திலும் மற்றும் பல இடங்களிலும் வைத்து இஸ்ரேலியரைப் பழிதீர்த்தான். கடைசியில் தன்வினை தன்னைச் சுடும் என்பது போல இவனது செல்லுலர் ஃபோனில் வைக்கப்பட்டிருந்த குட்டி குண்டுக்கு பலியானான். குண்டை வைத்தவர்கள் இஸ்ரேலிய ஐந்தாம் படை என்று கருதப்படுகிறது.

நன்றி : கார்டியன் வீக்லி

போட்டு உட்கார நாங்கள் கற்றுக் கொள்ள வேண்டாமா?'' என்றவாறே அமுதாவைப் பற்றிப் புகழ்ந்து பேச ஆரம்பித்து விட்டார்கள்.

''இந்தியாவில் எல்லா இடங்களிலும் தொற்று வியாதி உண்டு. இந்திய மக்கள் அசுத்தமானவர்கள் என்றுதான் பத்திரிகைகளில் படித்திருந்தோம். நீங்களோ தண்ணீர் குடிக்கும் போது தம்ளரை எச்சில்படுத்தாமல் மேலே தூக்கிக் குடிக்கிறீர்கள். வாசலில் சாணம் தெளித்துக் கோலமிட்டு, வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கிறீர்கள். இவ்வளவு சுகாதாரம் பேணும் உங்களைப் பற்றி நாங்கள் தவறாகப் புரிந்திருந்தோமே'' என்று யுவோனும், செஸ்டினும் கவலைப்பட்டார்கள்.

நமது தேசத்தின் பெருமைகளை அறிந்து அதிசயப்படும் ஸ்வீடன் நாட்டினர், தங்கள் தேசத்தைப் பற்றிய முத்திரையைப் பதிக்கத் தவறுவதில்லை. அமுதா வீட்டிலிருந்து விடைபெறும் சமயத்தில், அவர் குடும்பத்தினருக்கு அழகிய நினைவுப் பொருட்களை யுவோனும் செஸ்டினும் வழங்கும்போது ''இது ஸ்வீடனிலிருந்து உங்களுக்காகக் கொண்டு வந்தது'' என்று ஒவ்வொன்றையும் சொல்லிச் சொல்லிக் கொடுக்கிறார்கள்.

கொல்லிமலை, செம்மேட்டில் நடைபெற்ற ஒரு திருமணத்தில் மணமக்களுக்கு ஸ்வீடன் நாட்டின் வாழ்த்து அட்டைகளையும், தேசியக் கொடியையும் வழங்கி வாழ்த்தினார் ரொனால்டு (59) என்ற இன்னொரு எஞ்ஜினியர். கொஞ்ச நேரத்தில் அந்தக் கொடியை திருமணக் குழுவினர் கையில் பிடித்துக் கொண்டு அரட்டையடித்த தருணத்தில், அந்தக் காட்சியைத் தம் கேமராவில் 'கிளிக்' செய்து கொண்டார். காகிதத்தில் ஆன தம் தேசியக் கொடிகளை போகுமிடமெல்லாம் கையோடு கொண்டு செல்கிறார் ரொனால்டு.

ஒவ்வொரு முறையும் கொல்லிமலை வரும் ஸ்வீடன் நாட்டு குழுவினர்க்கு மலைப் பகுதிகளை சுற்றிக் காட்டுபவர் செம்மேடு சுகாதார ஆய்வாளர் சீனிவாசன். "ஸ்வீடன் மக்கள் ஸ்வீட்டானவர்கள். எந்த வசதியும் இல்லாத குடிசையிலும் சந்தோஷமாக தங்குகிறார்கள். கிடைப்பதை முகம் சுளிக்காமல் சாப்பிடுகிறார்கள். வார்த்தைக்கு வார்த்தை நன்றி சொல்கிறார்கள். ரெண்டு கை சேர்த்து அவர்கள் வணக்கம் வைப்பது கண்டு எங்கள் மக்கள் ரொம்ப சந்தோஷப்படுகிறார்கள்'' என்று புகழாரம் சூட்டுகிறார்.

கொல்லிமலையின் மூலை முடுக்கெல்லாம் சென்று மருத்துவ உதவி அளிக்கும் சீனிவாசனுக்கு முன்பு வந்திருந்த ஒரு குழு பல்வேறு மருத்துவ உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கியிருக்கிறது.

வந்தோம், பார்த்தோம், சென்றோம்... என்றில்லாமல் இந்த மக்களோடு ஒரு நிரந்தரப் பிணைப்பை, 'பாரத் தர்ஷன்' சுற்றுலா உருவாக்கி விடுகிறது.

இந்த சுற்றுலாத் திட்டத்தில், அங்கங்கே குடும்பங்களில் தங்க வைப்பதால், மக்களோடு பழகி நிஜமான இந்திய வாழ்க்கை முறையை அறிந்துகொள்ள முடிவதோடு, செலவும் குறைகிறது. இந்திய ரூபாய் மதிப்பில் ஒரு நபருக்கு ஒரு லட்சம் செலவாகக் கூடிய இந்தச் சுற்றுலா ரூ. 60,000த்தில் முடிந்து விடுகிறது. எதிர்பார்த்ததை விட அதிகப் பணம் அவர்களுக்குக் கையில் மிஞ்சுகிறது. இவர்களின் அனுபவத்தைக் கேட்டவர்கள் கிறிஸ்டியன் யூத்விக் மூலம் இங்கு வருகிறார்கள் என்கிறார் இரா. மெய்யப்பன்.

பல தடைகளையும் மீறி இந்தத் தேசத்தின் பெருமைகளைப் பரப்பும் மெய்யப்பனின் தூய்மையான அன்புக்கு இங்கு வரும் எல்லோருமே அடிமைகளாகி விடுகிறார்கள்.

''உன் இரண்டு மகன்களிடம் சொல். ஸ்வீடனில் அவர்களின் தாத்தா, பாட்டி இருக்கிறார்கள்'' என்று நாத் தழுதழுக்கக் கூறி விமானம் ஏறிய பிரிட்டா (73) என்பவரைப் பற்றி நெகிழ்ச்சியோடு குறிப்பிடுகிறார் இந்தக் கலாசார தூதர்.

அடுத்து மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து நாடுகளில் நமது தேசத்தின் புகழ்பரப்ப தயாராகிக் கொண்டிருக்கிறார் இந்த இனிய இளைஞர்.

- மு. சிவலிங்கம்

புகைப்படங்கள் : ஆதித் கம்யூனிகேஷன்ஸ்

“நிறைய செய்யவில்லை... நிறைவாகச் செய்கிறேன்!”

கோடம்பாக்கம் வட்டாரத்தில் ‘துணிச்சலான நடிகை’ என்றால் துணியைக் குறைக்கத் தயங்காதவர் என்று அர்த்தம். இன்னொரு அர்த்தமாக, ‘துணியைக் குறைக்கச் சொல்பவர்களைத் துரத்தி விடுகிற நடிகை’ என்று பெயர் வாங்கி இருப்பவர் சங்கீதா.

சமீப காலமாக (பார்த்திபனின் ‘சரிகமபதநீ’க்குப் பிறகு) பெரிய நடிகர்கள் விரும்பி, உடன் நடிக்கக் கோருமளவுக்கு சங்கீதா அசுர வளர்ச்சி அடைந்திருக்கிறார் நடிப்பில். பெரும்பாலும் படங்களில் புடைவையைத் தவிர வேறெதும் இவர் உடுத்துவதில்லை. அதிக மேக்–அப் இல்லை. அலட்டல் இல்லை. சமீபத்தில் பத்தாவது முடித்து விட்டு, பிளஸ்டூவுடன் மல்லுக்கு நிற்பதாக (வயசு விஷயத்தில்) கொஞ்சம் அழகுப் பொய் சொன்னாலும் வெள்ளையாகப் பேசுகிறார்; வேறெதையும் மறைக்காமல். பேட்டியிலிருந்து:

“கவர்ச்சிப் புயல்களுக்கு நடுவே இப்படிப் புடைவை கட்டிக் கொண்டு காலம் தள்ளுவது ரொம்ப சிரமமாக இருக்குமே?”

“சிரமம் என்ன? அவர்கள் படங்கள் அவர்களுக்கு. என் படங்கள் எனக்கு. நிறைய படங்களின் பெயர்களை அடுக்க முடியாது தான் என்னால். ஆனால் நிறைவாகச் செய்ய முடிகிறதே?”

“எல்லோரும் ஆரம்பகாலத்தில், ‘கவர்ச்சியாக நடிக்கமாட்டேன்’ என்று தான் சொல்கிறார்கள். ஆனால் பின்னால் மாறிவிடுகிறார்கள். நீங்கள் எப்படி? நிரந்தர எதிரியாக இருக்கும் எண்ணமா? அல்லது...”

“ஐயோ, ஒரு விஷயம் தெளிவு படுத்தி விடுகிறேன். எனக்கு கவர்ச்சியே பிடிக்காது என்பதல்ல... அது தப்பு என்றும் சொல்ல மாட்டேன். ரோஜாவையும் குஷ்புவையும் நான் மிகவும் ரசிப்பேன். அவர்கள் கவர்ச்சியாக நடிப்பவர்கள் தானே? விஷயம் என்னவென்றால், என்னை கவர்ச்சி காட்டச் சொன்னால் நான் தயக்கம் வந்து விடுகிறது. என் இயல்பான கூச்சம், வளர்ந்த விதம், குடும்பச் சூழல் காரணமாக இருக்கலாம். நான் ஆரம்பத்திலிருந்தே தீர்மானமாக மறுத்து வந்ததாலோ என்னவோ, எனக்கு வரும் கேரக்டர்கள் எல்லாம் இப்போது குடும்பப் பாங்கானதாகவே இருக்கின்றன.”

“குடும்பப் பாங்காக நடித்தாலும் கனவுக் காட்சி என்று ஒன்று இருக்கிறதே? அதில், வயிற்றில் பம்பரம் விடுவது, ஆம்லெட் பொரிப்பது என்று கவர்ச்சியைக் கொண்டு வந்து விடுவார்களே?”

“என்னைப் பொறுத்தவரை இந்த பம்பரம், ஆம்லெட் போன்ற காட்சிகளுக்கெல்லாம் கூட என் பதில் ‘நோ’ தான்! கவர்ச்சி, எந்த வகையில் திணிக்கப்பட்டாலும் நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்!”

“கதை போன்ற விஷயங்களில் கூட நிறைய கண்டிஷன் போடுகிறீர்களாமே?”

“பாருங்கள், நீங்கள் ஒரு படம் எடுக்கிறீர்கள். நான் அதில் நடிக்கிறேன். உங்களுக்கு ஒரு கருத்து இருக்கும்– படம் குறித்து. எனக்கு வேறு விதமாக இருக்கலாம் அல்லவா! பேசித்





தொழிலாளி ஒருவன் தன் மனைவிக்கு புதுப் புடைவை ஒன்று வாங்கிக் கொடுத்தான். மனைவி ஆசையோடு அந்தப் புடைவையை உடுத்திக் கொண்டு அக்கம் பக்கம் தெரிந்தவர்கள் வீடுகளுக்கு சென்றாள். ''புடைவை என்ன விலை? நல்லா இருக்கிறதே?'' என்று ஒருவராவது அவளைப் பார்த்துக் கேட்கவில்லை. பொறுத்துப் பொறுத்துப் பார்த்தாள். ''தாகமாக இருக்கிறது. புதுப்புடைவை கட்டினால் தாகம் எடுக்கும் போலிருக்கிறது. தண்ணீர் தாங்க'' என்று ஒவ்வொரு வீட்டிலும் சொல்லி, தண்ணீர் வாங்கிக் குடித்தாள்!

'தமிழக கிராமியக் கதைகள்' நூலிலிருந்து

– வயலூர் ஆர். பார்த்திபன்

தீர்க்கப் பார்ப்பேன். நியாயம் எதுவோ அதை ஏற்பேன். சமயங்களில், என் கருத்து சரியாக இருந்து, பிறர் அதை ஏற்க மறுக்கிற சூழல் வரும் வரும்போது, 'இதில் விட்டு விடுங்கள். அடுத்த படத்தில் பார்த்துக் கொள்ளலாம்' என்று திருப்பி அனுப்பி விடுவேன். ஒத்த கருத்து இல்லாமல் இணைந்து பணியாற்றுவது சிவி மாலில் மிக சிரமம்.''

''ஆனால் நெகடிவ் பாபுலாரிட்டிக் காகத் தான் சங்கீதா இதுபோல் செய்வதாகச் சிலர் சொல்கிறார்கள்.''

''சிரிப்புதான் வருகிறது. அதெல்லாம் இல்லை.''

''பார்க்க, சின்னப்பெண்ணாகத்தான் தெரிகிறீர்கள். குடும்பப் பெண் வேடத்தி லேயே தொடர்ந்து நடிப்பது போரடிக்க வில்லையா?''

''அப்படித்தான் எனக்கான கேரக்டர்களை அமைக்கிறார்கள். என்ன செய்வது? இப்போது 'பூவே உனக்காக'வில் கடிதார் போட்டு நடித் திருக்கிறேன். போய்ப் பாருங்கள். எனக்கே அது மிக வித்தியாசமான அனுபவம்!''

''பாத்திரங்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமையெல்லாம் நடிகைகளுக்கு இப்போது கிடையாது...''

''எனக்கு இருக்கிறது! நிறையப் பேர் கதை சொல்கிறார்கள். பிடித்தால் செய்கிறேன். இல்லாவிட்டால் திருப்பி அனுப்பி விடுவேன்.''

''அப்படித் தேர்ந்தெடுத்தும், 'சிதனம்' மாதிரி ஒரு படமா?''

''படம் ஓடுவதும் ஓடாததும் நம் கையில் இல்லை. சுந்தர்ராஜன், அந்தப் படத்தின் கதையை என்னிடம் சொன்னபோது நன்றாகத் தான் இருந்தது. பிரபுவுடன் நடிக்கும் முதல் படம் வேறு என்பதால் மிகவும் எதிர்பார்த் தேன். ஆனால் படம் படுத்து விட்டபோதிலும் என் கேரக்டர் நன்றாக இருந்ததாகவே சொன் னார்கள்.''

'' 'சாவித்ரி போல, சரோஜா தேவி போல' என்றெல்லாம் நடிகைகள் நடிக்க விரும்பு வதாகச் சொல்கிறார்கள். நீங்கள் எப்படி?''

''ரோல் மாடலெல்லாம் எனக்கு யாரும் இல்லை. இயக்குநர்கள் கேட்கிறபடி செய்வது டன் சரி. வி.சேகர், 'எமோஷனலா நடி' என் பார். விக்ரமனோ, 'ஐயய்யோ, இவ்வளோவெல் லாம் வேணாம். கேஷுவலா வந்துட்டுப் போ' என்பார். ரொம்ப கஷ்டப் பட்டது 'சரிகம பதநி'யில். ஒரு மாதிரி மனநிலை பாதிக்கப்பட்ட கேரக்டர் அது. பிடிபட ரொம்ப சிரமப்பட் டேன்.''

''நிறைய படங்கள் இல்லை என்பதை ஒப்புக் கொள்கிறீர்கள். பொழுது போக என்ன செய்வீர்கள்?''

''சொன்னேனில்லையா? பிளஸ் டூ பிரை வேட்டாகப் படிக்கிறேன். சும்மா சொல்லிக் கொள்ளத்தான்! எங்கே படிப்பு ஏறுகிறது? ஷட்டில் விளையாடுவேன். நன்றாகத் தூங்கு வேன்.''

''சமீபத்தில் ஏதாவது படம் பார்த்தீர் களா?''

''டிவியில் நிறைய பார்ப்பேன். சமீபத்தில் தியேட்டருக்குப் போய்ப் பார்த்தது, 'அம்மன்'. 'நல்ல படம்' என்று பலரும் சொன்னார்கள். ஆனால் 'இத்தனை நன்றாக இருக்கும்' என்று நினைக்கவில்லை. ரம்யாகிருஷ்ணனின் காஸ்ட் யூம்கள் அட்டகாசம்.''

விடைபெறும் முன் சங்கீதா தற்போது நடித்துக் கொண்டிருக்கும் 'காலம் மாறிப் போச்சு' படம் பற்றி ஒரு வரி சொன்னார்:

''இதுவரை நான் நடித்த படங்களில் எனக் கென உருவாக்கப்பட்ட கேரக்டர்களின் குணாதி சயங்களில் குடி இருந்தேன். இந்தப் படத்தில் ஒரிஜினல் சங்கீதாவைப் பார்க்கலாம்!''

– **துளசி**

அட்டை வண்ணப்படம், படம் : **யோகா**

● காலம் சென்ற டென்னிஸ் ஆட்டக்காரர் பால் எட்டிங்டன் தமது கோமாளித் தனங்களால் ரசிகர்களை மகிழ்வித்தவர். ஒருமுறை தன் டென்னிஸ் பார்ட்னராக ஒரு கழுதையை வைத்துக் கொண்டு விளையாடி 'வெற்றி'யும் பெற்றார். தன் கைகளில் விலங்கு மாட்டிக் கொண்டு ஆடி வெற்றி பெற்றுள்ளார்!

ஆதாரம் : த வீக் | தகவல் : எஸ். ஆலன்

10. பொற்பேழை

இரவின் குளிர்ந்த தென்றலுக்குக்கூட துறவியார் உச்சரித்த 'இந்திர தனுசு' என்ற பெயர் திகைப்பை அளித்திருக்க வேண்டும். உப்பரிகையை அடுத்து நீண்ட தாழ்வரையில் சற்று நேரம் தயங்கி நின்ற காற்று, மேற்கொண்டு துறவியார் ஏதும் பேசாமல் விழிகளை அரைவாசி மூடி நிஷ்டையில் ஆழ்ந்து விட்டதால் மெள்ள சீலையை நகர்த்திவிட்டு அந்த அறைக்குள் புகுந்து மறைந்தது.

அகன்ற நெற்றிக்குக் குறுக்கே ஓடிய பச்சை நரம்பு, இலேசாகப் புடைத்து நிற்க, அந்த இரவிலும் பனிச்சிட்ட நீறு சற்றே கருங்கி துறவியாரின் சித்தம் கனவேகத்தில் ஓடிக் கொண்டிருந்ததை உணர்த்தியது. ஆதித்யன் அவர் நிஷ்டையில் குறுக்கிட மனமின்றி மௌனமாகவே காத்திருந்தான்.

நீண்ட நேரம் கழித்து விழிகளைத் திறந்து ஆதித்யனை ஏறிட்டார் அவர். "ஆதித்யா, சோழ அரசை ஸ்தாபித்த முதலாம் பராந்தகனின் தந்தை முதல் ஆதித்த சோழர் தில்லை சிற்றம்பலத்தைப் பொன்னம்பலமாக்கியபோது அத்தனை பொன்னும் எங்கிருந்து கிடைத்தது என்பதை அறிவாயா?" என்று வினவினார்.

ஆதித்யன் இல்லையென்பதற்கடையாளமாகத் தலையசைத்தான்.

"கொங்கு நாட்டின் செல்வத்துக்கும் செழிப்புக்கும் மூலதனமாக இருப்பது எதுவென்பது தெரியுமா?"



துறவியாரின் அடுத்த கேள்வியும் உடனே வந்தது.

ஆதித்யன் மீண்டும் மௌனமாகத் தலையசைத்தான்.

"தெற்கில் சோழரும் வடக்கில் காகதீயரும் மேற்கில் போசளரும் நெருங்கினாலும் காடவ மன்னன் கோப்பெருஞ்சிங்கனை இன்னும் அடக்க இயலாததற்குக் காரணத்தை அறிவாயா?"– துறவியாரின் இந்தக் கேள்விக்கும் விடை ஆதித்யனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

"இத்தனை கேள்விகளுக்கும் ஒரே ஒரு பதில் இருக்கிறது ஆதித்யா. அது இந்திர தனுசு. நூறு ஆண்டுகளுக்கு மேல் மறைக்கப்பட்டு விட்ட ரகசியம் அது" என்ற துறவியார், உப்பரிகையை விட்டுத் திரும்பி, "ஆதித்யா, வா என்னுடன்" என்று அழைத்தபடியே அறைக்குள் நுழைந்தார்.

விஷ்வக்சேனன்

மீண்டும் அறைக்குள் நுழைந்த ஆதித்யனுக்கு முதலில் எழுந்த சந்தேகம் மீண்டும் தோன்றவே, "துறவியாரே இது மன்னரின் அறையாகத் தெரிகிறது" என்றான்.

முன்னால் சென்ற துறவியார் திரும்பிப் பாராமலே அனாயாசமாக பதில் சொன்னார்; "ஆம் ஆதித்யா, இது சோழ ராஜேந்திரனின் சயன அறை."

"மன்னர் இங்கு தங்குவதில்லையா?" ஆதித்யனின் அடுத்த கேள்விக்கும் அதே வேகத்தில் பதில் வந்தது துறவியாரிடமிருந்து.

"இல்லை ஆதித்யா. மன்னர் இப்போதெல்லாம் தில்லையம்பலத்திலேயே பழியாய்க் கிடக்



இந்திர குகை

கிறார். இரு மகாராணிகளும் கூட தில்லையின் மாளிகையிலேயே இருக்கிறார்கள்''- வார்த்தைகளை உதிர்த்தபடியே அறையின் ஒரு மூலைக்கு வந்த துறவியார், அங்கிருந்த உயரமான பாவை விளக்கைச் சற்று நகர்த்திவிட்டு சிலையை விலக்கினார். மன்னரின் பஞ்சணையைச் சுற்றி வந்து அருகில் நெருங்கிய ஆதித்யன், அங்கு [illegible] சுவரோடு பதிக்கப்பட்டிருந்த கதவு ஒன்று இருப்பதைக் கவனித்தான். எங்கிருந்தோ தம் கரத்தில் தோன்றிய திறவுகோலினால் அதைத் திறக்க முற்பட்டார் துறவியார்.

கதவு திறந்ததும் நெடு நாட்களாகப் பூட்டி வைத்திருந்ததால் உண்டான ஒரு வித நெடி இருவரையும் தாக்கியது. அருகிலிருந்த பந்தமொன்றை விளக்கின் உதவியால் பற்ற வைத்த துறவியார், அந்தக் கதவின் வழியே உள்ளே நுழைந்தார். சிறு அறையொன்றின் மறுபுறத்திலிருந்து படிகள் கீழே இறங்கின. துறவியார் வெகு வேகமாக அவற்றில் இறங்க ஆரம்பித்து சற்றே திரும்பி, "ஆதித்யா, கவனமாக இறங்கி வா, படிகள் சற்று நெருக்கமாக அமைக்கப்பட்டிருக்கின்றன'' என்று அவனை எச்சரித்தார். கருங்கல்லால் அமைக்கப்பட்ட அந்தப் படிகள் சுழன்று சுழன்று இறங்கிக் கொண்டேயிருந்தன. வெகு நேரம் ஆனபிறகும் படிகள் இன்னும் முடியாததையும் சுற்றிச் சுற்றி அவற்றில் தொடர்ந்து இறங்கியதால் தலை சுழலும் ஸ்திதிக்கு வரத் தொடங்கிவிட்டதையும் உணர்ந்த ஆதித்யன், இந்தப் படிகள் நிச்சயம் பாதாள உலகத்திற்குச் செல்லும் படிகளாயிருக்க வேண்டும் என்றே தீர்மானித்தான்.

துறவியார் எதையும் லட்சியம் செய்யாமல் வேகமாக இறங்கியபடியே இருந்தார். ஆதித்யன் ஏறக்குறைய மயங்கி விழுந்து விடும் நிலைக்கு வந்தபோது, படிகள் சட்டென்று



அருள் வாக்கு

புராணங்களில் வெறும் கற்பனையும் எங்காவது இருக்கலாம்தான். பிற்காலத்தவர்கள் இடைச் செருகலாக (interpolation) சிலதை நுழைத்து விட்டும் இருக்கலாம். ஆனால் எது வெறும் கற்பனை, எது இடைச் செருகல், எது மூல ரூபம் என்று யார் நிர்ணயிப்பது? அவரவரும் தங்களுக்கு இடைச் செருகலாகத் தோன்றுவதை நீக்கி விடுவது என்று ஆரம்பித்தால் அத்தனை கதைகளும் போய் விடும். மூலக் கதையென்றே ஒன்று நிற்காது. அதனால் சில தப்புக்கள், கோளாறுகள் இருப்பதாகத் தோன்றினாலும்கூட இன்றைக்கு நம் கைக்கு எந்த ரூபத்தில் புராணங்கள் வந்திருக்கின்றனவோ அதை அப்படியே வைத்து ரக்ஷிக்கத்தான் வேண்டும்.

அதிலே ஏதாவது கட்டுக்கதை இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும். அது நம் மனஸை பகவானிடம் கொண்டு போய் விட்டு சாந்தப்படுத்துகிறதோ இல்லையோ? கடைக்கு ஒரு பண்டம் வாங்கப் போகிறோம். நல்ல சரக்காகக் கிடைக்கிறது. நம் உத்தேசம் பூர்த்தியாகி விட்டது என்று ஸந்தோஷப்படுவதா, அல்லது கடையில் இன்ன குறை இருந்தது, கடைக்காரனிடம் இன்ன தோஷம் இருந்தது என்று சொல்லி அதிருப்தி படுவதா? பூகோள-ககோள (வான் இயல்) வர்ணனைகள், மன் வந்தரம் முதலான கால வர்ணனைகள் எங்கேயாவது தப்பிப் போனால்தான் போகட்டுமே! இதையெல்லாம் தெரிந்து கொள்ளத்தான் ஜாகரஃபியும் அஸ்ட்ரானமியும் ஹிஸ்டரியும் இருக்கிறதே! ஜாகரஃபியிலும் ஹிஸ்டரியிலும் அஸ்ட்ரானமியிலும் கொடுக்க முடியாத பரமாத்ம தத்துவத்தை, பக்தியை, தர்மத்தைச் சொல்கிற லக்ஷ்யத்தைப் புராணம் பூர்த்தி பண்ணுகிறதோ இல்லையோ?

- ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

முடிவடைந்து அவன் எதிரில் பெரும் மண்டபம் ஒன்று எழுந்தது. மண்டபத்தின் உள்ளே நுழைந்த ஆதித்யன், வாழ்நாளில் அதுவரை கண்டறியாத காட்சியொன்று தன் கண்களின் முன்பு தோன்றுவதை உணர்ந்தான்.

துறவியார் கரத்திலிருந்த பந்தத்தின் உதவியுடன் உள்ளே தொங்கிக் கொண்டிருந்த இரண்டொரு சர விளக்குகளை ஏற்றியதும் அந்தக் காட்சி இன்னும் தெளிவாக விரிந்தது. பிரமிப்பில் அப்படியே அடித்து வைத்த சிலையாக நின்றான் ஆதித்யன். பொன்னும் மணியும் முத்துக்களும் கற்கள் பதிக்கப்பட்ட ஆபரணங்களும் குறுவாட்களும் மகுடங்களும் பதுமைகளும் பெரும் ரத்தினங்கள் இழைக்கப்பட்ட ஒரு சிம்மாசனமும் இன்னும் என்னவென்றே விளங்காத பல பொக்கிஷங்களும் அந்தப் பெரும் மண்டபத்தில் நிறைந்து கிடந்தன. சரவிளக்குகளின் ஒளியில் தான் கண்டது ஒரு பகுதியே என்பதையும் அந்த மண்டபம் இன்னும் நீண்டுகிடப்பதையும் பார்த்தவனது பிரமிப்பு உச்சத்தை எட்டியது.

துறவியாரது வேகநடை, அந்த மண்டபத்தினுள் நுழைந்த பின்பும் நிற்கவில்லை. மண்டபத்தின் மறுகோடி வரையில் விறுவிறுவென்று நடந்தவர் சட்டென்று நின்றார். அவரது பார்வை எதிரே தெரிந்த வேலைப்பாடமைந்த பெரும் கதவின் மேல் புறம், சுவரில் மாட்டப்பட்டிருந்த ஒரு வாளின் மீது நிலைத்தது.

துறவியார் சட்டென்று நின்றதையும் அவர் பார்வை பாய்ந்து நிலைத்த இடத்தையும் கவனித்தான் ஆதித்யன். அந்த வாளையும் பெரும் ஏக்கம் படரத் தொடங்கிய அவர் முகத்தையும் கவனித்தபடி நின்றான். வாளின் உறையிலிருந்த வேலைப்பாடுகள் கண்களைக் கவர்ந்தன. அசாத்திய நீளமாயிருந்த அந்த வாளின் பிடியில் கற்கள் பதிக்கப்பட்ட புலிச் சின்னம் பந்தத்தின் ஒளியில் சிவந்து ஜொலித்தது.

அந்த நீண்ட வாளை உற்றுப் பார்த்தபடி நின்ற துறவியாரிடமிருந்து உதிர்ந்த சொற்களில், பெரும் ஏக்கமும் பெருமையும் கலந்து ஒலித்தன.

"ஆதித்யா, இது சாளுக்கிய எல்லை முதல் குமரி வரையில் சோழர் புலிக்கொடியைப் பறக்க விட்ட முதற் குலோத்துங்களின் வாள். இது உயர்த்தப்பட்ட இடத்திலெல்லாம் பெரும் வெற்றியையே தேடித்தந்தது. இதைக் கண்டு சாளுக்கிய நாடும் கலிங்கமும் ஈழமும் நடுங்கியது. ஆனால்..." துறவியாரின் சொற்கள் பாதியில் நின்றன.

"ஆனால் என்ன துறவியாரே?"

துறவியாரின் முகத்தில் பெரும் சோகம் படர்ந்தது. "இப்போது இதைத் தொடக்கூட எந்த சோழ வீரனுக்கும், சோழ வீரன் என்ன, சோழ மன்னனுக்கும் அருகதை கிடையாது."

இதைச் சொன்ன அவர் குரலிலும் பெரும் சோகம் ஒலித்தது.

அடுத்து நீண்ட பெருமூச்சொன்றை வெளியிட்ட துறவியார், "சரி ஆதித்யா, வா என்னுடன்" என்றபடியே எதிரேயிருந்த கதவைத் திறந்து உள்ளே நுழைந்தார்.

அடுத்து தென்பட்ட அறை, நல்ல விசாலமாயிருந்தது. தந்தத்தாலும், மரத்தாலும், பொன்னாலும் செய்யப்பட்ட, சிறியதும் பெரியதுமான பல பேழைகள் அங்குகிடந்தன. அந்தப் பேழைகளின் மீதும், பக்கங்களில் நின்ற மர அடுக்குகளின்மீதும் ஓலைச் சுவடிகள் பல இறைந்து கிடந்தன. உள்ளே நுழைந்த துறவியார் பந்தத்தின் ஒளியில் பேழைகளைத் திறந்து பார்ப்பதும், ஓரிரு ஓலைகளைப் புரட்டிப் படிப்பதுமாக எதையோ தேட ஆரம்பித்தார். அவர் தேடுவது எதையென்று புரியாத ஆதித்யன் மண்டபத்திலிருந்து இரு சரவிளக்குகளைக் கொண்டு வந்து அறைக்குள் பொருத்தினான். அறையெங்கும் தாராளமாகப் பரவிய ஒளியில் நீண்ட நேரம் தேடிய துறவியாருக்கு அவர் தேடியது இறுதியாக, அறையின் மூலையிலிருந்து கிடைத்தது. சுத்தமான பொன்னால் செய்யப்பட்ட பேழையொன்றை எடுத்துக் கொண்டு சரவிளக்கின் அருகில் வந்து நின்ற துறவியாரின் பெரு விழிகள் பொன்னை விட அதிகமாக மின்னின. தமது காவி வஸ்திரத்தின் ஒரு பகுதியால் அந்தப் பேழையைத் துடைத்தவர், அதை விளக்கின் அருகில் மெள்ளக் கொண்டு போனார். அந்தப் பேழையின் மீது, ஏதோ எழுதியிருப்பதைக் விளக்கொளியில் கண்ட ஆதித்தன், அருகில் நெருங்கி உற்றுக் கவனித்தான். அடுத்து வியப்பு தொனித்த குரலில் அதன் மீதிருந்ததைச் சற்று உரக்கவே படித்தான்– "இந்திர தனுசு" என்று.

தொடர்ந்து இந்திர தனுசைப் பற்றி துறவியார் விளக்க விளக்க, திகைப்பில் உறைந்த ஆதித்யன், கொங்கு மன்னனும் இளவரசியும் எத்தகைய செல்வத்தை இழந்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டது மட்டுமின்றி அதை எப்படியும் மீட்பது என்றும் தீர்மானித்தான்.

திகைப்பும் வைராக்கியமும் மாறாமல் ஆதித்யன் உணர்ச்சி வசப்பட்டு நின்ற அதே நேரத்தில் கொங்கு நாட்டு இளவரசி உண்மையில் தன் உயிரையே இழந்து விடக் கூடிய நிலையிலிருந்தாள். ஆதித்யனோ, உத்தமபாளையத்து நந்தவனத்திலிருந்து சூரிய காங்கேயனால் அபகரிக்கப்பட்டவளின் நிலையை அறியாதவனாக இருந்தான்.

கொங்கு நாட்டின் தலைநகரான ஸ்காந்தபுரத்தின் அரண்மனை. அதில் மன்னன் அவந்தனின் அறையிலிருந்த பஞ்சணையில்

'சுருக் நறுக்' என்றொரு சொல்லோவியம் - 22

நாடகம் என்பது...

மேடையில் நடப்பது மட்டுமா நாடகம்? சட்டசபையில் நடக்கிறது. கோர்ட்டில் நடக்கிறது. எலெக்ஷன் வரும்போது எப்படி எப்படியோ நடக்கிறது!

உங்கள் கணிப்பில் நாடகம் என்பது என்ன? சுருக்கென்று ஒரு சிறந்த சொல்லோவியம் தீட்டி ரூ. 50/- பரிசு பெறுங்கள். இன்னும் நாலு வாரங்கள் தான். அதிக முறை ஐம்பது ரூபாய் வாங்கி, டைடன் கடிகாரங்களை மெகா பரிசாகப் பெறப்போகிற அதிர்ஷ்டசாலி உங்களில் யார்?

முடிவு தேதி : 18.3.96

ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

–ஆர்.

நாடகம் என்பது : ....

....

....

....

....

பெயர் : ....

முகவரி : ....

....

....

....

''நம்ம தலைவர் வீட்டு வாசல்ல, உண்மை'ன்னு பெரிசா எழுதி 'ஃபோகஸ் லைட்' போட்டு வெச்சிருக்கே, எதுக்கு?''

'' 'உண்மையை வெளிச்சம் போட்டுக் காட்டுவேன்'னு தலைவர், மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றத்தான்.''

– ஜெயாப்ரியன்



துவண்டு கிடந்தாள் இளவரசி பூங்கோதை. தடாகத்திலிருந்து பறித்து எறியப்பட்ட தாமரைக் கொடியைப் போல வதங்கிப் போயிருந்தாள்.

அந்த அரண்மனைக்கு அவள் கொண்டு வரப்பட்டு முழுதாக ஒரு தினம் ஓடிவிட்ட பிறகும் மூடிக்கிடந்த மலர் விழிகள் திறக்க வேயில்லை. சிவந்த தாமரையின் நிறத்தைப் பெற்றிருக்கும் அழகிய முகம் வெளுத்துப் போய், வெள்ளகத்திப் புஷ்பமாகவே தெரிந்தது. சற்றைக்கொரு தரம் மிகுந்த சிரமத்துடன் பெரிதாக வந்த மூச்சும் மெள்ள மெள்ள அடங்கிக் கொண்டிருந்த அதன் வேகமும் அவள் முடிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை உணர்த்தின.

பஞ்சணைக்குச் சற்றுத் தள்ளியிருந்த இருக்கையில் அமர்ந்து அவளையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்த மன்னன் அவந்தனின் முகத்தில், வாழ்நாளில் அதுவரை கண்டறியாத சோகம் படர்ந்து கிடந்தது. வயதும் கவலைகளும் அளித்த பரிசுகளாகத் தலையில் தென்பட்டன, ஓரிரு நரைகள். அந்த முகத்திலிருந்த களையும் கண்களில் தெரிந்த ஒருவித கவர்ச்சியும் ஒரு காலத்தில் மன்னாதி மன்னர்களையெல்லாம் விடுத்து சோழ இளவரசி அவனிடம் மயங்கியதற்குக் காரணமிருக்கிறது என்பதைப் புலப்படுத்திக் கொண்டிருந்தன.

அரண்மனைக்குள் நுழைந்து கொண்டிருந்த மருத்துவரைக் கண்டதும் அவர்களின் முகம் சற்று மாறியது.

இருக்கையை விட்டு எழுந்தவன், வேகமாக மருத்துவரை நோக்கிச் சென்றான். அவர் நெருங்குமுன்பே ஒலித்த அவன் குரலில், கவலையும் பதற்றமும் கலந்திருந்தது. ''மருத்துவரே, சீக்கிரமாக வாரும். வந்து என் மகளைச் சற்று கவனியும்.''

மருத்துவர் முகத்தில் வியப்பு தெரிந்தது. "என்ன? இளவரசியார் வந்திருக்கிறாரா? என்ன அவருக்கு?''- கேட்ட மருத்துவர் திரும்பி அருகில் உடன் வந்து கொண்டிருந்த போசள வீரனை எரித்து விடுவது போலப் பார்த்தார். "என்ன செய்தீர்கள் இளவரசியாரை?" என்ற அவர் கேள்வியும் கடுமையுடன் வந்தது.

அந்த வீரனின் பதில் சற்று நடுக்கத்துடனேயே வெளிப்பட்டது. ''மருத்துவரே, உங்களை அழைத்து வரும்படிதான் தலைவர் உத்தரவு. மற்ற விவரங்கள் ஏதும் எனக்குத் தெரியாது.''

மன்னன் குரல் குறுக்கிட்டது. "மருத்துவரே, உங்கள் விசாரணையைப் பிறகு வைத்துக் கொள்ளலாம். முதலில் வந்து என் மகளைக் கவனியுங்கள்" என்றான் மன்னன் கெஞ்சும் குரலில்.


விறுவிறுவென்று பஞ்சணைக்கு அருகில் வந்து நின்ற அந்த கொங்கு நாட்டு மருத்துவரின் முகத்தில் திகைப்பும் வியப்பும் கவலையும் அச்சமும் மாறிமாறித் தோன்றின. 'சிறுமியாகத் தாம் பார்த்திருந்த இளவரசியை இயற்கை எப்படி செப்பனிட்டிருக்கிறது!' என்று உள்ளுக்குள் வியந்த மருத்துவர், வாழைத்தண்டு போல செயலற்றுக் கிடந்த அவள் கரத்தைப் பிடித்து, நாடியை உற்றுக் கவனித்தார். அடுத்து அவள் விழிகளின் இமையை உயர்த்தி உட்புறத்தையும் அவள் பேச்சையும் கவனித்தவர் முகத்தில் கவலை படர்ந்தது. அடுத்து ஒலித்த அவர் குரலில் நடுக்கம் புலப்பட்டது.

''மன்னவா, இளவரசியாருக்கு மிகக் கடுமையான விஷம் அளிக்கப்பட்டிருக்கிறது. விஷப் புகையால் சுவாச உறுப்புக்கள் முழுவதுமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. இதே நிலை நீடித்தால் நாளை உச்சிப் பொழுதுக்குள் அவர் மூச்சு முழுவதுமாக நின்று விடும்" என்றார் மருத்துவர்.

மருத்துவரின் வார்த்தைகள் மன்னனை மட்டுமின்றி அந்த அறைக்குள் வேகமாக நுழைந்து கொண்டிருந்த சூரிய காங்கேயனையும் திடுக்கிட வைத்தன.

அவனை நோக்கித் திரும்பிய மன்னனது பார்வையில் கொலைக்குறி தென்பட்டது. மஞ்சத்தினடியில் அதுவரை மறைந்து கிடந்த குறுவாள் மன்னனின் கரத்தில் தோன்றியது. அதை காங்கேயன் மீது எறிந்துவிட வேகத்துடன் அக்கரம் உயரவும் செய்தது.

(தொடரும்)





1996 மார்ச் 10
யுவ மாசி 27
மலர் : 54
இதழ் : 32

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




‘மேக் அப்’ போடுகிறார் இந்திரகுமாரி!

“கறையில்லாத கரம்,களங்கமில்லாத நெஞ்சம், மக்கள் சேவையே மகேசன் சேவை எனத் தம் வாழ்வை அர்ப்பணித்தவர் புரட்சித் தலைவி... நீதி, நேர்மை அவர் தாரக மந்திரம்...” - ஜெயலலிதாவுக்கு அமைச்சர் இந்திரகுமாரி பாடியிருக்கும் புகழ்மாலை இது. புலவர் பட்டம் பெற்றவருக்குச் சொல்லியா தரவேண்டும்!

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் ஐம்பது கோடி ரூபாய் ஊழலை மறுக்க, அமைச்சர் இவ்வாறு வார்த்தைகளால் கோட்டை கட்டி முடித்த கையோடு, சென்னை உயர்நீதி மன்றம் ஒரு பெரிய குண்டைத் தூக்கிப் போட்டு அதைத் தகர்த்து நொறுக்கியிருக்கிறது.

ஜவகர் ரோஜ்கர் யோஜனா என்ற மத்திய அரசின் சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ், தமிழக அரசு பெற்றுவரும் நிதி, தாறுமாறாகக் கையாடப்பட்டு வந்தது. அதற்கு ஒத்துழைக்க மறுத்த மதுரை கூடுதல் கலெக்டர் உமாசங்கர், பதவி மாற்றம் செய்யப்பட்டார். தம்மை அவ்வாறு மாற்றல் செய்ததை எதிர்த்து, மத்திய நிர்வாக ட்ரிப்யூனலிடம் மனு செய்தார் உமாசங்கர்.

உமாசங்கரின் மனுவை சென்னை உயர்நீதி மன்றத்தின் கவனத்துக்குக்



கொண்டு வந்து, இவ்விஷயத்தின் பின்னணி தீர ஆராயப்பட வேண்டும் என்றொரு கடிதம் எழுதினார் திருச்சியைச் சேர்ந்த கோபாலன் என்பவர்.

உயர்நீதி மன்றத்துக்குக் கோபாலன் அனுப்பிய கடிதமே ஒரு பொதுநல நோக்கி லான மனுவாகக் கருதி ஏற்கப்பட்டது. விவகாரத்தின் பின்னணி ஆராயப்பட்டு உடனடியாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது.

அப்படியொரு விசாரணைக்கு அவசியமிருப்பதை உணர்த்தும் சாட்சியங்களையும் உயர்நீதி மன்றம் சுட்டிக்காட்டியிருக்கிறது :


சுடுகாடுகளுக்குக் கூரைகள் அமைக்கும் பணிக்காக ஜவகர் ரோஜ்கர் யோஜனா திட்டத்திலிருந்து தலா முப்பதாயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. 'ஒரு கூரைக்குப் பதினைந்தாயிரம் கூட செலவாகாது' எனக் கூறி, ஒதுக்கியிருந்த நிதியின் ஒரு பகுதியை நிறுத்தி வைத்தார் கூடுதல் கலெக்டர் உமாசங்கர்.

மதுரை கலெக்டர் சம்பத், உமாசங்கரின் உத்தரவுக்கு மாற்று உத்தரவு பிறப் பித்து, சுமார் 1.5 லட்சம் ரூபாய் நிதி, சம்பந்தப்பட்ட கான்டிராக்டர்களுக்கு (சுடுகாடு கூரை கான்ட்ராக்டுக்கென) வழங்கப்பட வழி செய்தார்.

பணி முடிவுறும் முன்னரே, பணத்தை முழுமையாகக் கொடுக்க வேண்டிய அவசியமென்ன...?

மதுரை மாவட்டத்தில் நடைபெறும் பணிக்கான கான்டிராக்ட், சேலம் மாவட்டத்து பாரதியார் கூட்டுறவு சங்கத்துக்கு வழங்கப்பட்டதன் மர்மம் என்ன? (உள்ளூர்க்காரர் களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதே திட்டத்தின் நோக்கம்)

'கலெக்டர் சம்பத் செயல்பட்டிருக்கும் அவசரத்தைப் பார்க்க, இந்த விஷயத்தில்



வேறு பல மேலதிகாரிகளுக்கும் உயர் பதவி வகிக்கும் நபர்களுக்கும் தொடர்பு இருப்பதாகக் கருத வேண்டியுள்ளது...' என்று கூறியிருக்கும் சென்னை உயர் நீதி மன்றம், மேற்கூறிய ஆதாரங்களின் அடிப்படையில் பிறப்பித்திருக்கும் விசாரணை உத்தரவு மிகவும் முக்கியம் வாய்ந்ததாக அமைந்திருக்கிறது.

- ஒரு கடிதத்தையே மனுவாகக் கருதிச் செயல்பட நீதிமன்றம் முடிவு செய்திருப்பது, பிரச்னையின் தீவிரத்தை உணர்த்துகிறது.
- சி.பி.ஐ.யில் சூப்பரின்டென்டன்ட் அந்தஸ்தில் உள்ள ஓர் அதிகாரி விசாரணையை நடத்த வேண்டும் என்றும் உயர்நீதிமன்ற உத்தரவு தெளிவாகக் குறிப்பிடுகிறது.
- தமிழக அரசின் அனுமதி இந்த விசாரணைக்கு அவசியமில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- மதுரை போலவே மற்ற மாவட்டங்களிலும் ஜவகர் ரோஜ்கர் யோஜனா நிதி கையாடப்பட்டிருக்கக் கூடும் என்பதால், அனைத்து மாவட்டங்களிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இவற்றைப் பார்க்கும்போது, தமிழக அரசிடம் உயர்நீதி மன்றம் எவ்வளவு தூரம் நம்பிக்கையிழந்து போயிருக்கிறது என்பது தெளிவாகிறது.

இந்தத் தீர்ப்பைப் படித்த கையோடு, தலையங்கத்தின் ஆரம்பத்தில் இடம் பெற்றுள்ள அமைச்சர் இந்திரகுமாரியின் புகழுரையையும் படித்துப் பார்த்தால்... ஜெயலலிதாவுக்கு அவரது ஜால்ராக்கள் எவ்வளவு கவனமாக 'மேக் அப்' போடுகிறார்கள் என்பது புரியும்!

இடம்

சுப்ரமணியன் ரவிச்சந்திரன்

தாம்பூலம் வாங்கியாயிற்று. சில சில்லறை பர்ச்சேஸ்கள் முடிந்ததும் ஊரைப் பார்க்க சவாரிதான்.

முகுந்தன் தோளைத் தொட்டான். "என்னடா... போக வேண்டியதுதானே! ஏதாவது சில்லுண்டி வேலை வைத்திருப்பாயே?"

''ம்... லஸ்ஸில் செகன்ட்ஸ் பனியன்... அம்மாவுக்கு ஓடோப்ளவர் மாத்திரை... போனதரமே வந்தும், விட்டுப் போன கோல நோட்டு... இத்யாதி, இத்யாதி.''

ஒவ்வொரு பயணத்தின் போதும் லிஸ்டும் கூட வரும். முழுலிஸ்டையும் வாங்க வேண்டுமென்ற கட்டாயமோ, வாங்கிய தாகச் சரித்திரமோ இல்லை. இன்னும் சொன்னால் லிஸ்டில் இல்லாததையே வாங்க நேரிடும். அடுத்த தடவை என்ற சமாதானம் எதற்கு இருக்கிறது? ஐந்தரை பாயிண்ட் டு பாயிண்டைப் பிடித்தால் எட்டு மணி நேரத்துத் தூக்கத்துக்குப் பங்கம் இராது.


"என்ன யோசனை? நார்டன் ஸ்ட்ரீட்ல என் ப்ரண்டைப் பாக்கணும். டக்னு பர்ச்சேஸை முடி."

''அதில்ல முகுந்தா... அஞ்சரை பாய்ண்ட் டு பாய்ண்டைப் பிடிச்சு..."

''கள்ளன் மாதிரி பாதி ராத்திரி போகணும். அழகா செங்கோட்டா பாசஞ்சர்... ஜம்னு காலம்பற காப்பி சாப்பிடப் போகலாம்! முதல்ல பர்ச்சேஸை முடி."

இம்முறை லிஸ்டில் உள்ளதே வாங்கப்பட்டது.

முகுந்தனின்



நார்டன் தெரு நண்பர் பேச ஆரம்பித்து யாழ்ப்பாணம், ரஜினி என்று ஒரு சவட்டு சவட்டி விட்டார். முகுந்தன், கிருஷ்ணனின் வாயைப் பார்த்த யசோதையைப் போல இவரது வாயையே பார்த்துக் கொண்டிருந்தான்.

இவனுக்கு நேரமாகி, வேறு வழியில்லை என்று படவே, எழுந்து நின்றான். அவரது பேச்சுச் சங்கிலி பலீனமானது. வினாடிகளில் நன்றி நவின்று, ஸ்டேஷனை நோக்கி ஓட ஆரம்பிக்க வேண்டியதாயிற்று.

வண்டி லேட்டாக இருந்தால் நலம். காலேஜ் நாளில் மத்தியான ரயில் ஒன்று எப்போதுமே தாமதமாக வரும். மதிய வகுப்பு இல்லாதவர்கள் ரயிலின் தாமதத்தை வைத்து காலை வகுப்பைக் கடைசியில் ஒன்றையோ இரண்டையோ துண்டித்து விட்டு வருவார்கள். காலையில் இறங்கியதும் அது எவ்வளவு நேரம் தாமதம் என்று கேட்டு விட்டுத்தான் வகுப்பிற்குப் போவார்கள்.

இன்று கால் மணி லேட்.......

"ரிஸர்வேஷன்ல பார்றா!"

"ச்சீ... ஜெனரல்லியே காத்து வாங்கும்!" என்றான் முகுந்தன்.

ப்ளாட்பாரத்தின் திடீர்ச் சுறுசுறுப்பு, தொலைவில் வரும் ரயிலை அறிவித்தது. இவன் பிரயாணம் செய்யும் எல்லா தினங்களிலும் ஏதேனும் கல்யாண கோஷ்டியும் ரயிலுக்கு வரும். இன்றும் வெற்றிலைத் துப்பலும், சிண்டலுமாய் ஒன்று. இன்று இவன் போன நண்பனின் கல்யாணத்தில் விட்டுப் போனது இதுதான். நண்பனின் அக்கா வகையறா வரவில்லை. தன் பெண்ணைச் சீந்தவில்லையென்று கோபமாம் அவளுக்கு.. அவள் ஏன் வரவில்லை என்ற துக்க விசாரிப்பிலேயே கல்யாணம் கழிந்தது.

இறக்கை முளைத்தாற்போல, பக்கவாட்டில் தொங்கிய மனிதர்களைச் சுமந்தபடி, வந்தது வண்டி... இந்த வண்டியில்தான் போக வேண்டுமா... இதில் போய்ச் சேருவது முடியுமா?

முகுந்தன் ஓடுவது கண்டு தொடர்ந்தான். அந்தக் கல்யாண கோஷ்டி ரிஸர்வ் செய்து விட்டது போலிருக்கிறது... ப்ளாட்பாரமே கடைசி நேரத்துடிப்பில் இருந்தது.... அலட்டாமல் யாராவது இருக்கிறார்களா என்று பார்க்க ஆவலாயிருந்தது.

எதிரில் இரைக்க ஓடிவந்தான் முகுந்தன்... "ப்ச்! செங்கல்பட்ல இடம் தர்றேன்றாரு டிடி— எதுலியாவது தொத்து."

அடப்பாவி!

ஆம்பர், பச்சைக்கு மாறப் போகிறது. இவன் பெயரை உரத்து கூவி ஒரு பெட்டிக்குள் முகுந்தன் புகுந்து கொண்டான்.


'பாம்...'

ஹாரனா? அபாய அறிவிப்பா?

"நகருங்கய்யா, அட... நகருங்கறேன்" ரயிலையே ஸ்பரிசிக்காத அந்த நபர் விரட்டினார். இவன் சிரிப்பதா, முறைப்பதா என்று முடிவு செய்யாமல் காலின் கீழுள்ள படியைத் தேடினான்.

ரயில் வேகம் எடுக்கும் போதுதான் குதித்து விடலாமா என்கிற யோசனை தோன்றியது. மொத்த எடையையும் கை தாங்குமா என்ற கிலி புறப்பட்டது. சர்வ சாதாரணமாய் எத்தனையோ பேர் தொங்குகிறார்கள். நம்மால் முடியாமல் போனது ஏன்? எத்தனை மக்கள்? இப்போதே இப்படியானால் இன்னும் இருபது வருடங்களில்....?

"பையக் குடுடா!" என்றான் உள்ளிருந்து





"மாமியார் மருமகள் யுத்தம்'னு ஒரு படம் எடுத்தீங்களே, அது என்னாச்சு?"

"அதைதான் 'வீட்டில மடிசார், வெளியில சுடிதார்'னு டைட்டிலை மாத்தி ரிலீஸ் பண்ணிட்டமே!"

— தஞ்சாவூர் ராஜபாரதி

கைநீட்டிய முகுந்தன் என்றொரு தேவ தூதன். இம்முறையும் பை உரசியது. முன்னாலிருந்தவர் ஆட்சேபிக்கும் பிரக்ஞையில் இல்லை.

ஏதோ ஒரு ஸ்டேஷன் சுவரில் கறுப்பில் 'கடவுள் இல்லை'. அரை வெளிச்சத்தில்.

சின்ன வயதில் இது போன்ற சுவர் வாசகத்தில் ஈர்க்கப்பட்டு அப்பாவிடம் கேட்டான். 'அன்பே சிவம் என்றால் சிவன் கையில் சூலம் எதற்கு?' 'உன் கண்ணை நோண்டத்தான்டா. வெட்டிப் பயலே!' என்றவள் அம்மா - அப்பாவின் சார்பில்.

இப்போதும் சிரிப்பு வந்தது. முகத்தில் சிலீர். நாலாவது பெட்டியில் யாரோ கை கழுவுகிறார்கள். இவனுக்கு முன்னிருந்து ஒரு சக தொங்குநர். "லேய்.. யார்றாவன்? ஆளு நிக்கறது தெரியாம!"

இதே ஆள் நாலாவது பெட்டியில் கை கழுவி, இதே போல யாராவது கத்தினால், காதில் விழும்பட்சத்தில் இவனுடைய பதில் என்னவாக இரக்கும்? 'அதான் தண்ணி வருதுன்னு தெரியுதில்லை? தலைய உள்ளுக்கிழுத்துக்கிட்டா என்ன?'

செங்கல்பட்டு சந்தி...

டி.டி. ஒரு ஜன்னலில் அமர்ந்து யாரையோ அதட்டிக் கொண்டு இவர்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டிருந்தார். கூப்பிட்டும் திரும்பாமலிருந்தார். இவன் சக்தியைத் திரட்டி 'சார்' என்றான். டி.டி. திரும்பினார்.

"யெஸ்?"

"சார், இங்க ரெண்டு சீட் தர்றதா சொன்னீங்க".

முகுந்தனால் எப்படி முகத்தை மலர வைக்க முடிகிறது?

டி.டி. விழித்தார். நம்பவில்லையோ....

"சொன்னேன். இங்க ஆள் வந்திடுச்சே!"

"வாடா" என்றவனை, முகுந்தன் முறைத்தான். அதன் பொருள் 'பெசிமிஸ்ட் முட்டாளே..'

"கொஞ்சம் பாருங்க" என முகுந்தன் கூறவும், டி.டி. வேறு இடம் நோக்கி நகரவும், 'பாம்' அலறவும் தொடுத்தாற்போல அமைந்தன.

ஓடு......

முகுந்தன் ஏறிய கம்பார்ட்மெண்ட்டில் கூட்டம் அதிகமாயுள்ளதாய்ப் பட்டது.

அவனுக்கென்ன... அவனை அண்டி, பின்னால் ஏறி, கை நோகத் தொங்குவது யார்? அறிவிப்பில்லாமல் முகுந்தன் ஏறிவிடுகிறான்.

பெட்டியின் உள்ளிருப்பவர்கள் மண்ணின் மைந்தர்களைப் போல... ஏன் வெளியே இருப்பவரைப் பார்க்க வேண்டும்... காற்றில் சட்டைப் பை படபடத்தது. ரூபாய் பறக்காமலிருக்க வேண்டும்.

கழுத்துப் பட்டை வலிக்கையில் கூடுதல் உபத்திரவமாக கீழே அமர்ந்திருந்தவன் பிடியைப் பற்ற வைத்தான். குமட்டியது... அவனோ அதற்கும் அவனுக்கும் தொடர்பில்லாத நிலையில் இருந்தான்....

இடையில் இரண்டு மூன்று ஸ்டேஷன்களில் வண்டி நிற்காமல் போனது. தங்கள் ஊரிலும் நிற்க வேண்டும் என்று, என்றுதான் மறியல் செய்யப் போகிறார்களோ.

உள்ளே பலகையில் ஒரு பெண், கால் மாட்டில் கணவனைக் காவல் வைத்து விட்டு, காலை நீட்டித் தூங்கிக் கொண்டிருந்தாள். கணவன் அமர்ந்த நிலையில் சாமியாடிக் கொண்டிருந்தான். யாராவது அவளை அமரச் சொல்லலாம். சொல்ல மாட்டார்கள். பலவீனமான பால்!

முகுந்தன் காலைக் குறுக்காகவும் இல்லாமல் சப்பணமும் இடாமல் யோகாசனக்காரன் போல அமர்ந்திருந்தான். அவனருகில் வைத்திருந்த இவனது மாம்பழப் பையை ஒரு புஸ்தி மீசைக்காரன் சர்வ சுதந்தரமாக நசுக்கிக் கொண்டிருந்தான்.

இன்னும் கொஞ்சம் இடம் கிடைத்தால் பரவாயில்லை... முட்டாள்கள்... கல்யாணம் என்று ஒன்று வைத்து அதற்கு அழைப்பு வேறு. இன்றைய மாப்பிள்ளையான நண்பனின் மீது ஒரு நிமிடம் சினம் மூண்டது....

விழுப்புரம்....

இந்த அகாலத்திலும் ரயிலுக்கு வருகிறார்கள். எங்கோ கல்யாண மண்டப ஸ்பீக்கர் நாலைந்து பெண்களின் குரலுடன் சேர்ந்து பர்த்தாவைக் கிண்டல் பண்ணும் கதாநாயகியின் குரலை ஒலித்தது. பாவம் அவள். ஆயுளுக்கும் கோஷ்டி கானம்....

இறங்கி நடக்கலாம். பெஞ்சில் அமரலாம். இறங்கினால் மீண்டும் இடம் உத்தரவாதம் இல்லை.

முகுந்தன் தூங்கிக் கொண்டிருந்தான். சிலரால்தான் முடியும். வண்டியை நகராமல்

T.S.S. NIDHI LTD.

ESTD 1973

THIRUMYLAI SASWATHA SAHAYA NIDHI LIMITED

Regd. Off.: 230, R.K. Mutt Road, Mylapore, Madras - 600 004 Ph.4942303/4943365

BRANCHES

BRANCHES	THIRUVANMIYUR	: 112, Thiruvalluvar Salai, Kamaraj Nagar, Madras-41 Ph. 410058
	TONDIARPET	: 667, T.H.Road, Madras-81 Ph.5950472
	SAIDAPET	: 11, Jones Road, Madras, -15 Ph.4851468

FIXED DEPOSIT SCHEME

Period (Months)	12	24	36	60
Rate of Int. P.A.	17%	18%	19%	20%

KARPAGA VIRUTCHAM DEPOSIT SCHEME

(Re-Investment Plan) For Deposit of Rs.1,000/-

Period (Months)	12	24	36	45	67
Maturity Value Rs.	1190	1425	1760	2025	3025

SENIOR CITIZEN DEPOSIT SCHEME

Minimum Deposit Rs.10,000/-

Period 12 Months

Interest payable Monthly **19.5%** p.a

Interest payable Annually **21%** p.a

(APPLICABLE FOR AGED PERSONS ABOVE 55 YEARS, PENSIONERS, HANDICAPPED, WIDOWS, REGD. EDUCATIONAL AND CHARITABLE ORGANISATIONS)

T.S.S. SPECIAL DEPOSIT SCHEME

For Deposit of Rs.10,000/-

Period (Months)	Maturity Value
120	Rs.66,000
180	Rs.1,82,000

RECURRING DEPOSIT SCHEME

MONTHLY DEPOSIT RS.100/-

Period in Months	12	24	36	48	60	72
Maturity Value Rs.	1310	2850	4650	6710	9050	11,580

SAVINGS DEPOSIT SCHEME 9% P.A.

BUSINESS HOURS

	Week Days		Sunday	Holiday
Regd. Office Mylapore	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Friday
Branch Offices	9.00 to 12.30	2.00 to 4.30	9.00 to 12.30	Tuesday

HIGHLIGHTS

* Recognised as a NIDHI COMPANY by Central Government of India.
* Company is in 23rd year of service.
* Transaction with members only. (Rupees two only for membership)
* Premature repayment facility as per terms and conditions.
* Monthly interest Warrants would be despatched in advance for the year of Deposits.


LOANS

A) Jewel loans granted on Gold ornaments at Rs.300/- per gm. (Rs.2400/- per 8 gms.)

* No Ceiling
* No Charges
* No Interest Tax
* Recurring Deposit not required
* Your Jewels are insured at our cost.

B) Property Mortgage Loans granted on RD basis within Madras city limits.

P.S. SAMBASIVAM Secretary	G.KUMARAVELU Vice-President	K.R.V. RAMANI President



ரோஜாவை விரும்புகிறவன் அதன்
முள்ளையும் மதிக்க வேண்டும்.
பெர்சியப் பழமொழி.
தகவல் : வயலூர்
பா. குணா.

வைப்பதன் இம்சை யாருக்குப் புரிகிறது.

நான்கைந்து மூட்டைகளுடனும் குழந்தைகளுடனும் ஒரு கும்பல் இவன் வாசலுக்கு வந்தது.

"தடம் உடுங்க. பெண்டுக புள்ளைங்க இருக்கு!"

"யாருய்யாது? பிச்சக்காரன் ஊட்டுக்கு சனீஸ்வரன் விருந்துக்கு வந்தாப்பல. இங்கியே உறியடி உற்சவம். போய்யா அடுத்த பொட்டிக்கு!"

இடம் கேட்டவன் பேசவில்லை. அவனுடன் வந்த இளைஞன் தீவிரமாய்த் தோற்றமளித்தான்.

"யோவ்... எடம் இல்லாமயா சீட்டு குடுத்திருக்கான். ஒத்துய்யா.. அப்பன் வண்டியா இது. மஞ்ச சட்டை, ஒன்னத்தாய்யா....."

அதுதான் சரி என்பதைப் போல வழி கிடைத்தது. இவனும் உள்ளே போனான். இவன் இரண்டு முறை நகரச் சொன்ன போது யாரும் நகரவில்லை. இன்னும் இரண்டடி வைத்தால் முகுந்தன்.... "ஏய்யா முண்டுறே" என்று எரிந்து விழுந்த முன் ஆசாமியைக் கண்டு இவன் அரண்டான். பின்னாலும் போக முடியாமல் நின்றான். கழிவறை.... சாய முடியாமல் குறுக்கே கம்பார்ட்மெண்டின் கதவு....

'பாம்'.....

அப்பாடா....

"தொன்னாயிரம் ரூவாய்க்குப் பார்த்தான். கடைசில என்னாச்சுங்காணும்."

இடையில் ட்ராக் மாறிய இரைச்சலில் மனது பழசைத் தொடர்பு படுத்திக் கொண்டது.

இவன் வீட்டிற்கு வந்தவர் பொடி டப்பியை விட்டுப் போய்விட்டார்... டப்பா நிறைய பொடி. அப்பாவிற்குக் கொட்ட மனசில்லை. பழக்கமுமில்லை.. தாராள மனதுடன் பாலக்காட்டு நாராயணனிடம் கொடுத்தார்.

பா. நா. பெரிய தரக்கட்டுப்பாட்டாளர் என்பதை அப்போதே நிரூபிக்கும் தருணமாக அந்த வினாடி ஆயிற்று... மூடியைத் திறந்தவர், செத்த எலியைத் தொட்ட அருவருப்பில் முகம் கோணினார். கையோடு வாசல் சாக்கடையில் கொட்டினார். "இ பொடி சுகமில்லைங்காணும்."

அவர் போன பின்பு இவன் அப்பாவைக் கேட்டான்: "காணும் என்றால் என்ன பொருள்?"

கண்கள் எரிந்தன. பாய்ண்ட் டு பாய்ண்டில் போயிருந்தா இந்நேரம் கட்டையை நீட்டியிருக்கலாம். இந்தப் பாவி (தூங்குவதைப் பார்!) கெடுத்தான்.

யாரோ தட்ட, நினைவுகளைக் கழற்றினான். வெற்றிலை வாயுடன் அந்த பாரி சரீர மனிதர் கழிவறைப் பக்கம் போக வந்திருக்கிறார். வெளிக் கதவை முணு முணுப்புக்கு அப்பாற்பட்டு, நகர்த்தி உள்ளே கதவைத் திறந்து, போய் விட்டார்.

ரூபாய்க்கு எட்டு என்கிறபடிக்கு 'ப்ளாச்களைக்காரன்' இவனைக் கூடையால் முகத்தில் சிறிவிட்டுப் போனான். புகை நுழையாத இடத்திலும் போலீஸ் நுழையும். போலீசும் நுழையத் தினறும் இடங்களில் 'ப்ளாச்களை' நுழையும்.

திருப்பாதிரிபுலியூரில் அப்பெண் சயனம் கலைத்து, பிற ஆடவர்கள் முன் உறங்கியதற்காக லஜ்ஜைப்பட்டு அவசரமாக எழுந்து உட்கார, மூவர் தன்யர்களாகி அமர இடம் கிடைத்தது. மூவரில் இவன் இல்லை.

கொஞ்சம் உட்கார்ந்தால் தேவலை. எவன் கேட்கிறான்.

பொழுது விடியும் அறிகுறிகள்... வானம், பால்காரர்கள், பேப்பர் ஏஜண்ட்கள், கோலம் போடும் சுமங்கலிகள்... தினசரிதான்... ஆயினும் இப்போது சிருஷ்டிக்கப் பட்டது போன்று தோற்றம்.

எங்கோ சீட்டுக் கச்சேரிக்கான காகிதத்தின் படபட... காலேஜ் நாளில் ரயில் பிரயாணத்தில் தினம் ரம்மி உண்டு... ராம்குமார் என்ற நண்பன். ஜெயித்தால் பிகானீர் சேட்டின் கடையில் பீடாவாய் வாரி இறைப்பான்... தோற்றால் யாரும் நெருங்க முடியாமல் வசவு.....

சிதம்பரம்...

நெரிசல் சற்றுச் சுலபமானது. அமர வாகாய் இடம் தேடினான். முகுந்தன் 'இங்க வாடா' என்றான்.

"நா வரட்டா.. பஸ்ட் க்ளாஸ். கல்யாணம்னா இதான். செங்கோட்டா பாசஞ்சர்ல சுகமாரிடர்ன். தேங்க்யூ" என்றவாறே எதிர் திசையிலிருந்து வந்த அந்த வயதானவர் முகுந்தன் பக்கத்தில் அமர்ந்தார்.

"சார் ஆளு வருது" என்ற முகுந்தனை, இவன் தடுத்தான்.

"இட்ஸ் ஆல்ரைட்.... இன்னும் ரெண்டு ஸ்டேஷன்தான். சார் உக்காரட்டும்."

அவர் முகத்தில் 'தாங்ஸ்'. முகுந்தன் 'அட, பித்துக்குள்ளி'. உட்கார்ந்த வேகத்தில் கண்ணை மூடிக் கொண்டு, அவர் தூக்கத்தில் லயித்ததை ரசனையுடன் பார்த்துக் கொண்டிருந்தான்; கால் வலியையும் மீறி......

வட்டமேஜை

◆ இரா. முருகனின் "இரும்பு ராஜ்ஜியம்" படித்தேன். எத்தனை கடினமான விஷயத்தை மனிதர் எத்தனை எளிமையாய் எழுதுகிறார்! நான் முதன் முதலாக அலுவலகம் சார்பில் ஒரு கம்ப்யூட்டர் பயிற்சிக்குச் சென்றிருந்த சமயம். பயிற்சியில் "கம்ப்யூட்டர் வைரஸ்" பற்றியெல்லாம் சொல்லித் தரவில்லை. பயிற்சி முடிந்து வந்த என்னிடம் அலுவலக நண்பர், "கம்ப்யூட்டர் வைரஸ் என்கிறார்களே அதுபற்றி ஏதாவது தெரியுமா?" என வினவ, "அது என்னமோ எனக்குத் தெரியாது. ஆனால் செருப்பைக் கழற்றிய பின் தான் கம்ப்யூட்டர் அறைக்குள் அனுமதித்தார்கள்" என்று நான் சொன்ன பதிலை இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

கிழநத்தம், தி.க. பாலசுப்ரமணியன்.

◆ 'ஊழலை எதிர்த்து யுத்தம் தொடங்குவோம்' என்று நரசிம்மராவ் சூளுரைக்க, "லஞ்சம், ஊழல் போன்றவைகளுக்கு நெருப்பு போன்றவர்கள் நாங்கள் என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்" என்று ஜெயலலிதாவும் வீர வசனம் பேச, வாங்க, போங்க' என்றுதான் பேசுவார்.

நாட்டறம்பள்ளி, பாலு.

◆ "உலகப் புகழ் மாடலாக ஒரு தமிழ்ப் பெண்!" கட்டுரை கண்டேன். உலகின் எந்த எந்த மூலை முடுக்குகளில் எல்லாம் புகழ் பெற்ற நம் தமிழர்கள் இருக்கிறார்களோ! தேடலின் மூலம் இவர் போன்ற பலரை அறிய வாய்ப்பு உண்டு...! மாடலிங் அழகியான அந்த அரிய தமிழ்ப் பெண்ணை அறியச் செய்தமைக்கு நன்றி!

உடுமலைப்பேட்டை, எஸ். பொன்னுசாமி.

◆ தேர்தலை எதிர்நோக்கி இருக்கும் வாக்காளர்களுக்கு, எப்படிப்பட்டவர்களைத் தேர்ந்தெடுத்து சட்ட மன்றத்திற்கு அனுப்ப வேண்டும் என்று பெரியவர் கூறிய 'அருள்வாக்கு' ஒரு சமயசஞ்சீவி!

உடுமலை, எம். முத்து.

◆ அம்மாவின் பிறந்த நாளைக் கொண்டாட எறும்பாரின் யோசனை பிரமாதம்! எறும்பாருக்கு

தலைசிறந்த நடிகர்கள்!

மாநில, மத்திய நாடக மேடைகள் அற்புதமாகக் 'களை' கட்டியுள்ளன. கோடிக்கணக்கான ரூபாய்கள் தொடர்பான ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உட்பட்டிருக்கும் 'ஜெ', 'ராவ்' இரண்டு தலைசிறந்த நடிகர்கள் நடத்தும் நாடகத்தின் சுவைமிக்க காட்சிகளை மிக நன்றாகவே விமர்சனம் செய்திருக்கிறீர்கள், தலையங்கத்தில்!

கும்பகோணம், கே.என். பாலகிருஷ்ணன்.

ரூ. 20 பரிசு பெறும் கடிதம்

◆ தலையங்கங்கள், காங்கிரஸ் தலைவர்களின் முகத்திரையையும் தமிழக முதல்வரின் 'கோஷா'வையும் நூல் நூலாகக் கிழித்து உண்மை முகங்களைக் காட்டும் கண்ணாடியாய் விளங்குகின்றன! காந்திஜியை ஒருவன் சுட்டான். இந்திய நாட்டைப் பல கோட்சேக்களல்லவா சுட்டுக் கொண்டிருக்கிறார்கள்!

இனாம் மணியாச்சி, எஸ்.ஏ. கேசவன்.

◆ வசுந்தரா, குழந்தைகளை அழைப்பது போல் எல்லோரும் அவரவர் குழந்தைகளை மரியாதையோடே அழைக்கலாம். இதனால் இனி வரும் தலைமுறையினருக்கு மதிப்பு கொடுத்துப் பேசும் பழக்கம் வளரும். இதனால் அந்நியோந்நியம் குறையும் என்பது தொண்டிச் சாக்கு. என் நண்பர் ஒருவர் தம் மனைவியையே 'நீங்க

எதிர்காலம் தூள்தான்!

தூத்துக்குடி, எஸ். ராமசுப்பிரமணியன்.

◆ 'மகிழ்ச்சியாக இருப்பது எப்படி?' என்ற கேள்வியும், அதற்கான பதில் ஒவ்வொன்றும் அனுபவம் என்ற கடலில் மூழ்கி எடுத்த அற்புதமான முத்துக்கள்.

திருச்சி - 17, உஷா முத்துராமன்.

◆ அரசியல்வாதியின் அராஜகத்துக்கு அஞ்சி, அடிமைப்பட்டுக் கிடக்கும் காவல் துறையின் கையாலாகாத்தனத்தை கச்சிதமாகப் படம் பிடித்துக் காட்டியிருக்கிறார் கதாசிரியர், தமது 'இருட்டு' சிறுகதையில்.

நாகப்பட்டினம், நாகை சந்திரா.

◆ சி.எஸ்.என். ராஜா எழுதிய 'அப்ளிகேஷன் வேட்டை' சிறுகதை இன்றைய சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் அமைந்திருந்தது. பல பள்ளிகளிலிருந்து வாங்கி வருகிற அப்ளிகேஷன் ஃபாரங்களிலிருந்து நமக்குத் தேவையானதைத் தவிர, மற்றவற்றையெல்லாம் வைத்து குழம்பிக் கொண்டிராமல், இந்த கல்யாண சீசனில் அவற்றையெல்லாம் திருமணப் பரிசாகக் கொடுத்து விடலாம் என்கிற யோசனை சரியானதுதான்! ஆகா, இப்படியொரு தர்மபத்தினி கிடைக்க கொடுத்தல்லவா வைத்திருக்க வேண்டும்!

மொரட்டுப்பாளையம், சுதா. இராஜேஸ்வரன்.

ரூஸோ போட்ட பிரேக்!



• ஜெ. ஜெ. மாளிகை

'ஒரு சதுர அடி 5000 ரூபாய் விலை போய்க் கொண்டிருக்கும் இடத்தில் 13.50 ரூபாய்க்கு விற்றது தவறு; எனவே அதற்கு இடைக்காலத் தடைவிதிக்க வேண்டும்' என்று சென்னை, தி.நகரிலுள்ள குடிசைமாற்று வாரியக் கட்டடமான ஜெஜெ. மாளிகையின் இரண்டாவது, மூன்றாவது தளங்களின் விற்பனைக்குத் தடைவாங்கியிருக்கிறார் ரூஸோ என்பது அனைவருக்கும் தெரியும்.

யார் இந்த ரூஸோ?

சைதாப்பேட்டையிலுள்ள பன்னீர் செல்வம் நகரில் வசிக்கிறார், கே.எஸ். ரூஸோ. 32 வயதே நிரம்பிய இளைஞர். தி.மு.க.வின் 133-வது வட்டச் செயலாளர். இப் பதவிக்கு மூன்று முறை போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கும் இவருக்கு எல்லாக் கட்சியினரிடமும் சுமுகமான உறவு இருக்கிறது. சில சமயம் ஆளுங்கட்சிக்காரர்கள் கூட இவரிடம் பஞ்சாயத்துக்கு வருகிற அளவுக்கு நியாயமானவர். நண்பர்களோடு சேர்ந்து ரியல் எஸ்டேட் மற்றும் பர்னிச்சர் வியாபாரம் செய்கிறார்.

ஆறு சகோதரர்களைக் கொண்ட கூட்டுக் குடும்பத்தில் வசிக்கும் ரூஸோவின் தந்தையும் கழகப் பேச்சாளர். தந்தையைப் போல் ரூஸோவுக்குப் பேச வராது என்றாலும் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்வதில் படுசமர்த்தர் என்கிறார்கள்.

"ஜெ. ஜெ. மாளிகை விற்பனை சம்பந்தமா கேஸ் போட்டு இடைக்காலத் தடைவாங்கியிருக்கிற விஷயமே எங்களுக்குப் பேப்பரில் படிச்சுத்தாங்க தெரியும்!" என்றார்கள் பெற்றோர்.

"தன்னோட கல்யாணத்தைக் கலைஞர் தலைமையில்தான் செஞ்சுக்குவேன்; சர்ச்சுல செஞ்சுக்க மாட்டேன்னு சொன்னதால பல

[illegible]

கடைசில இப்பத்தான் ஒரு குடும்பம் அவனோட கண்டிஷனுக்கு ஒத்துக்கிட்டிருக்கு. சீக்கிரம் கல்யாணமும் நடக்கப் போவுது...!" என்றார்கள்.

ரூஸோவைச் சந்தித்த போது, "வழக்குப் போடுவதற்கான அடிப்படை ஆதாரங்களை குடிசை மாற்று வாரியத்தில் இருந்து மிகவும் சிரமப்பட்டு ரகசியமாகச் சேகரித்தேன். தென் சென்னை மாவட்டச் செயலாளர் கிட்டு அவர்களுக்கு மட்டுமே நான் வழக்குப் போட இருந்தது தெரியும்!" என்றார்.

"எதிர்ப்புக் குரல் கொடுப்பவர்களெல்லாம் தாக்கப்படுகிற நிலையில் உங்களுக்குப் பயமில்லையா?" என்ற போது, "இந்த ஏரியாவிலே வந்து என்னை ஒன்றும் செய்ய முடியாது" என்று சொல்லிச் சிரித்தார்.

வழக்கு விவரங்கள் பத்திரிகையில் வந்ததும் கலைஞர் விசாரித்தாராம். 'ஏனோதானோவென்று வழக்குப் போட்டிருக்கியா, இல்லை... விவரங்கள் அனைத்தும் இருக்கிறதா?' என்று கேட்டுத் தெரிந்து கொண்டாராம்.

'வழக்கு ஒரு பக்கம் நடக்கட்டும், பேட்டி படம் என்று பத்திரிகைகளில் தமுக்கு அடிக்க வேண்டாம். கொஞ்சம் அடக்கி வாசியுங்கள்' என்று தலைமைக் கழகமும் எச்சரித்திருக்கிறதாம்.

— தில்லப்பா

பெண்கள் பூப்படையும் பொழுது உண்ண வேண்டிய உணவுகள்



பெண்ணானவள் முதன்முறை பூப்பெய்தும்போது – அது அவளின் நிகழ்கால இரண்டாவது பிறவி என்றே கொள்ளவேண்டும். பூப்பெய்திய பின்னர் அவள் உடலிலும் – மனதிலும் அடையும் மாற்றங்கள் – அதன் பின்னர் இயற்கை ஏற்படுத்தும் பலவித மாற்றங்களுக்கு அவள் தன்னை தயார்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது அவசியமாகிறது. "உணவே மருந்து – மருந்தே உணவு" என்ற நம் நாட்டுச் சித்தர்களின் அருள் வாக்கிற்கேற்ப முதன் முதலாக பூப்படைந்த பின்னர் அவளின் அடுத்த மாதாந்திர சுழற்சி வரும் வரையிலான – சற்றேறக்குறைய ஒரு மாத காலத்தில் நாம் அளிக்கும் உணவு முறையே அவளை அடுத்து வரும் பருவங்களில் மாதாந்திர பூப்பு சுழற்சி – மகப்பேறு – பாலூட்டுதல் போன்றவற்றால் ஏற்படும் பலவீனத்தை சரிசெய்ய வழி வகுக்கிறது.

பிரசவ காலத்தில் பெண்களுக்கு இடுப்பெலும்புகள் விரிந்து குழந்தை வெளியேற வழி வகுக்கிறது. பின்னர் இயல்பான நிலைக்கு வருகின்றது. இதனாலேயே பெண்கள் – ஆண்களைவிட பின்னாளில் இடுப்புவலியினால் எந்நாளும் அவதியுறுகின்றனர். அதனால் அவர்கள் பொதுவாக உடல் வலுபெறவும் – குறிப்பாக இடுப்பெலும்புகள் வலுப்பெறவும் அதற்குரிய உணவுகளை உண்ணவேண்டியது அவசியமாகிறது.

மகளிர் பூப்பெய்தும்போது அதற்குரிய உணவு உண்ணும்போது – அதனால் மகப்பேறுக்குண்டான உறுப்புகளும் அவைகளோடு தொடர்புடைய தசைகளும் – நரம்புகளும் ஊட்டமடைகின்றன. அவைகளில் ரத்த ஓட்டம் பலம் பெறுகிறது.

எனவே அந்த ஒரு மாத காலகட்டத்தில் அளிக்கப்படும் உணவே – பின்னாளில் வானளாவ எழும்பி நிற்கப்போகும் கட்டடத்திற்கான பலமான அஸ்திவாரம் போன்றதாகும். அந்த ஒருமாத காலத்தில் அளிக்கப்படும் திட்டமிட்ட உணவே பேரிளம்பெண் வரையிலான அவளின் ஆரோக்ய வாழ்விற்கு அடிப்படை.

இயற்கையாக ஆண்களைவிட பெண்கள் மெலிந்தவர்கள் இவர்கள் ஆண்களைப்போல் அதிக அளவு உண்ண இயலாது. "உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கழகு" என்னும் ஔவையின் வாக்கிற்கிணங்க இவர்களுடைய உணவு அளவில் குறைந்ததாகவும் அதே நேரத்தில் உடலுக்குத் தேவையான எல்லா சத்துக்களையும் அளிக்க வல்லதாய் இருத்தல்வேண்டும்.

(அடுத்த பக்கம் பார்க்க)

இதற்கேற்ப மகளிர் பூப்படைந்த முதல் ஒரு மாத காலத்தில் உண்ணக்கூடிய உணவுகளாக சித்தர்கள் வகுத்துக் கூறும் உணவுகளான காரரிசி பிட்டு – உளுந்தங்கஞ்சி – உக்களி – வெந்தயக் களி – எள்ளுருண்டை – நல்லவெல்லம் – தேங்காய்த் திருகல் – அவல் – நெய் – வெல்ல வடை – பருப்பு வகைகள் இவற்றைத் தவறாது உண்ண வேண்டும்.

மேலும் மகளிர் மாதவிலக்கு ஆகும் ஒவ்வொரு முறையும் மேற்கூறிய உணவுப்பொருட்களை பயன்படுத்துவதோடு அந்த நாட்களில் எந்த வேலையும் செய்யாமல் ஓய்வு கொள்ளவேண்டுமென்றும் – அக்காலத்தில் புணர்ச்சியைத் தவிர்க்க வேண்டுமென்ற கருத்தில்தான் நம் முன்னோர் அவர்களை மாதவிலக்கு நாட்களில் வீட்டில் தனிமைப் படுத்தி வைத்தனர்.

சித்த மருத்துவர்

டாக்டர் A. ராமலிங்கம், பி.ஐ.எம்.

தி.மு.க. எம்.எல்.ஏ. பரிதி இளம்வழுதியும் இ. காங்கிரஸ் எம்.எல்.ஏ. (சிதம்பரம் தொகுதி) அழகிரியும் சந்தித்து, இன்றைய ஆளுங்கட்சி பற்றியும் அரசியல் பற்றியும் விவாதம் செய்கிறார்கள்....

பரிதி இளம்வழுதி : கல்கி ஏற்பாடு செய்திருக்கும் இந்தச் சந்திப்புக்காக நீங்கள் என் வீட்டுக்கு வந்திருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அழகிரி : எனக்கும்தான். நீங்கள் நல்ல நண்பர் என்பது மாத்திரமல்ல; உங்கள் தந்தை இளம்பரிதி அவர்கள் மிகச் சிறந்த பேச்சாளர் என்று என் தந்தை அடிக்கடி சொல்லுவார். அப்படிப்பட்ட அரசியல் பாரம்பரியம் மிக்க உங்கள் வீட்டுக்கு வருவதில் எனக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

பரிதி : காங்கிரஸில் எத்தனையோ சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் உங்கள் மீது எனக்குத் தனிப்பட்ட பற்றும் பாசமும் அன்பும் மரியாதையும் உண்டு. காரணம், என்னைப் போலவே சட்டமன்றத்தில் துணிந்து ஆளுங்கட்சியை விமர்சிப்பதில் உங்களுக்கு நிகர் நீங்கள்தான். இருந்தாலும் இந்த விமர்சனங்களையெல்லாம் நீங்கள் மிகவும் தாமதமாகத் துவங்கியிருக்கிறீர்கள் என்பதுதான் என் வருத்தமெல்லாம்!

அழகிரி : ஆரம்பத்தில் ஜெயலலிதாவை நாங்கள் அன்னை இந்திரா காந்தியின் மறு உருவமாகத்தான் நினைத்தோம். அதுவொரு emotional thinking. ராஜீவ் கொலையுண்ட நிலையில், ஒரு மாநிலத் தலைவி தேசிய உணர்வோடு இருக்கிறாரே என்று வரவேற்றோம். ஆனால் அவர் பதவிக்கு வந்து முதல் முறையாக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் போலீஸ் உயர் அதிகாரிகளை அழைத்துப் பேசிய கூட்டத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏக்களும் எம்.பிக்களும் எது சொன்னாலும் செய்யக்கூடாது என்று சொன்னார். இது அவருடைய முதிர்ச்சியின்மையின் வெளிப்பாடு என்று அந்த அதிகாரிகள் கருதியதால், முதலில் எங்களிடம் சொல்லத் தயங்கினாலும் பிறகு சொல்ல ஆரம்பித்து விட்டார்கள். உதாரணத்திற்கு, எனது சிதம்பரம் தொகுதியை எடுத்துக் கொண்டால் பெண்கள் பள்ளி சிதம்பரம் தொகுதியில் இருக்கிறது: ஆண்கள் பள்ளி மன்னார்குடி தொகுதியில் இருக்கிறது. பெண்கள் பள்ளியில் நடத்தினால் தொகுதியின் எம்.எல்.ஏ. என்கிற



• அழகிரி

மூப்பனார் மு
கலைஞர் பி

முறையில் என்னை அழைத்தாக வேண்டுமே என்பதற்காக, எந்த விழாவாக இருந்தாலும் ஆண்கள் பள்ளியிலேயே நடத்த ஆரம்பித்தார்கள். ஜனநாயக நாட்டிலுள்ள ஒரு முதல்வர் இப்படியெல்லாம் நடந்து கொள்வது தவறல்லவா! அதோடு அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்து கூடிய முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே ஜெயலலிதாவுக்கென்று எந்த விதமான லட்சியமும் கிடையாது; அவருக்கு மற்றவர்கள் மீது மாத்திரமல்ல; தம்மீதும் நம்பிக்கை கிடையாது என்பதைப் புரிந்து கொள்ள முடிந்தது. இப்படியொரு முதல்வர் இருப்பது அவர் சார்ந்த கட்சிக்கு மட்டுமல்ல; தேசத்துக்கே ஆபத்து என்பதால் அந்த முதல் கூட்டத் தொடரிலேயே அவர்களுடனாக உறவு முறிந்து விட்டதாகவே நான் முடிவுக்கு வந்து விட்டேன்.

பரிதி : அந்தம்மாவுக்கு லட்சியமே கிடையாது என்று சொல்வதை நான் ஒப்புக் கொள்ள மாட்டேன். ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய் சம்பாதிப்பது என்கிற லட்சியம் உடையவர் அவர். (சிரிப்பு). முதல் சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே நீங்கள் அப்படியொரு முடிவுக்கு வந்து விட்டதாகச் சொன்னாலும் மற்றவர்களின் நிலை அப்படியில்லை! பொதுவாகவே


ல்வர்?

ரதமர்?

• பரிதி இளம் வழுதி



கேள்வி நேரத்தில் போது பாராட்டக் கூடாது; குற்றம் கூறக் கூடாது; நன்றி தெரிவிக்கக் கூடாது என்கிற மரபுகளையெல்லாம் தூக்கியெறிந்து விட்டு இப்போது எந்த மரபுதான் காக்கப் படுகிறது என்பது ஒருபுறமிருக்கட்டும் - 'ஆதி பராசக்தி, அங்காளபரமேஸ்வரி, அகிலாண்ட நாயகி, அனைத்துயிர்களின் தாயான புரட்சித் தலைவியின் ஆட்சியில் கொசு கடிக்கலாமா?' என்று ஓர் ஆளுங்கட்சி உறுப்பினர் முழு நீளத்துக்குத் துதிபாடி ஒரு கேள்வி கேட்பார். அதற்கு, 'காவிரி தந்த கலைச் செல்வி, நாவலந்தீவின் நாயகி, நானிலம் போற்றும் நம்பிக்கை நட்சத்திரம், வங்கக் கடலுக்கும் தங்கத் தாயாய் விளங்குகிற புரட்சித் தலைவியின் கருணையின்படி கொசுக்களை ஒழிப்பதற்குத் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்' என்று சம்பந்தப்பட்ட அமைச்சரும் மீட்டர் நீளத்திற்குத் துதிபாடிவிட்டுப் பதில் சொல்லுவார். அவர்கள்தாம் அப்படி என்றால் உங்கள் காங்கிரஸ் உறுப்பினர்களுமா புகழ்வது? காங்கிரஸ் கட்சியின் தமிழகத் தலைவரான மதிப்புக்குரிய குமரி அனந்தன் அவர்கள் 'மண்ணாள வந்த பெண்ணரசி!' என்றார். சட்டமன்ற உறுப்பினர் பி.வி. ராஜேந்திரன் அவர்கள், 'நாங்



கள் டமாரமே அடிப்போம்!' என்றார். இன்றைக்கு ராஜ்ய சபா உறுப்பினராகியிருக்கும் சகோதரர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தமக்கே உரிய இலக்கிய நயத்தோடு, 'நாங்கள் குங்குமம் சுமக்கும் கழுதைகள்' என்றார். இப்படியெல்லாமா புகழ்வது?

அழகிரி : எதிர்க்கட்சி என்றால் எதிரிக் கட்சியாகத்தான் இருக்க வேண்டும் என்று நீங்கள் நினைப்பது தவறு. தி.மு.க.வுக்கும் அ.தி.மு.க.வுக்கும் வேண்டுமானால் பங்காளிச் சண்டைகள் இருக்கலாம். எங்களுக்கு அப்படியல்ல.

பரிதி : எங்கள் எதிர்ப்புக்குப் பங்காளிச் சண்டை ஒன்றும் காரணமல்ல; தலைவர் கலைஞர் அவர்கள், ஜெயலலிதா ஆட்சிக்கு வந்ததும் ஆறுமாத காலம் எந்த விதமான விமர்சனமும் செய்யாமல் கால அவகாசம் கொடுத்தார். அதன் பிறகுதான் விமர்சனம் செய்ய ஆரம்பித்தார்.

அழகிரி : கலைஞர், ஜெயலலிதாவுக்குக் கொடுத்த ஆறுமாத கால அவகாசம் என்பது பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தி.மு.க. ஆட்சிக்கு வந்த போது கொடுத்த கால அவகாசம்தான். ஜனநாயகத்தில் அப்படித்தான் நடந்து கொள்ள வேண்டும். அது போல்தான் நாங்களும் நடந்து கொண்டோம். காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜெயலலிதா அரசை ஆரம்பத்தில் புகழ்ந்தது உண்மைதான். இருப்பினும் எல்லை கடந்து புகழ்ந்து விடவில்லை. 'இந்த அரசு நல்லது செய்யுமானால் பாராட்டுவதோடு மட்டுமல்ல; அதை டமாரம் அடித்தும் சொல்வோம்' என்றுதான் பி.வி. ராஜேந்திரன் சொன்னாரே தவிர, 'இந்த ஆட்சி நன்மை செய்து விட்டது; அதனால் டமாரம் அடிக்கிறோம்!' என்று அவர் சொல்லவில்லை.

பரிதி : ஆனால் அவசியமான நேரத்தில் கூட, நீங்கள் ஜெயலலிதா ஆட்சியை எதிர்க்கவோ, கண்டிக்கவோ செய்யவில்லையே! இந்த முதல்வர் எந்த வாயால், 'சிறந்த எதிர்க்கட்சித் தலைவருக்குரிய இலக்கணத்தோடு திகழ்பவர் எஸ்.ஆர்.பி.தான்' என்று புகழ்ந்தாரோ அதே வாயால், பிறகு, 'இவரைப் போன்ற அறியாமையும் முட்டாள்தனமும் மிகுந்த எதிர்க்கட்சித் தலைவரை நான் பார்த்ததேயில்லை!' என்று அவர் சொன்னார். 'ராஜீவ் காந்தி சிந்திய ரத்தத்தால் நாங்கள் ஆட்சிக்கு வரவில்லை; எங்கள் சொந்த செல்வாக்காலேயே வந்தோம்' என்றும் 'அதிகப்படியான லக்கேஜ்களை நாங்கள் கழற்றிவிட்டு விட்டோம்' என்றும் பேசினார். இப்படியெல்லாம் சொன்ன பிறகுதானே நீங்கள் வேறு வழியின்றி எதிர்க்க ஆரம்பித்திருக்கிறீர்கள்!

அழகிரி : அப்படியல்ல! 91 - தேர்தலின் போது அ.தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொண்ட நிலையில், நாங்கள் மக்களிடம் என்ன சொல்லி வாக்குக் கேட்டோம்? 'எங்கள் கூட்டணிக்கு வாக்களித்தால், அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்; நாங்கள் எதிர்க்கட்சியாகச் செயல்படுவோம்' என்றுதான் சொன்னோம். உலகத்தில் வேறு எங்குமே - எந்தக் கூட்டணியுமே - மக்களிடம் இப்படிச் சொல்லி வாக்குக் கேட்டதில்லை. அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே எப்படி எதிர்க்க முடியும்? ஒரு வீட்டுக்குப் புது மருமகள் வருகிறாள்; அவள் தண்ணீர்க் குடத்தை 'டொக்' என்று வைத்துவிட்டாள் என்கிற காரணத்தாலேயே மாமியார் முரட்டுத்தனமாக நடந்து கொள்ள முடியுமா?

பரிதி : குடத்தை 'டொக்' என்று வைக்கவில்லை. குடத்தையே கல்லை வைத்து நசுக்க ஆரம்பித்தாள் என்கிற நிலையிலும் சும்மா இருக்கலாமா என்பதுதான்.....

அழகிரி : அப்படியொரு நிலைமை வந்து விட்ட போதுதான் நாங்கள் எதிர்க்க ஆரம்பித்து விட்டோமே! என்ன, நாங்கள் தோழமைக் கட்சியாக இருந்ததால் எதிர்ப்பிலும் ஒரு நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டியிருந்தது. நீங்கள் பங்காளிக் கட்சியாக இருப்பதால் இயற்கையாகவே உங்கள் எதிர்ப்பு மூர்க்கமாக அமைந்து விட்டது. அவ்வளவுதான் வித்தியாசம்! எப்படியோ, இரண்டு பேருமே எதிர்க்கிறோம். வரும் தேர்தலில் இந்த ஆட்சி அகற்றப்படப் போவதென்பதும் உறுதி. ஏனெனில் இந்த ஆட்சியாளர்கள் நினைப்பது போல், மக்கள் ஏமாளிகள் அல்ல. பாமர மக்கள் நிறைய இருந்தாலும் அவர்களுக்கு எழுதப்படிக்கத்தான் தெரியாதே தவிர, சிந்திக்கத் தெரியாது என்பதல்ல. வரும் தேர்தலில் நமது மக்கள் மௌனமாகவே சாதித்துக் காட்டுவார்கள்.

பரிதி : அ.தி.மு.க. தோற்கப் போவது உறுதி என்கிற உங்கள் கருத்துத்தான் எனக்கும். இது ஆணவப் போக்குக் கொண்ட ஆட்சி. எதிர்க் கருத்துக் கொண்டவர்களை ஜனநாயக விரோதமாகத் தாக்குகிற ஆட்சி; ஊழல் ஆட்சி என்பதை மக்கள் தெளிவாகவே புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

அழகிரி : இவை மட்டுமல்ல; மக்களுக்கான எந்தவிதத் திட்டங்களையும் இந்த ஆட்சி செயல்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. அத்தனை கோடியில் இத்தனை திட்டம்; இத்தனை கோடியில் அத்தனை திட்டம் என்பதெல்லாம் வெறும் அறிவிப்போடு சரி. உதாரணத்திற்கு அமெரிக்கக் கார் தொழிற்சாலையான ஃபோர்டு கம்பெனிக்கான அடிக்கல் நாட்டுத் திட்டத்தையே எடுத்துக் கொள்ளலாம். அந்தத் திட்டத்திற்கு இன்னும் மத்திய அரசிடம் அனுமதியே வாங்கவில்லை! எல்லாமே தேர்தல் ஸ்டண்ட்!

பரிதி : உண்மைதான். இந்த ஆட்சி போவதும் உறுதி. அடுத்து, எங்கள் கட்சி வெற்றி பெற்று கலைஞர் முதல்வராவதும் உறுதி.

அழகிரி : நீங்கள் சொல்வதுபோல் கலைஞர் முதல்வரானால் எங்களின் வாழ்த்துக்கள் உண்டு. அதில் எங்களுக்கு வருத்தம் ஏதும் இடையாது. ஆனாலும், நீங்கள் ஒரு விஷயத்தை மறந்து விடக்கூடாது. அது, எந்தக் கட்சி தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானாலும் காங்கிரஸின் இருபது சதவிகித வோட்டு இல்லாமல் முடியாது என்கிற வரலாற்று பூர்வமான உண்மை!

பரிதி : 89 - ல் நாங்கள் உங்களுடைய ஆதரவு இல்லாமல்தான் ஆட்சியைப் பிடித்தோம் என்பதை நீங்களும் மறந்து விடக்கூடாது.

அழகிரி : அப்போது கூட நாங்கள் அ.தி.மு.க.வை ஆதிரிக்காமல் போனதால்தான் நீங்கள் ஆட்சியைப் பிடித்தீர்கள்! அதோடு 89 - ன் நிலைமையும் வேறு. அப்போது அவர்களும் இரண்டுபட்டுக் கிடந்தார்கள். மேலும் இரட்டை இலைச் சின்னமும் கிடைக்காமல் போனது.

பரிதி : இரட்டை இலைச் சின்னம் கிடைக்காமல் போனதால்தான் நாங்கள் வெற்றி பெற்றோம் என்று சொல்ல முடியாது. எம்.ஜி.ஆர். இருந்த போது - இரட்டை இலைச் சின்னம் இருந்த போது - உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களில் நாங்கள் அமோக வெற்றி பெற்றோம்.

அழகிரி : உள்ளாட்சி, நகராட்சித் தேர்தல்களில் அரசியல் கட்சி ரீதியாக வாக்குப் போடுவதென்பது மிகவும் குறைவு. உள்ளூர்ப் பிரச்னை மற்றும் வேட்பாளர்களின் தனிப்பட்ட செயல்பாடுகள் - செல்வாக்குகளை வைத்தே வாக்களிக்கிறார்கள். ஆனால் ஆட்சி என்று வருகிற போது மக்கள் வேறு மாதிரி வாக்களிக்கிறார்கள். இதுதான் நடைமுறை. இதன் காரணமாகத்தான் தி.மு.க., அ.தி.மு.க. என்று திராவிட இயக்கம் பிளவுபட்ட பிறகு, இரண்டு தலைவர்களுமே டெல்லியில் உள்ளவர்களோடு பேசி, இருவருமே மாறி மாறித் தங்கள் தோள்களில் காங்கிரஸைச் சுமக்கத் தயாராக இருந்தார்கள் - சுமந்தார்கள் என்பதுதான் உண்மை. மாறாக, நாங்கள் மற்றவர் தோள்களில் ஏறிச் சவாரி செய்ய வேண்டுமென்று எப்போதுமே விரும்பியதில்லை. இதைத்தான் எங்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். தனித்து நிற்பதிலேயே நாங்கள் விருப்பமுடையவர்கள் என்பதையும் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

பரிதி : தமிழகத்தில் காங்கிரஸின் நிலை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும். இருந்தும் நீங்கள் இப்படிச் சொல்வது சிரிப்பைத்தான் வரவழைக்கிறது. அப்படியே வைத்துக் கொண்டாலும் நீங்கள்தானே இப்போது யார் யாருடனோ பேசிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் வருகின்றன!

அழகிரி : நாங்கள் யார் யாருடனோ பேசவில்லை; ரஜினியோடு மட்டும்தான் பேசிக் கொண்டிருக்கிறோம்! நாங்கள் மட்டுமா பேசுகிறோம்? கலைஞரும்தான் பேசுகிறார்.

பரிதி : கலைஞர் ரஜினியிடம் பேசவில்லை; ரஜினிதான் கலைஞரிடம் பேசுகிறார். சரி... கூட்டணி விஷயம் பற்றியெல்லாம் நாம் பேச முடியாது. நம்முடைய தலைவர்கள் பேசி முடிவு செய்ய வேண்டிய விஷயம் என்பதால் அதை விட்டு விடுவோம். நீங்கள் ஜெயலலிதா ஆட்சியை எதிர்ப்பதாகச் சொன்னாலும் உங்கள் கட்சிக்குள் இருக்கும் சிலர் இன்னும் ஆதரிக்கத்தானே செய்கிறார்கள்.....

அழகிரி : மிகச் சிலர் தங்கள் பலவீனம் காரணமாக அப்படிச் செய்கிறார்கள்.

பரிதி : பலவீனம் என்றால்.....

அழகிரி : எத்தனையோ பலவீனம்! (சிரிப்பு) நீங்கள் பார்க்க வேண்டியது பெரும்பாலானவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள் என்பதுதான். கட்சித் தலைவர் குமரி அனந்தன் அவர்களும் சரி, சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பியும் சரி, தலைவர் மூப்பனாரும் சரி,

உங்களிடம் கொடுக்க ஒன்றுமில்லாத போது பிரார்த்தனை செய்யுங்கள். ஏனெனில் பிறருக்குக் கொடுப்பதற்கு பிரார்த்தனையைப் போல் நல்ல பொருள் வேறில்லை. அன்புடனும் கருணையுடனும் செய்யப்படும் பிரார்த்தனை, பிரச்னைகளுக்கு நல்ல முடிவைத் தரும்.

— எம்.எஸ். உதயமூர்த்தி

தகவல் : பி. ராஜசேகரன்



அதிமுகவுடன் கூட்டு கூடாது என்றுதான் தலைமையிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

பரிதி : இந்த நிலையிலும் - ஆளுங்கட்சி தவறு செய்கிறது என்பது வெளிப்படையாகத் தெரிந்த நிலையிலும் - தட்டிக் கேட்டு நடவடிக்கை எடுக்க வேண்டிய மத்திய அரசு இன்னமும் நிதானம் காட்டுவது ஏன்?

அழகிரி : இந்த அரசு ஊழல் அரசு என்பது தெரிந்த விஷயம்தான் என்றாலும் அதற்கான நடவடிக்கைகளை எடுக்கிற போது நிதானம் காட்டுவது அவசியம். 'கலைக்கக் கூடாதா' என்று கேட்கலாம். அப்படிக் கலைத்தால் அப்போது ஊழல்கள் அடிபட்டுப் போய் அனுதாபம் பிறந்து விடும். ஆகவே, சட்ட ரீதியாக அவர்கள் தப்பிக்கக் கூடிய ஓட்டைகளையெல்லாம் அடைத்த பிறகுதான் நடவடிக்கை எடுக்க முடியும். அப்போதுதான் ஊழலை நிரூபிக்க முடியும். அந்த வகையில்தான் மத்திய அரசின் அமைப்புகள் முதல்வர் மீதும் மற்ற அமைச்சர்கள் மீதும் சசிகலா குடும்பத்தினர் மீதும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. ஜெயலலிதாவைச் சுற்றியிருப்பவர்களை நெருங்கவே முடியாது என்கிற மாயையை மத்திய அரசுதான் உடைத்திருக்கிறது. இன்னும் சொல்லப் போனால் ஹவாலா வழக்கில் சொந்தக் கட்சிக்காரர்கள் மீதே நடவடிக்கை எடுக்கிற பிரதமர் நரசிம்மராவ், எப்படி தமிழகத்தில் நடக்கும் தவறுகளை மாத்திரம் விட்டு விடுவார் என்று சந்தேகப்படுகிறீர்கள்?

பரிதி : ஹவாலா வழக்கில் சுப்ரீம் கோர்ட் தலையிட்ட பிறகுதானே நடவடிக்கை எடுக்கிறார்?

அழகிரி : சுப்ரீம் கோர்ட் தலையிட்டு விட்டது என்பதாலேயே இப்படியொரு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதில்லையே! விசாரணைக் கமிஷன் அது இது என்று மூடி மறைத்திருந்தாலும் தாங்களும் சம்பந்தப்பட்டிருப்பதால் எதிர்க்கட்சிகளும் கண்டு கொள்ளாமல்தானே இருந்திருக்கும்? இருந்தும் அவர் அப்படிச் செய்யவில்லையே! எனவே, தமிழகத்தில் ஜெயலலிதா ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணமுடைய - உங்கள் கட்சி உள்பட - எல்லா எதிர்க்கட்சிகளும் காங்கிரஸ் தலைமையில் ஓரணியில் நின்று, ஜெயலலிதாவுக்கு எதிரான வாக்குகள் சிதறிப் போகாமல், அவரை வீழ்த்த வேண்டும் என்பதுதான் என்னுடைய விருப்பம்.

பரிதி : காங்கிரஸ் தலைமையில் ஏன் ஒன்று சேர வேண்டும்?

அழகிரி : இதையொரு வேண்டுகோளாகத்தான் சொல்கிறேன். ஒன்பதாண்டு காலத்துக்கு மேல் கலைஞர் முதல்வராக இருந்து விட்டார். எனவே, அவர் பெரிய மனது பண்ணி காங்கிரஸுக்கு விட்டுக் கொடுத்து ஒரு கூட்டணி ஆட்சியை ஏற்படுத்தலாம். கடந்த இருபதாண்டுகளுக்கு மேலாக டெல்லியின் அதிகார மையத்துக்கு அருகாமையிலேயே இருந்து கொண்டிருக்கும் - ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகாத - நேர்மையான - மூப்பனாரை முதல்வராக்க உதவினால் தமிழகம் மீண்டும் ஒரு பொற்கால ஆட்சியைப் பெறும் என்பதற்காகத்தான் கலைஞரை பெரிய மனத்தோடு விட்டுக் கொடுக்கச் சொல்கிறேன்.

பரிதி : கலைஞர் முதல்வர் பதவியை விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது போலவே இத்தனை ஆண்டுகாலம் காங்கிரஸ் பிரதமர்களே இருந்திருக்கிறார்கள் என்கிற நிலையில் நீங்களும் பிரதமர் பதவியைக் கலைஞருக்கு விட்டுக் கொடுக்கலாமே!

அழகிரி : பிரதமர் பதவிக்கு நிச்சயமாகக் கலைஞர், தகுதியுடையவர்தாம் என்பதில் சந்தேகமேயில்லை. அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாகப் பொது வாழ்வில் ஈடுபட்டிருப்பவர் - ஒரு சாமான்யர் - எளிய குடும்பத்திலிருந்து வந்தவர் என்கிற வகையிலும் திறமைசாலி என்கிற வகையிலும் அவர் தகுதியானவர்தாம். ஆயினும் தி.மு.க. மாநிலக் கட்சியாக இருப்பதால் அது நடைமுறைச் சாத்தியமில்லை என்பதையும் உணர வேண்டும். இருந்த போதிலும் ஒரு பெரிய மாநிலத்தின் ஆளுனர், துணை ஜனாதிபதி போன்ற பெரிய கௌரவமான பதவிகளில் அவரை அமர வைத்துப் பார்க்க முடியும் என்று நினைக்கிறேன்.

பரிதி : கலைஞர் பிரதமராவது நடை முறைச் சாத்தியமில்லை என்கிற போது காங்கிரஸ் தலைமையில் நாங்கள் ஒன்றுபடுவது மாத்திரம் எப்படிச் சாத்தியமாகும் என்று நினைக்கிறீர்கள்?

அழகிரி : ஜெயலலிதா ஆட்சியை வீழ்த்த வேண்டும் என்பதற்காகவும் கலைஞர் இந்திய அரசியலிலும் ஓர் உயர்ந்த இடத்துக்குப் போக வேண்டும் என்பதற்காகவும்தான் இப்படிச் சொல்கிறேன்.

(இதற்கு மேல் இருவரும் விவாதத்தைத் தொடர்ந்தால் அதற்கொரு முடிவே இருக்காது என்பதால் நாம் விவாதத்தை இத்துடன் முடிக்கச் சொல்ல, இருவரும் கை குலுக்கியபடி விடை பெறுகிறார்கள். பரிதி இளம்வழுதி, கேட் வரை சென்று அழகிரியை வழியனுப்பி வைக்க, நாமும் நன்றி கூறி விடை பெறுகிறோம்.)

தொகுப்பு : **ப்ரியன்**; படங்கள் : **யோகா.**

ஜெரா

சம்பத் அவசரமாக செருப்பை மாட்டிக் கொள்ளும் போது கொல்லைப்புற திண்ணை மூலையில் இருந்த துணிச் சுருள் லேசாக அசைந்தது. கூடவே தீனமான அம்மாவின் குரல்.

"யாரு... யாரு... சம்பத்தா?"

சம்பத்துக்கு எரிச்சலாக இருந்தது. வழக்கம் போலப் புறப்படும் நேரத்தில் அம்மாவின் புலம்பல்!

இதைத் தவிர்ப்பதற்காகவே அப்பா புழங்கிய உள் கோடி அறையில் அவருடைய கட்டிலிலேயே அம்மாவைக் கிடத்தி இருந்தான். அம்மாவின் நடமாட்டம் பெரிதும் அற்றுப் போன நிலையில், அடிக்கடி அந்த அறையைச் சுத்தம் செய்வது சகிக்கக் கூடியதாய் இல்லை என்று அவன் மனைவி சங்கடப்படவே, வேறு வழியில்லாமல் திண்ணையைத் தேர்ந்தெடுக்க வேண்டியதாகி விட்டது.

"என்னம்மா... சொல்லு..."

"வரும் போது... ஒரு போர்வை வாங்கிட்டு வாடா... இது ஒண்ணும் தாங்கல... பழசா யிட்டு..."

சம்பத் பதில் பேசவில்லை. பார்வை மட்டும் அம்மாவின் குச்சி உடம்பை, தோலாகப் போர்த்தி இருந்த போர்வையை மேய்ந்தது.

வாஸ்தவந்தான். நைந்து இற்றுப் போயிருந்த போர்வை ஆங்காங்கே கண் திறந்திருந்தது. நடு நடுவே கலர் கலராய் ஊசித் தையல் வேறு.... உருண்டையாய்... கம்பளிப் பூச்சியைப் போல.

இது நடமாடிக் கொண்டிருக்கும் போது அம்மாவாகவே போட்ட தையலாகத்தான் இருக்கும்! அப்படி என்றால்... கிட்டத்தட்ட ஆறுமாத காலமாய்... இதே பழந்துணியில் புதைந்து கொண்டு...

பாவம்தான்... ஆனால்... சம்பத்தால் ஆவதொன்றுமில்லை.

வாசல் கேட்டைச் சாத்தும் போது அவன் மனைவி தொண்டையைச் செருமினாள்.

"அம்மா கேட்டுட்டாங்களேன்னு பாசத்துல உருகி காசைக் கரியாக்கிட்டு வந்து நிக்காதீங்க! வயசானவங்க ஏதாவது தொண தொணன்னு கேட்டுக்கிட்டுத்தான் இருப்பாங்க. நாமதான் எது அவசியம், இல்லை அனாவசியம்னு முடிவு பண்ணணும்! சுமதி பத்துநாளா பட்டுப் பாவாடை கேட்டுகிட்டு இருக்கா. ஞாபகம் இருக்கட்டும்."

சம்பத் நிமிஷ நேரம் தயங்கி, பின் பலமாகத் தலையாட்டிவிட்டு நகர்ந்தான். இன்றைக்கு ஓ.டி. பணம் இநூறு வரும் என்பதை நேற்று சொல்லி விட்டதால் வந்த வினை! ஆளுக்கொரு ஆப்ளிகேஷன்!

பஸ் பிடித்து ஆபீஸ் போய்ச் சேர்ந்ததும் இரண்டு மணி நேரம் வேலை சுமுகமாக ஓடிற்று. கேஷியர் வந்ததும் கூப்பிட்டு, கையெழுத்து வாங்கி, ஓ.டி. பணத்தை எண்ணிக் கொடுக்கவும் போன் வரவும் சரியாக இருந்தது.

சுப்ரமணி! இந்த நேரத்தில் இவன் எதற்கு போன் செய்கிறான்?

"சம்பத், எங்கப்பாவுக்கு சீரியஸ்னு ஆஸ்பத்திரில அட்மிட் பண்ணிருக்கண்டா. ரொம்ப பயமா இருக்கு. உடனே வரியா?"

சுப்ரமணி, அவனது ஒரே நண்பன். லீவ் எழுதிக் கொடுத்து விட்டு, விரைந்தான்.

அந்த சாலையின் இடதுபுற இறக்கத்தில் புதிதாக எழுந்திருந்த பிரு மாண்டமான ஆஸ்பத்திரி வர்ணப் பூச்சுகளோடு சம்பத்தை வரவேற்றது. அதைப் பார்த்த மாத்திரத்தில் ஆச்சர்யத்தைவிட, 'இதற்கு சுப்ரமணி தாங்குவானா' என்ற பயமும் பரிதாபமும்தான் சம்பத்தை ஆக்ரமித்தது.

ஆஸ்பத்திரி வாசலில் கலைந்த தலையும் தூக்க மிழந்து வீங்கிய கண்களும், கசங்கி அழுக்கேறிய உடைகளுமாக சுப்ரமணி கையில் புகையும் பீடியோடு, எங்கோ வெறித்தபடி நின்றிருந்தான். சம்பத்தைப் பார்த்ததும் பரபரப்பாய் ஓடி வந்தான். விழி முனைகளில் ஈரம் எட்டிப் பார்க்க, "தனி ரூம்லே வச்சிருக்காங்கடா" என்று கரகரத்தான்.

ஆதரவாய் அவன் தோளைப் பற்றிய சம்பத், "டாக்டர் என்னதான் சொல்றாரு?" என்றான். சுப்ரமணி பதில் பேசவில்லை. அவனுடைய உதடுகள் துடிப்பதையும் மூக்கு விடைப்பதையும் முகச் சதைகள் முறுக்கேறுவதையும் பார்த்த சம்பத், அவன் அழுவதற்கு ஆயத்த

மாகிறான் என்பதை அறிந்து, ஆதரவாக அவன் கைகளைப் பற்றிக் கொண்டான்.

"இத பாரு சுப்ரமணி, இந்த நேரத்துலதான் நீ ரொம்ப தைரியமா இருக்கணும், என்ன?"

"முடியல சம்பத்... நடமாட்டம் இல்லேன்னாலும் அவரு இருக்காருங்கற நினைப்பே தெம்பா இருந்தது. அதுக்கும்..."

சுப்ரமணிக்கு தொண்டை அடைத்தது. சம்பத் அவனை அணைத்தபடி ஆஸ்பத்திரிக்குள் அழைத்துப் போனான்.

ஐ.ஸி. யூனிட்டில், ஏகப்பட்ட டியூப் இணைப்புகளோடு மார்புக்கூடு ஏறி இறங்க, மல்லாந்தபடி மூச்சுக்கு மன்றாடிக் கொண்டிருந்தார் சுப்ரமணியின் அப்பா. வெளியே இழுத்துப் போர்த்திய புடைவைத் தலைப்போடு அவன் மனைவியும், பரட்டைத் தலையும் பரிதாப முகமுமாய் அவன் வாரிசுகளும்....

சம்பத்தைப் பார்த்ததும் சுப்ரமணியின் மனைவி, புடைவைத் தலைப்பை வாயில் அழுத்தியபடி... மூக்கை உறிஞ்சினாள்.

"தைரியமா இருங்கம்மா.. எல்லாம் சரியாப் போயிடும்."

சம்பத் நம்பிக்கையற்ற குரலில் அவளுக்கு நம்பிக்கையூட்ட முயற்சித்தான். கூடவே அவனுடைய அழுகை அவனுக்கு ஆச்சர்யமாய் இருந்தது. இந்தப் பெரியவரோடு சதா சண்டை போட்டுக் கொண்டிருந்த இவனுக்கு எப்படிப் பாசம் திடீர் என்று இப்படி நெட்டித் தள்ளும்! இது நிஜமான நெகிழ்ச்சியா, இல்லை... இனி சண்டைக்கு முற்றுப் புள்ளிதான் என்ற நிறைவில் தெறிக்கும் நிம்மதி ஆசுவாசமா?

'சே! என்ன ஒரு கொடூர நினைப்பு' - சம்பத் தன்னையே திட்டிக் கொண்டான். எத்தனைப் பிரச்னைகள் இருந்தாலும் பிரிவு ஒரு பெரிய விஷயம்தான். கை நழுவிப் போய் விடுமோ என்ற கலக்கம் யாருக்கும் இருக்கத்தான் செய்யும்!



சம்பத் முதல் வேலையாக சுப்ரமணியின் மனைவியையும், குழந்தைகளையும் வற்புறுத்தி அழைத்துக் கொண்டு கேன்டீனுக்கு வந்தான். அவர்கள் முதலில் சம்பிரதாயமாக மறுத்தாலும், கடைசியில் பசிக்குப் பணிந்து போனார்கள்.

சரளமான வாழ்க்கை திடீர் என்று சலனப்பட்டுவிட்டதால் சுப்ரமணி சோர்ந்து போயிருந்தான். பணத்தட்டுப்பாடு அவன் பார்த்துப் பழக்கப்பட்டுப் போன ஒன்று... ஆனால் இப்படிப்பட்ட அலைச்சலும்.. பரபரப்பும்.. என்ன செய்ய வேண்டும் என்று புரிபடாத பரிதவிப்பும் அவனுக்கு முற்றிலும் புதியது.

"சுப்ரமணி, நீயும்

'சுருக் - நறுக்' - 18 முடிவுகள்

கீழ்க்கண்ட சொல்லோவியங்கள் ஒவ்வொன்றும் ரூ. 50 பரிசு பெறுகின்றன.

கிரிக்கெட் என்பது......

● மழை வரக்கூடாது என்று பலரை வேண்ட வைக்கும் திருவிழா.
- ஜெயாப்ரியன், சென்னை - 26.

● விளையாட்டு உலகின் சூப்பர் ஸ்டார்!
- கே. வெங்கடேசன், வேலூர் - 4.

● மனித மூளை சாஃப்வேரும் பந்து, மட்டை என்னும் ஹார்ட்வேர்களும் சேர்ந்து படைக்கும் கிராஃபிக் விருந்து.
- எஸ். திருமலை, கோவை - 43.

● விளாசுவது, பிடிப்பது, குவிப்பது, எதிராளி தவற விடுவதையே எதிர்பார்ப்பது... அட! வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது!
- இரா. விஜயரங்கம், குண்டியமல்லூர்.

● குலுக்கல் இல்லாத கவர்ச்சி ஆட்டம்!
- டி. கலைவாணி, தாந்தோன்றிமலை.

● கிராமப்புறக் கிட்டிப்புள்ளின் நகர்ப்புற ஒப்பனைப் படைப்பு.
- சி. நாச்சிமுத்து, ஈரோடு - 9.

ஏதாவது சாப்பிட்டுக்கோயேன்?"

"இல்லே.. டாக்டர் வந்துடுவாரு.. பாத்துடலாம்!"

இருவரும் டாக்டரைப் பார்க்கக் கிளம்பினார்கள். டாக்டர் அட்வான்ஸ், பீஸ், மருந்து பாட்டில் இதைப் பற்றி எல்லாம் புள்ளி விபரமாய் சொல்லிக் கொண்டிருக்க, சுப்ரமணி நெளிந்தான். எழுதிக் கொடுக்கப்பட்ட மருந்துகள் உடனே வேண்டும் என்று டாக்டர் சொன்னார்.

சுப்ரமணி, சம்பத்தைப் பரிதாமாகப் பார்த்தான்.

"ஏற்கெனவே ஆயிரத்துக்கு மேல கடன் வாங்கி, செலவு செஞ்சிட்டேன் சம்பத்! கையில பொட்டு காசு இல்லை..."

சம்பத்துக்குச் சங்கடமாக இருந்தது. சட்டென்று பாக்கெட்டில் கைவிட்டான். ஓ.டி. பணம் ஐநூறு. பட்டுப் பாவாடை, போர்வை என்று வீடு முன்வைத்த செலவுகள் ஞாபகம் வந்தன. விலக்கிவிட்டு, எடுத்து "இந்தா வெச்சுக்கோ" என்றான்.

"தாங்ஸ்டா!"

"பரவாயில்லை. சீக்கிரம் அப்பாவைக் கவனி. நான் அப்புறம் வந்து பார்க்கறேன்" என்று சொல்லிவிட்டு ஆபீஸ் புறப்பட்டான்.

மாலை வீடு திரும்புகையில் வாசலிலேயே காத்திருந்த மனைவி,

"என்ன, பாவாடை வாங்கிட்டீங்களா?" என்றாள்.

"இல்லை. என் பிரெண்டு சுப்ரமணி இல்லை? அவன் அப்பாவுக்கு உடம்பு சரியில்லைன்னு ஆஸ்பத்திரில சேர்த்திருக்கான். பணம் இல்லாம தவிச்சான். அதான் பாவம்னு....."

"உடனே பாசம் பொத்துக்கிச்சாக்கும். கொஞ்சமாச்சும் வீட்டு அக்கறை இருந்தாத்தானே? கடனாத்தான் குடுத்தீங்களா? இல்லை காந்தி கணக்கா?"

சம்பத்துக்குக் கோபம் வந்தது. பதில் பேசாமல் உள்ளே போனான்.

"யாரு? சம்பத்தா? வந்துட்டியா?" கொல்லைப்புறத் திண்ணையிலிருந்து அம்மா....

"ஆமா. நான்தான்."

"கேட்டேனே. போர்வை வாங்கிட்டு வந்தியாடா?"

அம்மாவின் குரலில்தான் எத்தனை எதிர்பார்ப்பு?

சம்பத் அவளருகே போனான்..

"இல்லை... வாங்கலைம்மா. என் நண்பன் ஒருத்தனோட அப்பா உயிருக்குப் போராட்டமா ஆஸ்பத்திரியில இருக்காரும்மா.... ரொம்பக் கஷ்டப்படறான் அவன். மருந்து, மாத்திரைக்கு நிறைய செலவு ஆயிட்டுதாம். அதான் பொறுக்கமாட்டாம ஓ.டி. பணத்தை அவன்ட்ட 'செலவுக்கு வெச்சிக்கடா'ன்னு குடுத்துட்டேன்."

அம்மா ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

"நல்லது பண்ணினே! போர்வை அடுத்த மாசம் வாங்கிட்டாப் போச்சு. போற உயிரைத் தடுக்கறது முக்கியம்டா. குடுக்கணும்னு தோணிச்சே! அந்த வரைக்கும் நல்லதுதான்!"

சம்பத் அம்மாவைப் பெருமிதத்துடன் பார்த்தான். ஹாலில் முணுமுணுத்துக் கொண்டிருந்த மனைவியின் 'அர்ச்சனை' அப்போது ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை, அவனுக்கு.

KALKI SHOPPING PAGE

SAKUNTHALA SAREES
RANEE SAREES

- BENGAL COTTON SAREES
- BENGAL PRINTED PURE SILKS
- BATIK COTTON SAREES
- CHUDDIDAR MATERIAL (FINE BATIK DESIGNS)

ALL FRESH STOCK

MADURAI TEXTILES

2, SIVAPRAKASAM ROAD,
PONDY BAZAAR,
MADRAS - 600 017
(NEAR AGASTHIYAR TEMPLE)

ADYAR

STUDENTS XEROX

Quality that is close to perfection

XEROX
LASER PRINTING
WORD PROCESSING
DTP
ELECTRONIC & MANUAL TYPING
BINDING & LAMINATION

மணமக்கள் தேவை
கம்ப்யூட்டர் ஜாதகம்

அனைத்துசமூகத்திலும், ஆயிரக்கணக்கான வரன்கள் பெற உடன் பதிவு செய்ய தொடர்பு கொள்ளவும்.

கம்ப்யூட்டர் ஜாதகங்கள் நொடிப் பொழுதில்

ஆங்கிலம், தமிழ்	ரூ. 50/-
எதிர்கால கணிப்புடன்	ரூ. 150/-
ஆண்டு பலன் :	ரூ. 50/-
கல்யாண பொருத்தம் :	ரூ. 50/-
NUMEROLOGY PREDICTIONS :	Rs. 50/-

CONSULT DIVINE ASTROLOGER
BRAHMASRI THETHIYUR S.V. SASTRY
WITH PRIOR APPOINTMENT.

ASTROLOGY SOFTWARE FOR SALE

ஸ்வயம்வராலயா

(GOVT. REGD)

18, ஸ்டேஷன் ரோடு, மேற்கு மாம்பலம்,
சென்னை – 33. போன் : 425822, 4846427
7–ஏ, சாந்தி விஹார் காம்ப்ளக்ஸ், லஸ்,
சென்னை – 4. போன்:846278,
88, 1, 16th Cross, 6th Main, Malleswaram,
Bangalore - 560 055. Ph.:3340146

தவணை முறையில்
சாரிகள் விற்பனைக்கு

புதிய டிசைன்களில் சூரத் சாரிகள், பெங்கால் காட்டன், காஞ்சிபுரம் பட்டு, மைசூர் சில்க், கோரா காட்டன், சுங்குடி சேலைகள் மற்றும் சுடிதார், பிளவ்ஸ் ஆகிய அனைத்தும் மொத்த வியாபாரிகளும், தனி நபர்களும், பணிபுரியும் பெண்களும் எங்களிடம் தவணை முறையில் வாங்கிக் கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு :

மீரா டெக்ஸ்டைல்ஸ்

26/1, மோதிலால் தெரு,
தி. நகர், சென்னை – 17.
போன் : 4342696



“என் பாட்டி ஒரு கதை சொல்லுவாள்: ஒரு சிறுவன் தன் தாயாருடன் தெருவில் போய்க் கொண்டிருந்தான். வழியில் ஒரு மிட்டாய்க்கடை. விதவிதமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த இனிப்பு வகைகளைப் பார்த்ததும் ஏக்கமாய் நின்று விட்டான் சிறுவன். அந்த வழியாக வந்த அரசன், சிறுவனிடம் போய் 'உனக்கு எத்தனை வேண்டுமோ அத்தனை பட்சணங்களையும் எடுத்துக் கொள். காசு நான் கொடுத்து விடுகிறேன்' என்றான். சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி. இனிப்பு வகை

இளையவர்களிடமும் ஆசி வேண்டுவேன்!

களைச் சாப்பிட்டு ஏக திருப்தி. ராஜாவை மனசார வாழ்த்தினான். சிறுவனின் வாழ்த்து ஆயிற்றே என ராஜா நினைக்கவில்லை. ஒருவனைத் திருப்தி செய்வதைவிட நல்ல செயல் வேறு எதுவும் இல்லை என்பாள் என் பாட்டி. ஆசியைக் கோருவதும், கொடுப்பதும் இந்த நாளில் சிரமமான விஷயங்கள். நான் எப்போதும் வயதில் இளையவர்களிடமும் ஆசி வேண்டுவேன்....'' - இப்படிச் சொல்பவர் என்.ஈ.பி.சி. அதிபர் ரவி பிரகாஷ் கெம்கா.

சிவப்புக் கரை போட்ட கைத்தறி வேட்டி, ஜிப்பா. பந்தா துளியும் இல்லாத இந்த கெம்கா, சுமார் 2000 கோடி ரூபாய் பிஸினஸின் அதிபர் என்றால் நம்புவது கஷ்டம்தான்.

காவிரிப் பிரச்னை பற்றிப் பேச ஜெ. தில்லி போனபோது, உங்கள் என்.இ.பி.சி. நிறுவனம், ஒரு பயணிகள் விமானத்தை கேன்ஸல் செய்து விட்டு, ஜெ.வுக்காக ஸ்பெஷலாக அமர்த்தப் பட்டதாமே?

“வெற்றிகரமான தொழிலதிபராக உங்கள் கணவர் விளங்குவதற்கு எது காரணம்?'' என்று சம்பா தேவியைக் கேட்ட போது, அவர் பதில் சொல்லக் கொஞ்சம் நேரம் எடுத்துக் கொள்ளுவார், யோசிப்பார் என்றெல்லாம் நினைத்த நமக்குச் சற்றே வியப்பு.

"எப்போதும் கம்பெனி நினைப்பு; கடவுளின் அளவற்ற கருணை. இதைத் தவிர எனக்கு வேறு எதுவும் சொல்லத் தெரியவில்லை!'' என்றார் கெம்காவின் மனைவி சம்பா தேவி.

“கூடுமான வரை சிம்பிளான வாழ்க்கை. அத்தியாவசியத் தேவை எதுவோ அதை மட்டும் வாங்கிக் கொள்ளுவேன். ஆரம்பத்திலிருந்தே அப்படித்தான். என்னுடைய சம்பாத்தியம், சொத்து எல்லாமே என் நிறுவனங்கள்தாம். என் பாக்கெட்டை மட்டும் நிரப்பிக் கொண்டு, கம்பெனி எப்படியோ போகட்டும்

என்று நான் நினைப்பதில்லை.' என் மகன்களும் அப்படித்தான். உழைப்பும், விசுவாசமும்தான் வெற்றிக்கு அடிப்படைகள். கேளிக்கைகளும் பார்ட்டிகளும் அல்ல!" என்றார் கெம்கா.

ரவி பிரகாஷ் கெம்கா, பஞ்சாபிலுள்ள கோட்காபுரா என்னும் சிற்றூரைச் சேர்ந்தவர். ஜியானி ஜெயில்சிங், இன்றைய பஞ்சாப் முதல்வர் பிரார் ஆகியோர் இந்த ஊர்க்காரர் கள்தாம்.

"அறுபதுகளில் தில்லியிருந்து சென்னை வந்து, சிறிதாக ஓர் ஆபீஸ் தொடங்கிய அந்த நாளிலிருந்து, என் கொள்கை இதுதான்: முதலைப் போட்டுவிட்டு, எல்லோரும் எனக்கு உழைத்துச் சம்பாதித்துக் கொடுங்கள் என்று சொல்லுவது நியாயமில்லை. என் கம்பெனிக் காக நானே உழைக்காவிட்டால் மற்றவர்கள் எப்படி உழைப்பார்கள்?" என்று கேட்கிறார் கெம்கா.



• கெம்கா - மனைவியுடன்....

"நீங்கள் தமிழ் நாட்டை ஏன் தேர்ந் தெடுத்தீர்கள்?"

"காங்கிரஸோ, கழகங்களோ எதுவானாலும் முழு 'டெர்மு'ம் ஆட்சி செய்ய முடிகிறது இங்கே. எந்த அரசிடமும் எனக்கு இதுவரை பிரச்னை இருந்ததில்லை. தொழிலதிபர்கள் 'அதிசாமர்த்தியமாய்' நடந்து கொள்ளாத வரை இங்கே பிரச்னை இல்லை. மற்ற எந்த மாநிலத் தையும் விட, இங்கே உள்ளவர்கள் சுயமாய்ச் சிந்திக்கிறார்கள்; உதவி செய்கிறார்கள். மின் சாரம் நாடு முழுக்கப் பிரச்னைதான். ஆனால் தமிழ்நாட்டில் மற்ற மாநிலங்கள் அளவுக்கு மோசமில்லையே!"

காற்றாடி ஆலை மூலம் இப்போது 600 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறார் கெம்கா. இப்போதைய இதே வேகம் இருக்கு மானால் 2000 ஆவது ஆண்டில் ஒரு சாத னையே செய்ய முடியும் என்கிறார். (வீட்டி லேயே ஒரு விண்ட்மில் வைத்திருக்கிறார். ஒரு மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்கிறது!)

"சிறிய அளவில் ஸ்டீல் பிஸினஸில் தொடங்கிய உங்கள் வாழ்க்கையில், திருப்பு முனை எப்போது வந்தது?"

"50-60 கோடி ரூபாய் பிஸினஸில், காற் றாலை அமைத்து மின்சாரம் தயாரிப்பது அது வரை யாரும் தொடங்காத தொழிலாய் இருந் தது. பிறகு அதில் வெற்றி கண்டதும், காற் றாலை மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்துக் கொடுக்கும் பணியில் இறங்கினோம். இதுதான் திருப்புமுனை. அதற்கு ஐடியா கொடுத்தது, மூத்த மகன் ராஜ்குமார்தான். ஐடியா நன்றாக இருந்தது. செயல்படுத்த உற்சாகமும் ஊக்கமும் கொடுத்தேன். சூயிங்கம்மும் சாக்லெட்டும், பீர், விஸ்கி வகைகளும் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் அல்ல. எனவே அடிப்படை உணவு வகையான கோதுமை சார்ந்த உணவுப் பண் டங்கள் உற்பத்தியில் இறங்கினோம். கோதுமை ரவை, மாவு இவற்றை 'பாக்' செய்து விற்ற முதல் நிறுவனம் எங்களுடையதுதான். வருடத் தில் ஐந்து லட்சம் டன் அரைக்கும் நெ. 1. ஆலை ஆசியாவிலேயே இது ஒன்று தான்.

"ஓபன் ஸ்கை பாலிசி வந்த பிறகு, வானத்தில் பறந்த முதல் தனியார் விமானம் எங்களுடையதுதான். இன்று 9 ஃபோக்கர் விமானங்கள்; ஸ்கைலைன் என்.இ.பி.சி. போயிங்குகள் ஆறு. 8 - சீட்டு விமானங்கள் இரண்டு. (இதற்கு ஏக டிமாண்ட் இப்போது) இன்னும் மூன்று கூட வாங்க இருக்கிறோம். 49 இடங்களுக்கு இப்போது பறக்கிறோம்."

"அது சரி, காவிரிப் பிரச்னை பற்றிப் பேச ஜெ. தில்லி போனபோது, உங்கள் என்.இ.பி.சி. நிறுவனம், ஒரு பயணிகள் விமானத்தை கேன் ஸல் செய்துவிட்டு, ஜெ.வுக்காக ஸ்பெஷலாக அமர்த்தப்பட்டதாமே?"


"இல்லவே இல்லை. முதல்வர் விமானம் கேட்டதும், பயணிகள் விமானத்தை டைவர்ட் பண்ணி வேறு விமானம் ஏற்பாடு செய்து விட்டுத் தான் அவருக்கு ஒரு விமானம் தந்தோம். பயணி களுக்கு இதனால் எந்த சிரமமும் இல்லை!"

தமானியா ஏர்வேஸையும் தம் நிறுவனத் துடன் இணைத்துக் கொண்டு விட்ட கெம்கா, கர்நாடக காவில் ஒரு சிமெண்ட் ஆலை நிறுவு வதையும் இன்ஷூரன்ஸ் துறையில் இறங்க விரும்புவதையும் தம் எதிர்காலத் திட்டங் களாகச் சொன்னார்.

தம் கம்பெனியை ஒரு பன்னாட்டு நிறு வனம் (மல்ட்டி நேஷனல்) ஆக்க வேண்டும் என்று லட்சியம் வைத்திருக்கிறார் கெம்கா.

சந்திப்பு : **சாருகேசி**

படங்கள் : **ஸ்ரீஹரி**


DAY & NIGHT சிரிப்புகள்
ரசிகர்களே! எதிர்பாராவிதமாக பவர்கட் ஆகிவிட்ட படியால், வீரர்கள் கிரிக்கெட்டுக்குப் பதில் கண்ணாமூச்சி ஆடி மகிழ்விப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்!
சிக்ஸரடிச்சி மூணு பல்பு உடைச்சிருக்கீங்க. காம்பன்ஸேஷன் நீங்க தரீங்களா? டீம் மானேஜர் கிட்டு வாங்கிக்கட்டுமா?
இப்படி இரண்டு வேளையும் மாமூலே இல்லாம பிழைப்பைக் கெடுக்கற மாதிரி ஒரு டூட்டில போட்டுட்டாங்களே...


இந்த ஃப்ளட் லைட் வெளிச்சத்துல நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா...?
நீ 'BABY OF THE TEAM' ஆக இருக்கலாம். அதுக்காக ஒன்பது மணிக்குத் தூங்கப் போகணும்னா எப்படி...?
இந்த ஃப்ளட் லைட் வெளிச்சத்தில் எங்கள் தலைவியின் புகழொளியைப் பார்க்கிறேன்
பாரு கமலா FLOOD LIGHT வெளிச்சத்துல பச்சை கலர் எடுப்பா தெரியலை என்கிறதுக்காக இப்போ வீட்டுக்குப் போய் டிரஸ் மாத்திக்கிட்டு வரணும்னா முடியுமா...!

ஐ, பிறந்தநாள் எப்படி...?

● க.கு.வே. சித்திரவேலு, கருப்பம்புலம்.
? தொழில் துறையில் நாம் இன்று எத்தனை யாவது இடத்தில் இருக்கிறோம்.?
! முதலீடே இல்லாமல் கோடி கோடியாகச் சம்பாதிக்கும் தொழிலில் முதலிடத்தில் இருக் கிறோம்.

● எம். அசோக்ராஜா, அரவக்குறிச்சிப்பட்டி.
? 'ராஜீவ் காந்தியாலேயே மூப்பனாரை முதல் வராக்க முடியாத போது, ரஜினியால் எப்படி முடியும்?' என்று வாழப்பாடி கேட்கிறாரே?
! யாரோ ஒருவரை முதல்வராக்க உதவலாம் என்ற நம்பிக்கையில்தானே வாழப்பாடியே தனிக்கட்சி ஆரம்பித்திருக்கிறார்? வாழப்பாடி சாதிக்கக் கூடியதை ரஜினியால் சாதிக்க முடி யாதா என்ன....?

● கே. செல்வன்ஜி, வெங்கிட்டம்பாளையம்.
? கொள்ளையோ கொள்ளை! ஹவாலா மோசடி எங்க போய் நிற்கும் சார்....?
! நீர்மூழ்கி, ஹெலிகாப்டர், ஏர்பஸ், பங்குமார்க் கெட் ஊழல், பேர்பாக்ஸ், போபர்ஸ், எல்லாம் எங்கே போய் நிற்கிறதோ அங்கேதான் சார்!

● ஆர். முருகானந்தம், எஸ். மாரியூர்.
? தனிநபர் வருமான வரியை ரத்து செய்ய வேண்டும் என்று ஜனதா கட்சித் தலைவர் சு. சுவாமி கூறியுள்ளாரே?
! ஒரு வகையில் நியாயமே. அந்த வரியை வசூலிக்கச் செலவாகும் தொகையைக் கழித்து விட்டால், உபரி வருவாயாக மிகச் சொற்பமே அரசுக்கு மிஞ்சும். வரியை நீக்கி விட் டாலோ, கறுப்புப் பணம் முழுவதும் வெள்ளையாகி உற்பத்திக்கும் பொரு ளாதாரத்துக்கும் உதவும்.

● எஸ். நாகராஜன், மேலப் பாதி.
? டெண்டுல்கரின் ஆட்டம் எப்படி.?
! பாவம்! எப்பப்பாரு மற்றவர்கள் அசால்ட்டாக அவுட்டாகிக் கழுத் தறுக்க, இவர் மிகப் பொறுமையாக நின்று ஆட வேண்டிய நிர்ப்பந்தம்.




• அரங்கேற்றிய..... • .... அவசர நாடகம்!

ஆனாலும் முகம் சுளிக்காத குழந்தை!

● சுதந்திரச் செல்வன், சித்தமல்லி.
? கதர், காவி, காக்கி - இம்மூன் றிற்கும் தற்போது மதிப்பில்லாமல் போய்விட்டதே...?
! அவற்றின் மதிப்பு குறைய வில்லை; அவற்றை உடுத்தும் போலிகளின் மதிப்புதான் மட்ட மாகியிருக்கிறது.

● அ. எலிசபெத், மேலக்கற் கண்டார் கோட்டை. ❑
? வெள்ளைக்காரன் முன் 'சுடு என்னை' என்று நெஞ்சை நிமிர்த்திக் காட் டிய வீரர்கள் வாழ்ந்த இந்த நாட்டின் பிரதமர், நின்று பேசு வதற்குக் கண்ணாடி கூண்டை உபயோகிப்பது ஏன்?
! முன்னது - அடக்குமுறைக்கு எதி ரான அஹிம்சைப் போராட்டம். பின்னது பயங்கரவாதத்துக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கை.

● ஜே. நாகராஜ், திருச்சி - 12.
? 'பணத்தைத் தண்ணீராய் இறைப்பது போல' என்ற பழமொழியை மாற்றுமளவிற்கு வறட்சி



• சுவீட் பாய்!

நீங்கள் கேட்டவை - தராசு

ஏற்பட்டுள்ளதே?

! 'தண்ணீரைப் பணமாக இறைப்பது போல...' என்று மாற்றிக் கொண்டால் ஆயிற்று.

● ஜெ. ரஜினி ராம்கி, மயிலாடுதுறை.

? ஜெ. பிறந்தநாள் நிகழ்ச்சியில் உங்களை அசத்திய அமைச்சர் யார்?

! 'கொண்டாட்டம் வேண்டாம்' என்றதால் அமைச்சர்கள் செய்தித்தாளில் விளம்பரத்தோடு நிறுத்திக் கொண்டு விட்டார்கள். தமது மறதியால் நம்மை அசத்தியவர் அமைச்சர் செல்வகணபதி. போன வருடம் 'ஜெ'வை கன்னி மேரியாக சித்திரித்ததற்கு எழுந்த கடும் எதிர்ப்பை அதற்குள் மறந்துவிட்டாரே! இல்லாவிட்டால்,

• நியாயமான யோசனை



• எந்த நம்பிக்கையில்...?!





• சூப்பர் மறதி!

'ஜெ' கண்ணனுக்கு நிகர்; ஏசுவைப் போன்றவர்; நபிகள் நாயகத்தின் வழித்தோன்றல் என்றெல்லாம் செய்தித்தாளில் விளம்பரம் கொடுத்திருப்பாரா...? அப்புறம் அவசர அவசரமாக, 'நான் சிறுபான்மை இனத்தவரைப் புண்படுத்தும் நோக்குடன் அப்படி விளம்பரப் படுத்தவில்லை' என்று மன்னிப்பும் கேட்டிருப்பாரா...! அதிலும் ஓரவஞ்சனை பாருங்கள் - பெரும்பான்மையினர் மனம் புண்படுவது அமைச்சரை பாதிக்கவில்லையே....

● க. எத்திராஜ், பவித்திரமாணிக்கம்.

? ஞானேஸ்வரன் விவகாரத்தில் தமிழக அரசு தலையிடாது என்று கூறிவிட்டு, இப்போது அவரைக் காப்பாற்றக் கடும் முயற்சி செய்கிறதே....?

! ஹவாலா வழக்கில் சட்டப்படி காரியங்கள் நடக்கும் என பிரதமர் கூறினார்; அமைச்சர்கள் பதவியிழந்துள்ளனர்; அவர்கள் தங்களுக்குத் தாங்களேதான் வாதாடிக் கொள்ள வேண்டும் - அரசோ, கட்சியோ தலையிடாது என்பது தெளிவாக்கப்பட்டுள்ளது; ஆனால் தமிழகத்தில் நேர் மாறுதல் - தவறு இழைத்ததாகச் சொல்லப்படும் அதிகாரிகளுக்கு அரசு வக்காலத்து வாங்குவதுடன் அவர்களைப் பாதுகாப்பான பதவிகளுக்கு மாற்றவும் அல்லவா முயன்று வருகிறது!

● பாலசுப்ரமணியன், செங்குன்றம்.

? தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டமே இல்லையென அமைச்சர்கள் சட்டசபையில் கூறியுள்ளது குறித்து?

! அவங்கதான் வேலையற்றுப் போய் ஏதோ உளறுறாங்கன்னா, நீங்க வேற அதை சீரியஸா எடுத்துக்கிட்டு கேள்வி கேட்கறீங்களே...!

● கி. சுபாகரன், சுப்பராயபுரம்.

? டாக்டர் தொழில் செய்வோர் முதல்வராகலாம்; வழக்கறிஞர் தொழில் செய்வோர் முதல்வராகலாம்; நடிப்புத் தொழில் செய்வோர் மட்டும் முதல்வரானால் என்ன தப்பு....?

! முதல்வரான பிறகும் தொடர்ந்து 'நடிக்கிறாங்களே' – அதுதான் தப்பு!

● எஸ். கல்பனா, சென்னை - 20.

? ஜார்கண்ட் முக்தி மோர்ச்சாவிலிருந்து பி.ஜே.பிக்குக் கட்சி மாறிய எம்.பி. சைலேந்திர மஹதோ, தாம் பிரதமரிடம் நாற்பது லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றதாக (1993 ஜூலையில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு எதிராக வோட்டுப் போட) ஒப்புக் கொண்டிருக்கிறாரே....?

! அதைத் தான் அவரே மறுத்துவிட்டாரே! மேலும் அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஒரு 'அவசர நாடகமாக' அரங்கேறி கேலிக்கூத்தாகப் போய்விட்டது. பத்திரிகையாளர்கள் 'இவ்வாறு லஞ்சம் வாங்கியவரை பி.ஜே.பியில் சேர்த்துக் கொண்டது எந்த அடிப்படையில்?' என்று கேட்க, 'மஹதோ ஒரு அப்பாவி, ஏழை பழங்குடி இனத்து மனிதர்.. எனவே அவர் நிரபராதி' என்று வாஜ்பாயி அசடு வழிந்திருக்கிறார். 'லஞ்சம் பெறுபவரைவிட கொடுப்பவரே பெரிய குற்றவாளி' என்று புதிய விளக்கம் அளிக்க, அவருக்கு ஒத்து பாடிய ஜெத்மலானியோ 'லஞ்சம் கொடுத்த பிரதமரே குற்றவாளி; மஹதோவுக்குத் தாம் செய்தது தவறு என்றே தெரியாது' என்று ஒரே போடாகப் போட்டு விட்டார். அறியாமையைக் காரணம் காட்டி தண்டனையிலிருந்து தப்பிக்க சட்டத்தில் இடமில்லை என்று பத்திரிகையாளர்கள் அவருக்கு நினைவூட்ட வேண்டியிருந்தது!

❑ ரூ. 25 பரிசு பெறுபவர் :
அ. எலிசெபத்,
23, சாமிநாதன் தெரு,
மேலக்கற்கண்டார்கோட்டை,
திருச்சி - 620 011.

பார்க் டவுன்
பெனிபிட் பண்ட் லிமிடெட்

மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி நிறுவனம். துவக்கம் 1985 Post Box No: 2806

223, தங்க சாலை, (கந்த கோட்டம் அருகில்) பார்க் டவுன், சென்னை-3 போன்: 582676, 564354

கிளை அலுவலகங்கள்: 2 கிழக்கு மாடவீதி, திருவான்மியூர், சென்னை-41 போன் 413582, 416417

P-995,இரண்டாவது அவென்யு, 12-வது மெயின்ரோடு ஜங்ஷன், அண்ணாநகர், சென்னை-40 போன் 6262656, 6280750



பிக்சட் டிபாசிட்

46 நாள்	90 நாள்	6 மாதம்	1 ஆண்டு	2 ஆண்டு	3 ஆண்டு	4 ஆண்டு	5 ஆண்டு *
13%	14%	15%	17%	18%	18.5%	19%	20%

21% 5 வருடங்கள் ரூ.50,000/- அதற்கு மேலும்

PB பாண்டு

முதலீடு	காலம்	திரும்பப் பெறும்தொகை
ரூ.25,000	60 மாதம்	ரூ.70,000

குழந்தைகள் கல்வி நலத்திட்டம்

L.K.G. முதல் கல்லூரி தொடக்கம் வரை

வைப்புத் தொகை ரூ. 5,100/-

3-ஆம் ஆண்டு நிறைவிலிருந்து தொடர்ந்து 12 ஆண்டுகள் ரூ.500/- பெறலாம். திட்ட டெபாசிட் காலத்திலிருந்து 16, 17-வது ஆண்டுகளில் தலா ரூ.1,000/- வீதமும், 18-ம் ஆண்டு துவக்கத்தில் ரூ.75,000/-ம் வழங்கப்படும்.

நலத்திட்டத்தின் 5% மாணவர்களுக்கு +2 அரசுத் தேர்வு மதிப்பெண் அடிப்படையில் ரூ.25,000/- பரிசாக ஒவ்வொருவருக்கும் நிதி நிறுவனம் வழங்கும்.

திட்டத்தின்பயனை உங்கள் மழலைச் செல்வங்களுக்கு வழங்கி மன நிம்மதி பெறுவீர்! மகிழ்ச்சி அடைவீர்!!

கனகதாரா டிபாசிட்

ரூ.50,000/- முதலீடு செய்வீர் 10ஆம் ஆண்டு முடிவில் ரூ.50,000/- பெறுவீர் அடுத்த 20ஆம் ஆண்டு முடிவில் **ரூ.1 கோடி** பெறுவீர்

காமதேனு மாபெரும் திரும்பப் பெறும் திட்டம்

டிபாசிட் திட்டம் 15 ஆண்டுகள்	5-ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	10ம் ஆண்டு நீங்கள் பெறும் தொகை	15ம் ஆண்டு பெறும் தொகை
Rs.6,320	Rs.6,000	Rs.6,000	Rs.56,320

வெகுமதி முதலீட்டுத் திட்டம் - II

ரூ.3450/- செலுத்துவீர். 252 மாதங்கள் நிறைவில் ரூ.2 லட்சம் பெறுவீர்.

சேமிப்பு திட்டம் 10% P.a.

செல்வக்களஞ்சியம்

டிபாசிட்	காலம்	வரவாய்
Rs.7,500	15 Yrs	Rs.1,25,000
Rs.9,000		Rs.1,50,000

பொற்குவியல் திட்டம்

டிபாசிட்	காலம்	வரவாய்
மாதா மாதம் ரூ.100/-	25 Yrs	Rs.3,00,000

மறு முதலீட்டுத் திட்டம்

உங்கள் தொகை 45 மாதங்களில் இரட்டிப்பு ஆகும்

டிபாசிட்	12 மாதம்	24 மாதம்	45 மாதம்	60 மாதம்
Rs.1,000	Rs.1,184	Rs.1,430	Rs.2,000	Rs.2,535



பென்ஷனர் நலத்திட்டம் 20% P.a.
சுமார் 10 ஆயிரமும் அதற்கு மேலும்: காலம் 1 ஆண்டு
வயோதிகர், விதவைகள், ஊனமுற்றோர், கல்வி மற்றும் அறக்கட்டளை பயன் பெறலாம்.

தங்க நகை கடன்
Rs. 3,000 PER 10 GRAM
விடுகளின் பேரில் கடன் வழங்கப்படும்.
(உச்ச வரம்பில்லை)

நிர்வாக இயங்குனர் :
P. பாலசுபரமணியம், B.Sc.
முதன்மை அறங்காவலர்
கந்தகோட்டம், சென்னை - 3.

இயக்குனர் குழுத் தலைவர்:
R. விவேகானந்தன், B.Com.

☐ ரூ. 5/- செலுத்தி பங்குதாரர் ஆவீர். ☐ சேமிப்பே செழிப்புக்கு வழிகாட்டும் ☐ வெள்ளி விடு முறை

எங்களது மற்றுமொரு கிளை தி. நகரில் செயல்படத் துவங்கியுள்ளது.
73, (கீழ் தளம்) ரங்கநாதன் தெரு, தி. நகர், சென்னை - 600 017. Ph : 4344319



மாலை மயங்குகின்ற நேரம்...

கிருஷ்ணசந்திரனை அறிய நேர்ந்ததிலிருந்து இவ்வளவு காலத்தில், உதயரேகா பலமுறை மனம் குழம்பியிருக்கிறாள்; கலங்கியிருக்கிறாள்; திகைத்திருக்கிறாள்; அதிர்ந்தும் இருக்கிறாள். ஆனால், அன்றைய அதிர்ச்சி, முன்னேர்ந்தவை அனைத்தையும் ஒன்றுமே இல்லை என்றாக்கி விட்டது.

முன்பு நடந்தவைகளுக்கெல்லாம் அவனது 'விருப்பமற்ற திருமணம்' என்ற காரணம் இருந்தது. அவன் என்னதான் சொன்னாலும், செய்தாலும், 'அவன்தான் அன்றே மறுத்தானே' என்று ஒரு பெருமூச்சுடன் அதைச் சகிக்கவும், என்ன காரணம் என்று சற்று நிதானத்துடன் தேடவும், வேறு வழிகளில் மனதைச் செலுத்தவும் முடிந்தது.

ஆனால், இப்போது அது ஒன்றும் முடியவில்லை. கடிதத்தைப் படித்ததும் அப்படியே அவளுக்கு வயிறு கலங்கி விட்டது.

முன் தினம் மாலையிலிருந்து கிருஷ்ண சந்திரன் அவளைக் கொஞ்சியதென்ன? குலவியதென்ன? பொட்டுக் கண்மூடாமல் கட்டி அணைத்ததுதான் என்ன....?


அப்படி ஒட்டி உறவாடி விட்டு, எல்லாம்.... எல்..லாமே நன்றாகி விட்டதாக அவள் உள்ளம் குளிர்ந்து உவகை எய்திய உடனேயே, இடி, மின்னல், மழை எல்லாவற்றையும் மொத்தமாகக் கொண்டு வந்து அவள் தலையிலேயே போடுவது போல இது என்ன?

கைநழுவி விழுந்த கடிதத்திலேயே விடையையும் காண்பாள் போல அதை எடுத்து மீண்டும் படித்துப் பார்த்தாள்.

விளக்கம் எதுவும் கிட்டாத போதும், பின் குறிப்பு என்று அடியில் ஏதோ இருப்பது கண்ணோடு கருத்திலும் பட, அவசரமாக அதன் மீது விழிகளை ஓட்டினாள்.

கிருஷ்ணசந்திரன், அவனுடைய தந்தைக்கும் இரண்டு நாட்கள் கழித்துக் கிடைக்கும்படியாக ஒரு கடிதம் எழுதியிருப்பதாகவும், அதன் நகல் அவனது அலுவல் மேஜையின் முதல் இழுப்பறையில் மேலாக இருப்பதாகவும், அதில் உள்ளது உதயரேகாவுக்குப் பொருந்தும் என்பதால், எடுத்துப் படித்துவிட்டு அதன்படியே நடந்து கொள்ளுமாறும் அந்தப் பின் குறிப்பு தெரிவித்தது.

கூடவே இன்னுமொரு கொசுறாக, இனி சந்திப்பே நேராது போனால், முன்தினத் தவறுக்காக அவனை மன்னிக்குமாறும் வேண்டியிருந்தான்.



ரமணி சந்திரன்

சந்திப்பே நேராது போவதா? என்ன பைத்தியக்காரத்தனம்? அவளைக் கலங்க அடித்தே கொன்றுவிடுவதாக எண்ணமா?

ஓடோடிச் சென்று கணவனின் இன்னொரு கடிதத்தை எடுத்துப் பார்த்தாள்.

தந்தைக்குப் பிடிக்காத ஒருவகை நண்பர்களுடன், கால வரையறை அற்ற சுற்றுலா செல்வதாகவும், மகனைக் காணவில்லை, அது இது என்று கலாட்டா செய்தால் திரும்பி வராமலே போய்விடப் போவதாகவும், அதனால் அவனைத் தேடி விரல் அசைப்பது கூடக் கூடாது என்று தனது தந்தையை இருஷ்ணசந்திரன் அந்தக் கடித்தின் மூலமாய் மிரட்டியிருந்தான்.

பெற்றவரை மட்டுமல்ல; அவளையும் தான்!

அங்கேயும் ஒரு பின்குறிப்பாய், அவன் பார்த்து வந்த தொழிலை, அவனை விடவும், பிரமாதமாக அவனுடைய மனைவி நடத்திச் செல்வாள் என்றும், ஆகையால், அதில் அவர் தலையிடத் தேவையிராது என்றும் குட்டித் தகவல் தந்திருந்தான்.

இதுவும் அவளுக்கான சேதியே. தொழிலை அவளே நடத்த வேண்டும் என்று மறைமுகமாய் ஒரு கட்டளை. அப்படியானால், இதையெல்லாம் முன்னரே திட்டமிட்டுத்தான் அவளுக்குத் தொழிலைப் பயிற்றுவித்தானா?

அப்படியானால் முன்தினம் எதில் சேர்த்தி? அதுவும் முன்பே கணித்ததா? அல்லது அவனையும் மீறித் தன்வசமிழந்ததால் நேர்ந்ததா?

தவறு என்கிறானே, ஏன்? கணவனும் மனைவியும் உறவு கொள்வது தவறாகுமா?

ஆனால், எதற்காகவும் அவன் ஏன் அவளைப் பிரிந்து போக வேண்டும்? பிரிந்து எங்கே போனான்? தந்தைக்கு அவன் எழுதிய 'சுற்றுலா' வில் அவளுக்கு நம்பிக்கை இல்லை.



பின், அவன் எங்கே சென்றிருக்கக் கூடும்?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லக் கூடியவன் இருக்கும் இடம் தெரியாததோடு, அங்கே இங்கே என்று விசாரித்து அறியவும் வழியின்றி, தேடக்கூடாது என்ற உத்தரவு வேறு! பெரிய உத்தரவு!

தந்தையின் கைக்கு இரண்டு நாட்கள் பின்னதாக அவனது கடிதம் சென்றடையுமாறு கிருஷ்ணசந்திரன் ஏற்பாடு செய்திருந்தான். ஏன்? இந்த இரண்டு நாட்கள் அவகாசம் எதற்காக?

செல்வரங்கம் விழுந்தடித்துக் கொண்டு இங்கு வந்து, மாமனும் மருமகளுமாகக் கலந்து பேசி, ஏதாவது ஒரு வகையில் அவனைக் கண்டுபிடித்து விடக்கூடும் என்று அஞ்சிவிட்டானா?

கிருஷ்ணசந்திரன், அவ்வப்போது அவள் மனத்தை வருத்தியதை எல்லாம் மிகவும் உற்ற உறவினருக்குக் கூடச் சொல்லாமல் அவனுடைய பெற்றோருடனும் கூடப் பகிர்ந்து கொள்ளாமல் மூடி மறைத்தது தவறோ என்ற சந்தேகம் உதயரேகாவுக்கு இப்போது தோன்றியது.

இப்போதும் அப்படி வாளாவிருந்தால் விபரீதம் ஆகிவிடக்கூடும் என்று எண்ணி, டெலிபோன் அருகே சென்ற உதயரேகாவுக்கு, அதற்குமேல், ரிசீவரை எடுத்து மாமனாரை அழைக்கும் இடம் வரவில்லை.

மீண்டும் சந்திப்பு நேராது போனால்... என்று ஒருவரி எழுதியிருந்தானே! இவளிடம் சற்று இதமான வார்த்தைகளால் எழுதியவன், மாமனாரிடம் வேறு விதமாய்த் தொனியை மாற்றி 'வராமலே போய் விடுவேன்' என்று கூறியிருக்கிறானே?

அப்படிச் சந்திப்பு நேராது போகுமோ என்று எண்ணம் ஓடும்போதே சிலீரென்று உள்ளே குளிரெடுத்தது அவளுக்கு.

சட்டென எழுந்து நின்றாள் உதயரேகா. இப்படிக் கிடந்து அலைபாய்வது மடத்தனம். முதலில், கணவன் மெய்யாகவே பிரிந்து சென்றிருக்கிறானா என்று தெளிவுபடுத்திக் கொண்டு இந்தக் கவலையும் வேதனையும் படலாம்.

கிருஷ்ணசந்திரனின் அறைக்குச் சென்று அலமாரிகளைத் திறந்து பார்த்துவிட்டு ஒன்றும் புரியாமல் மீண்டும் மூடினாள்.

ஓடிச் சென்று குளியல் அறையிலும், அவனது 'டிரஸ்ஸிங் டேபி'ளிலும் தேடினாள்.

அவனது கடிதம் நிஜம் என்பதன் முதல் அறிகுறியாக எங்குமே அவனது 'ஷேவிங் செட்'டைக் காணவில்லை. பேஸ்ட்... பிரஷ்... அடுத்து சீப்பு... லோஷன்...

நெஞ்சு கனக்க ஒவ்வொன்றாகத் தேடி முடித்தவள் மீண்டும் ஓடிப் போய், அலுவலகத்தில் அவனது தனி நம்பரைத் தட்டினாள்.

மறுமுனையில் இருப்பது யார் என்று அறிந்ததும் குரலே மாறிவிட, "நீங்களா மேடம்? நீங்கள் நாளையிலிருந்துதான் வருவீர்கள்; இன்றைக்கு மட்டும் மானேஜர்தான் எல்லாம் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று சார் சொல்லிவிட்டுப் போனாரே! இன்றே வருகிறீர்களா மேடம்?" என்று குழைந்தாள் கிருஷ்ணசந்திரனின் செகரடரி சுலோசனா.

இங்கே பிரிவை உறுதிப்படுத்திவிட்டானே! கடவுளே!

ஆமோதிப்போ மறுப்போ இல்லாமல், வெறும் ஒரு "ம்"முடன் ரிசீவரை வைத்துவிட்டுக் கனவில் நடப்பவள் போல மெல்லக் கீழிறங்கிச் சென்றாள்.

அவளைக் கண்டதும், அவசரமாக வந்து நின்று, "அம்மாவை எழுப்பித் தொந்தரவு பண்ண வேண்டாமின்னு அய்யா சொன்னாங்கம்மா. அதான் காப்பி அனுப்பலை. இப்ப நேரமாயிட்டுதேம்மா, காப்பியா? நேரே சாப்பிட்டு விடுறீங்களா?" என்று அக்கறையுடன் விசாரித்தாள் சமையல்கார அம்மாள்.

சிரமத்துடன் குரலைச் சாதாரணமாக்கி, "அய்யா... அய்யா ஏதாச்சும் சாப்பிட்டார்களா?" என்று உதயரேகா வினவினாள்.

"எங்கம்மா? காப்பி கூட வேண்டாமின்னிட்டாங்க. காலைல ஏழுமணி. பலகாரம் ரெடியாகலை. உடனே தோசை சுட்டுத்தாரேன்னு சொன்னேம்மா. பசியே இல்லைன்னாங்க. பெட்டியோட போனாங்களே; வெளியூருக்காம்மா? கார் உங்களுக்கு வேணும் என்பதால டாக்சி வரவழைச்சுப் போனாங்கம்மா..."


'ஓ'வென்று பெருகுரலெடுத்து அழ வேண்டும் போல வந்ததைப் பெருமுயற்சி செய்து அடக்கி, மேலே யோசித்தாள்.

என்ன என்னவென்று தான் முழுவதுமாய் மூளையைக் கசக்கியதில், கிருஷ்ணசந்திரன், இப்படி ஒரு பிரிவை எதிர்பார்த்து, அதற்காகவே பல்வேறு காரியங்கள் செய்து வந்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

குறைந்த விலையில் நிறைந்த சத்து!

விலை அதிகமாகக் கொடுத்து வாங்கும் பழவகைகளில் தான் சத்து அதிகமாக இருக்கிறது என்று நினைக்க வேண்டாம். மலிவான பழங்களிலும் அதிக சத்து உண்டு. உதாரணமாக ஐம்பது பைசாவுக்கு வாங்கும் கொய்யாப்பழத்தில் ஐந்து ரூபாய்க்கு வாங்கும் ஆப்பிளைவிட அதிக சத்து உண்டு. ஒரு ரூபாய்க்கு வாங்கும் வேர்க்கடலையில், இருபது ரூபாய்க்கு வாங்கும் பாதாம்பருப்பைவிட அதிக சத்து உண்டு.

- பெ. பொன்ராஜபாண்டி



கவலையிலே தலைமுடி உதிர்ந்தால் அதை தடுக்க சிறந்த வழி "உபாஸனா" - திரு. நாராயணன்.

நான் 'ரிடயர்' ஆகி மூணு வருஷம் ஆயிடுச்சி! அப்போ பார்த்திருக்கணும், சுருட்டையா தலை நெறைய முடி! என் நண்பர் சிவராமன் சொல்லுவார் "நாணா! வளரவிட்டால் உங்க மனைவி கூந்தலைவிட நீளமாயிருக்கும் உங்க தலைமுடி!" என்று இப்போ, நீங்களே பாருங்க! XYZ பைனான்ஸிலேந்து வரோம்! நெறைய வட்டின்னு ஆசை காட்டினாங்க! குருவியாய் சேர்த்த பணத்தை போட்டேன். அப்புறம் ஆளையே காணோம்! வட்டியும் வரலை! அலுவலகத்தை தேடிப்போனா மூடியிருக்கு! அங்கே, இங்கே தேடி அவங்களை பிடிச்சேன்! போலிஸ் கேஸ் போடுவேன்னு மிரட்டி பணத்தை வாங்கினேன்! கவலையிலே தலைமுடியெல்லாம் உதிர்ந்திடுச்சு! தலைக்கு வந்தது தலைமுடியோடு போச்சுன்னு சொல்லுவேன்!

இப்போ என் டெபாஸிட் உபாஸனா ஃபைனான்ஸில்!

உபாஸனாவின் சேர்மன் திரு. சுரேஷ் கிருஷ்ணா, சுந்தரம் ஃபாஸ்னர்ஸ் மற்றும் பல 'டிவிஎஸ்' நிறுவனங்களின் சேர்மனும் கூட! கூடுதலாக பாதுகாப்புக்கு ICRA MAA-கிரெடிட் மதிப்பீடு! சரியான நேரத்திற்கு வட்டி! நம் தேவையை கவனத்தில் கொண்டு வளைஞ்சு கொடுக்கிற டெபாஸிட்டுகள்! "நம்பிக்கை மதிப்பு சேவை!" என்ற டிவிஎஸ் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் உபாஸனா! இப்போ மனசுக்கு நிம்மதி! இன்னும் கொஞ்ச நாள் கழிச்சு பாருங்க! நீங்களும் சிவராமன் மாதிரி என் தலைமுடியை வர்ணனை செய்வீங்க!

உங்கள் டெபாஸிட்டுகளுக்கு வளமான வட்டி விகிதத்துடன், உண்மையான உற்சாகத்தை தரும் ஆச்சரியங்களும் காத்திருக்கிறது!

அருகாமையிலுள்ள 'உபாஸனா' அலுவலகத்தை உடனே அணுகுங்கள்! 'விசேஷ டெபாஸிட் சேகரிப்பு' திட்டத்தில் கலந்து கொண்டு பலன் பெறுங்கள்!

உபாஸனா
ஃபைனான்ஸ் லிமிடெட்

தொடரும் நம்பிக்கை என்றும் 'டிவிஎஸ்' பாரம்பரியம்.

இந்த விளம்பரம் 19.6.95 அன்று 'நியூஸ் டுடே'யில் பிரசுரமான விளம்பரத்தின் தொடர்ச்சியாகும். விளம்பரத்தின் முழு வாசகமும் டெபாஸிட்தாரர்களின் கவனத்திற்கென்று விண்ணப்பபடிவங்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

பதிவு அலுவலகம்: "கணேஷ் டவர்ஸ்", மூன்றாவது தளம், 96/6, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், சென்னை-600 004. போன்: 4993494/4993121, ஃபேக்ஸ்: 4994881 • சென்னை : கதவு எண் 18, முதல் மாடி, பி47, II அவென்யூ, அண்ணா நகர், சென்னை 600 040. போன் : 6284148. • நெ. 11, II மெயின் ரோடு, (ஐயப்பன் கோவிலை அடுத்து) நங்கநல்லூர், சென்னை 600 061. • நெ. 70, ஆற்காடு ரோடு, ஷாப் நெ. 3, முதல் மாடி, வளசரவாக்கம், சென்னை 600 087. • கோயமுத்தூர்: நம்பர் 9, ஜூப்ளி டவர்ஸ், 394, D.B. ரோடு, ஆர்.எஸ். புரம், கோயமுத்தூர்-641 002 போன்: 447127 • ஈரோடு: கதவு எண்: 389/390, முதல் தளம், 15, EVN ரோடு, ஈரோடு-638 001. போன்: 79574. • மதுரை: 186, வடக்கு வெளி வீதி, மதுரை-625 001. போன்: 36070. • சேலம்: ஸ்ரீ காம்ப்ளெக்ஸ், A-1, பாரதி வீதி, ஸ்வர்ணபுரி, சேலம்-636 004. போன்: 446711. • திருநெல்வேலி: பார்வதி சங்கர் & சன்ஸ் காம்ப்ளெக்ஸ், 177A/10 திருவனந்தபுரம் நெடுஞ்சாலை, வண்ணாரப்பேட்டை, திருநெல்வேலி-627 003. போன்: 575320. • திருச்சி: C-89, Dr. ரவீந்திரநாத் தாகூர் சாலை, தென்னூர், திருச்சி-620 017. போன்: 467436. • பெங்களூர்: 18/1, வாணிவிலாஸ் ரோடு, பசவன்குடி, பெங்களூர்-560 004. போன்: 622949/620391. • ஹூப்ளி: நெ. 18டி, தயானந்தா காலனி, கேஷ்வபூர், ஹூப்ளி - 23, போன் : 68221. • கொச்சின்: ஆல்ஃபிரா பில்டிங்ஸ், இரண்டாவது தளம், 36/1203 வின்னா ஜங்ஷன், கொச்சின்-682 018. போன்: 333991. • திருச்சூர்: ராமச்சந்திரா பஸ் சர்வீஸ், கோனிக்கர (வழி) ஒல்லூர், திருச்சூர். போன்: 872275. • ஹைதராபாத்: 1-10-63/1/3, வீர் சேம்பர்ஸ், பேகம்பேட், ஹைதராபாத்-500 016. போன்: 847237. • ராஜமுந்திரி: எண் 36-3-2, முதல் தளம், [illegible] ராஜமுந்திரி-533 101. போன்: 75315. • விஜயவாடா: [illegible] பில்டிங்ஸ், 64-9-1, பந்தர் ரோடு, பட்டமடாலங்கா, விஜயவாடா-520 014. போன்: 481519. • விசாகப்பட்டினம்: த.பெ. எண். 130, செக்டர் 8, எம்.வி.பி. காலனி, விசாகப்பட்டினம் - 530 017. போன்: 530473.

Stimulus/UFL/568/96 T

தொழிலில் அவளைப் பழக்கியது; தங்கைக் குத் திருமணம் முடிக்க முயன்றது... மணிவாச கம்!

'எந்த ஒரு நிலையிலும் சற்றும் தயக்கமின்றி உதவி கோரிச் செல்லக் கூடிய ஒரே ஆள் அவன். நினைவில் வை.' என்றானே! இந்த மணிவாசகத்துக்கு ஏதேனும் தெரியுமா என்று கேட்டுப் பார்க்கலாமா?

இருள் பரவும் நேரத்தில் மீண்டும் யோசனை சுழல ஆரம்பித்தது. எப்பேர்ப்பட்ட நண்பன் மணிவாசகம்! கிருஷ்ணசந்திரனுக்கு மட்டுமில்லாமல், அவனுடைய குடும்பத்துக்கே உதவி செய்கிறவன்!

உதயரேகா விறுக்கென்று நிமிர்ந்தாள்.,

வெடித்தே விடும் போல வேகமாகத்துடித்த இதயத்தை அழுத்திக் கொண்டு வேகமாக யோசித்தாள்.

இந்தப் பிழைகள் எல்லாம் மெய்யில் லையே! குடி, கெட்ட பெண்கள் சகவாசம் எல் லாம் கிருஷ்ணசந்திரன் நடித்த நாடகங்கள் தான்!

இல்லாத ஒன்றைக் கதை பரப்பக் கிருஷ்ண சந்திரன் முயன்றான் என்றால் அந்த பொய்க் கதைகளைப் பரப்பியது மணிவாசகம்.

தான் பரப்பிய கதைகள் பொய் என்பது நிச்சயமாக அவனும் அறிந்த விஷயம்தான்.

அப்படியானால் இந்த ஏமாற்று வேலை இருவரும் கூட்டாகச் செய்ததா? அல்லது கிருஷ்ணசந்திரன் ஏவியதை இவன் செய் தானா?

வக திருமணப் பேச்சை உதயரேகாவின் வார்த்தைக் கிணங்கி கிருஷ்ணசந்திரன் விட்டு விட்டதால், 'ஆட்டுவிப்பன் கிருஷ்ணசந்தி ரனே' என்பதும் தெளிவாயிற்று.

அவளது வாழ்வே அந்தரத்தில் வெறும் நூலிழையில் தொங்குகிற உணர்வு. 'முதலில் விடியட்டும்! அவன் வாயாலேயே விஷயத் தைக் கக்க வைக்கிறேன்' என்று கறுவினாள்.

ஆறு மணியானதும் இறங்கி வந்து, காரை எடுத்துக் கொண்டு கிளம்பினாள். பெட் ரோல் பங்கிலும் பெட்டிக் கடையிலுமாகத் தனக்கு வேண்டியதை வாங்கிக் கொண்டாள். மேலே, நேராக மணிவாசகத்தின் வீட்டை அடைந்து கதவைத் தட்டினாள்.

உதயரேகாவைக் கண்டதும் ஒரு கணம் திகைத்த போதும், உடனேயே மணிவாசகத் தின் முகம் வழக்கம் போல் ஆகிவிட்டது. சாதா ரணமாக வரவேற்று, உள்ளே அழைத்துச் சென்றான்.

உணர்ச்சியற்று நோக்கியவனிடம், "ஒருவன் நல்ல நண்பனாக இருப்பது என்றால், அந்த நண்பர் சொல்வதை எல்லாம் அப்படியே செய் வது அல்ல. தோழனுக்கு எது நல்லது, எது கெட்டது என்று யோசித்து அதற்குத் தக



"புது மானேஜர் எல்லார்கிட்டேயும் நல்ல பேர் எடுக்கணும்னு ஆசைப்படறார், அதை ஏன் குறை சொல்றே?"

"பின்னே, பாட்டி செத்துட்டதா லீவ் போட்டா உடனே துக்கம் விசாரிக்க மாலை யோட வீட்டுக்கு வந்து சேரணுமா?"

- ஆலத்தம்பாடி ராஜகோபால்

செயல்படுவதுதான். சொல்லுங்கள் மிஸ்டர் மணிவாசகம், என் கணவர் எங்கே?" என்று அதிகாரமான குரலில் விசாரித்தாள் உதய ரேகா.

அவன் மறுப்பாய்த் தலையசைக்கவும், அருகில் வைத்திருந்த டின்னைக் குனிந்து எடுத்தாள்.

"பாருங்கள், இது பெட்ரோல். இது தீப் பெட்டி. நீங்கள் எனக்குச் சரியான பதில் சொல்லாவிட்டால் இங்கேயே கொளுத்திக் கொள்வேன். உங்கள் வீட்டு ஹாலில் ஒருத்தி தற்கொலை செய்தாள் என்றால், அப்புறம் உங்களை உண்டு இல்லை என்று ஆக்கி விடமாட்டார்களா? யோசித்து பதில் சொல் லுங்கள். ஆனால் ஒன்று. அப்படி ஒன்றும் நான் செத்துவிட மாட்டேன் என்று மட்டும் நினையாதீர்கள். உங்கள் நண்பரைப் பிரிந்து வாழ்வதைவிடச் சாவு எனக்கு சுகமே."

மணிவாசகத்தின் சீரியசான முகத்தில் ஒரு சிறு புன்னகை லேசாகத் தோன்றியது. சம்ம தமாய்த் தலையசைத்து, "எனக்குப் பிரச்னை யாகிவிடும் என்ற பயத்தால் அல்ல சகோதரி. வெகு நாட்களாகவே - அதுவும் நேற்று முன் தினத்துக்குப் பிறகு உங்களிடம் எதையும் மறைப்பது எனக்கும் சரியாகப் படவில்லை. அவனிடம் சொன்னேன். ஆனால்... உட்கா ருங்கள். உங்களுக்கென்று என்னிடம் ஒரு கடிதம் தந்திருக்கிறான். சற்றுப் பொறுத்துத் தரச் சொன்னான்...." என்றவன் ஒரு பெரு மூச்சு விட்டு, "அதைப் படித்துப் பாருங்கள். எல்லாம் தெரிந்துவிடும்" என்று உள்ளே சென்று ஒரு கவரை எடுத்து வந்து உதயரேகா விடம் கொடுத்தான்.

கனமான உறை. பல பக்கங்கள்! இத்தனை பக்கங்களில் கிருஷ்ணசந்திரன் என்ன எழுதி யிருக்கிறான்?

அவசரமாகப் பிரித்து இரண்டு வரி படிக்கு முன் அவளுக்கு முகம் வியர்த்து மூச்சடைத் துப் போயிற்று.

(தொடரும்)



கலர்க் கலராய் ஆசை

மேலாண்மை பொன்னுச்சாமி

ஆறாங் கிளாஸில் இருக்கிற ஆறுமுகத்துக்கு, 'காய்ச்சல் வரவில்லையே' என்று வருத்தம் என்றால்.... வருத்தம், அப்படி வருத்தம்.

'ஐயோ பாவம்' என்று நாலுபேர் பரிதாபப் படுகிற மாதிரி... ஏதாச்சும் நோய் வந்தால் நல்லது. நோயைத் தீர்க்க ஊசி மருந்து இருக்கிற மாதிரி, நோயை வரவழைக்க ஏதாச்சும் வழி வகை இருக்கிற மாதிரி தெரியவில்லை, ஆறுமுகத்துக்கு. தெரிந்தால்.... செய்து கொள்வான்.

மதியம் ரெண்டு மணிக்கு இங்கிலீஷ் வாத்தியார் வந்து விடுவார். நேற்றே கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

"நாளைக்கு 'ஃபார் வாண்ட் ஆப் எ நெயில்' போயமை மனப்பாடமா ஒப்பிக்கணும். படிச்சுட்டு வாங்க. எவனாச்சும் ஒப்பிக்கலே...? இந்தா இருக்கு பிரம்பு. முதுகுத் தோலு பிய்ஞ்சு போகும்."

அவர் பிய்க்கிறவர்தான். அடித்தார் என்றால் நாயடி பேயடிதான். வகுப்பில் ரொம்பக் கண்டிப்பானவர்.

ஆறுமுகமும் நேற்று பூராவும் இங்கிலீஷ் புத்தகத்துடன் மல்லுக்கட்டிப் பார்த்தான். ராத்திரி பத்து மணி வரைக்கும் உருப்போட்டுப் பார்த்தான். ஊஹூம்!

"பார் வாண்ட் ஆப் தி ஹார்ஸ்" பிடிபட்டால், "தி ரைடர் வாஸ் லாஸ்ட்" நழுவிக் கொள்கிறது. ஒரே வார்த்தை ரெண்டு வாக்கியங்களில் மாறி மாறி வரும். அது, ஆறுமுகத்தைக் குழப்பிவிடும். ஞாபகத்தில் பிடிபட்டிருந்த வாக்கியக் குருவியை பறக்கவிட்டு விடும்.

வாத்தியார் வந்து கேட்பார். என்ன சொல்ல? எப்படிச் சொல்ல? அதுதான்... குதிரை ரெக்கை விரித்துப் போய் விட்டதே... ஆணியுமில்லாமல், சாம்ராஜ்யமுமில்லாமல், சூன்யமாய்...

நிச்சயமாய் மப்பைக் கழட்டி விடுவார். பிரம்பு, தீச் சாட்டையாய் 'பளீர், பளீ'ரென்னும். அதை நினைத்தால், இப்பவே வயிற்றில் 'பகீர்' பகீ'ரென்கிறது.

என்ன செய்ய? காய்ச்சல் கீய்ச்சல் வந்து விட்டால், தொல்லை கழிந்து விடும். வீட்டுக்குப் போய்விடலாம். இந்த நெயில் என்கிற இங்கிலீஷ் லாட ஆணி முகரையில் முழிக்காமல் தப்பித்து விடலாம்.

காய்ச்சலும் வரல்லியே... ஆறுமுகத்துக்கு தர்ம சங்கடமாக இருந்தது. மணி பன்னிரண்டை நெருங்குகிறது. தமிழய்யா இலக்கணத்தில் 'எழுவாய் பயனிலை' விளக்குகிறார்.

ஆறாம் வகுப்பு மட்டும் வெட்ட வெளியில். இடமில்லை. பள்ளி வளாகத்தில், வேப்ப மரத்தடியில். மரத்தைச் சுற்றி வட்டமாய் சிமெண்டுத் திண்ணை. அதில் ஆசிரியரும் கரும்பலகையும். பிள்ளைகள் மணலில்.

இங்கிருந்து பார்த்தால்... கடை நன்றாகத் தெரியும். வெள்ளையும் சொள்ளையுமாக ஏழெட்டுப் பேர். அவர்களை வரவேற்கிற பரபரப்பில் உள்ளூர்க்காரர். கடையிலிருந்து கலர்களை வாங்கி உடைத்துக் கொடுக்கிற விறுவிறுப்பு.

கலர் உடைக்கிற சத்தம். கலர் மூடிகள் விழுகிற 'கலீர், கலீர்' சத்தம். ஆறுமுகம் மனசுக்குள் கலர்ப்பானத்தின் வாசம். உடைத்தவுடன், பாட்டிலுக்குள்ளிருந்து திமிறிப் பீறிடுகிற நுரை. எழுகிற புகை இழைகள்.

இவனுக்குள் கலர்ச் சபலம். நாக்கில் எச்சில் ஊறுகிறது. கலர் குடித்தவுன் ஒரு ஏப்பம் வருமே... நெஞ்சின் முட்டலைப் பிளந்து கொண்டு வருகிற ஏப்பவாசம்.

ஆறுமுகம் வீட்டுக்கு விருந்தாளி ஒருத்தர் வந்திருந்த சமயத்தில், அம்மா சொன்னாள்.

"ஏலேய் ஆறுமுகம், கடையிலே போய் ஒரு கலரு வாங்கிட்டு வாடா.

ஓடுறா."

"கோலிக்குண்டு கலரா.... டப்பாமூடிக் கலரா?"

"நல்ல கலரா பாத்து கேட்டு வாங்கிட்டுவா."

"எம்மா...."

"என்னடா? போடா, வெருசா."

"எம்மா, எனக்கும் ஒன்னு."

"சரி சரி... வாங்கிக்கோ."

அம்மாவுக்கு விருந்தாளியை உபசரிக்கிற பரபரப்பு. அவசரத்தில் இவனுக்கும் அனுமதி கிடைத்துவிட்டது. அன்றைக்குக் குடித்த கலர்.

மடக்கு மடக்காக அனுபவித்து ரசனையோடு குடித்தான். கருந்திராட்சை நிறத்திரவம். வந்த ஏப்பத்தில் திராட்சை மணம்.

நாக்கை நீட்டி நீட்டி கண்ணாடியில் பார்த்தான். அந்தத் திரவ நிறம் நாக்கில் படிந்திருந்தது. பார்த்துப் பார்த்து ரசித்தான். ரசிக்க ரசிக்க மனசுக்கு ரெக்கை முளைத்தது. பறந்தான்.

ஆறுமுகத்துக்கு இன்னைக்கும் கலர் குடிக்கணும் போலிருந்தது. நினைக்க நினைக்க நாக்கில் ஊறுகிற எச்சில். விதையாக விழுந்த கணத்தில், விருட்சமாகி விடுகிற விநோத உணர்வு. ஆசைச் சலனம், விருட்டென்று பேரலையாகிறது. பிரளயமாகவே ஆகிவிட்டது.

எழுந்து நின்றான், ஆறுமுகம். நேராக நிமிர்ந்து நிற்காமல் குன்னிப் போயிருந்தான். தமிழய்யா அவனைப் பார்த்தார்.

"என்னலே?"

"சார்... வவுத்தை வலிக்குது" அடிவயிற்றை அழுந்தப் பற்றினான்.

"எப்ப இருந்து?"

"அப்பவே வலிச்சது சார். இப்ப ரொம்ப வலிக்குது சார்... தாங்கமுடியலே சார்."

"சரி... என்ன செய்யப் போறே? வீட்டுக்குப் போறியா?"

"ஆமா... சார்."

"ரைட். ஹெட் மாஸ்டர் கிட்டே சொல்லிட்டுப் போ."

பைக்கட்டை தூக்கிக் கொண்டு ஹெட் மாஸ்டர் அறைக்கு வந்தான். அங்கேயும் அதே நடிப்புதான். வேதனை தாளாத முகச்சுளிப்பு. அடிவயிற்றைத்

நாக்கை நீட்டி நீட்டி கண்ணாடியில் பார்த்தான். அந்தத் திரவ நிறம் நாக்கில் படிந்திருந்தது. பார்த்துப் பார்த்து ரசித்தான். ரசிக்க ரசிக்க மனசுக்கு ரெக்கை முளைத்தது. பறந்தான்.

தாங்கிப் பிடித்து கோணி நின்ற பாவனை.


"சரி... போய்த் தொலை."

இங்கிலீஷ் வாத்தியாரைச் சந்திக்காமல் தவிர்த்தாகி விட்டது. போயம் தெரியாமல், பேய் முழி முழிக்க வேண்டியதில்லை. பிரம்படியின் சுளீரடிகள் பட வேண்டியதில்லை. தப்பித்தாகி விட்டது.

இதே வயிற்று வலியைச் சொல்லி... அழுது புலம்பி அம்மாவைக் கரைத்து... கலர் குடித்துவிடவும் செய்யலாம். ஒரே கல். ரெண்டு காரியம். அடி சக்கை!

அம்மா வீட்டில்தான் இருப்பாள். கூலி வேலைக்கும் நாலு நாளாய் கூப்பிடுவாரில்லை. காலையில் கூட அங்கலாய்த்துக் கொண்டிருந்





பிரிட்டனில் சாலை வசதியற்ற இடத்தில் கட்டப்பட்ட இந்தக் கலங்கரை விளக்கத்துக்கு வந்து போக வசதியாக அதன் கூறை ஹெலிகாப்டர் தளமாக அமைந்துள்ளது. ஹெலிகாப்டரை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் இருவர். முற்றிலும் சூரிய சக்தியை மின்சாரமாக மாற்றி ஒளிபரப்பும் லைட் ஹவுஸ் இது.

— நன்றி : கார்டியன் வீக்லி

தான்.

"கூத்துவன் பண்ணுற கொடுமை. மழை தண்ணியில்லாம அந்துப் போச்சு. காடுகரை கன்லே வெள்ளாமையில்லே. மனுச மக்களுக்கு வேலை ஜோலியில்லே. கூலி சனம் என்னத்தை வைச்சு... வவுறு நனைக்க?"

கடைக்காரர் கடன் கொடுக்க மலைத்தாராம். 'பாக்கி ரொம்ப இருக்கு. எப்படிக் கொடுக்க?' என்று குதர்க்கமாய் விசாரித்தாராம். அம்மா அதைச் சொல்லிச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தாள்.

'ஏவாரி வரட்டும். இருக்குற நாலு கோழி களையும், ஒரு சேவலையும் எடை போட்டு வித்துட்டு... கடைக்காரர் பாக்கியை அடைக்கணும்' என்று ரோஷம் ரோஷமாய் முணங்கினாள். இந்நிலையில்....

"எம்மா... கலரு வேணும்" என்று கேட்டால்... ஆங்காரம் தாங்காமல், அடிக்கவே வருவாள். செத்துப் போன அய்யாவைப் படைத்த சாமியை, வாய்த்த வாழ்க்கையை எல்லாத்தை யும் கூட்டிப் பிடித்து திட்டித் தீர்ப்பாள்.

"தாய் தவுட்டுக்கு அலைஞ்சானாம். புள்ளை இஞ்சிப் பச்சடி கேட்டு அழு தானாம். அப்படியில்லே இருக்கு உங்கதை" என்று சொலவடை சொல்லி வைவாள்.

ஆனாலும்... இன்னைக்கு எப்படி யாச்சும் கலர் குடிச்சேயாகணும்.

ஆறுமுகத்துக்குள் பதுங்கிப் பதுங்கி நகர்கிற யோசனைகள். குறி மீது பாய்ச் சலுக்கு பம்மிப் பம்மி நகர்கிற பூனை நினைவுகள்.

வீட்டுக் கதவு திறந்து கிடந்தது. வாசலில் தலை வைத்து அம்மா படுத்திருந்தாள். அம்மாவின் மெல்லி சான குறட்டை.

இவனது பிஞ்சுக் காலடி அரவம். மண்ணில் செவ்வந்திப் பூவிழுகிற சத்தம். ஆனாலும் மகன். ரத்தப் பிறப்பு. அந்த மெல்லிய அதிர்விலேயே விழித் துக் கொண்டாள்.

பைக் கட்டோடு ஆறுமுகம். அவள் பதற வில்லை. பதைக்கவில்லை. என்னமோ ஏதோ என்று துடிக்கவு மில்லை. பிள்ளை குணம் அறியாத பெத்தவளா?

எதிர் வீட்டு நிழலைப் பார்த்து, நேரத்தை உணர்ந்து கொண்டாள். மகனைப் பார்த்து கேலிச்சிரிப்பாய் வரவேற்றாள்.

"போன மச்சான் திரும்பி வந்தான்..., பூமணத்தோடங்குற கதையா வந்து நிக்கியே... என்னலே?"

"வாத்தியாரு போகச் சொல்லிட்டாரு."

"எதுக்கு?"

"வவுத்தவலி."

"வாத்தியாருக்கு வவுத்தவலின்னா... ஒன்னை எதுக்குப் போகச் சொல்லுதாரு? கோயமுத்தூர்லே இடி இடிச்சா... குத்தாலத்துல மழையா பெய்யும்?"

பைக் கட்டை வீட்டுக்குள் போட்டான். அம்மா காலடியில் குத்துக்கால் வைத்து உட்

கார்ந்து சுவரில் சாய்ந்தான். அம்மாவின் இன்னடலில் புண்பட்டவளைப் போல, முகத்தில் ஒரு சிடுசிடுப்பு.

"வாத்தியாருக்கில்லே... எனக்குத்தான்."

"ஒனக்கா? வவுத்தவலியா?"

"ஆமா. அடிவவுத்துலே 'சுருக், சுருக்'குன்னு குத்துது."

"கோழிக்கறியும் சோறுமா தின்னுட்டுப் போனே? கொடல்லே குறுக்கே வுழுந்து வவுத்தை வலிக்க? பழைய கஞ்சிதானே குடிச்சிட்டுப் போனே?"

"ஆமா...."

"பெறகெதுக்கு வவுத்தவலி?"

"என்னத்துக்கோ!"

ஆறுமுகத்துக்குள் ஒரு புழு ஊர்ந்து செல்கிற மாதிரியான ஓர் உணர்வு. அம்மாவின் நக்கலும் நையாண்டியுமான குரல். இவனை நம்பவில்லை. இவன் ஏமாற்றில் ஏமாறாமலிருக்கிற அம்மா.

கலர் கிடைக்காமப் போயிருமோ... கதை கந்தலாகிப் போகுமோ... கடை வாசலில் வெள்ளை வேட்டிகள் குடித்த திரவம். அண்ணிக்கிக் குடித்த கலர். விட்ட ஏப்பம். மனசுக்குள் சோடா மூடிகள் விழுந்த 'கலீர், கலீர்' சத்தம்.

"அப்ப... வவுத்தவலிக்கு? ஊம்?"

"ஆமா. தாங்க முடியலே."

"இன்னிக்கு 'வெளியே' போனியா?"

"ம்."

"போனதா?"

"அதெல்லாம் போச்சு."

"அப்படியா...?" அம்மா யோசிக்கிறாள். சில கணங்கள் இவனுக்குள் 'படக், படக்.'

"அஞ்சறைப் பெட்டியிலே ஒரு சுக்குத் துண்டு கெடக்கு. அம்மியிலே வைச்சு உனுக்கித்தாரேன். சக்கரைக் கட்டியை கடிச்சுக்கிட்டு தின்னுரு. வவுத்தவலி, மாயமாய்ப் போயிரும். ம்?"

"சுக்கா? அதெல்லாம் வேண்டாம்."

"ஏன்டா?"

"அது ஒறைக்கும். அந்த ஒறைப்பை எவன் தாங்க?"

"வலிவுடணும்னா... ஒறைப்பை தாங்கித்தான் ஆகணும். ஒழுந்த பொதியை, சொமந்துதான் தீக்கணும் கழுதை."

மகன் முகத்தையே பார்க்கிற அம்மா. விசனப்பட்ட சின்ன முகம். வயிற்றையே நசுக்கி அமுக்கி விடுகிற கை. கோபமும், வேதனையுமான முகம். 'நிஜத்திலேயே... வவுத்த வலி தானோ....'

பெருமூச்சோடு எழுந்தான். புளித் தண்ணீர்ப் பானையில் ஒரு கிளாஸ் முகர்ந்து கொடுத்தான்.



பகல் கொள்ளை!

அந்நிய பகிஷ்கரிப்பு
சுதேசி இயக்கம் -
மகாத்மா
சொன்னதாய்
ஞாபகம்
கொகொ கோலா
குடிக்கும் போது.

நவகாளி யாத்திரை
நடத்திய பூமியில்
இடிந்தது மசூதி.

கொடியங்குளம்
பள்ளி பாடத்திலும்
பாரதி பாட்டு -
"ஜாதிகள்
இல்லையடி
பாப்பா!"

ஜெயின் டைரி
படித்து வெறுத்து
அரசு சின்னமான
ஸ்தூபி
சிங்கங்களுக்கு
ஆத்திரமான
முகங்கள்.

வந்தார்கள்
சோமநாதபுரத்தில்
வென்றார்கள் - சரி.
கும்பகோணம்,
மன்னார்குடியிலும்
யார் எடுத்தார்கள்!

"நள்ளிரவில்
வாங்கினோம்
விடியவே இல்லை" -
பொய்
நள்ளரவில்
பெற்றோம்;
பட்டப்பகலில்
பறிகொடுத்தோம் -
மெய்!

— அண்ணா
அன்பழகன்

"குடிடா... சூட்டு வவுத்த வலின்னா... வுட்டுரும்."

"வேண்டாம்... போ."

"கண்ணாம்பை கால் வெரல் நகங்கள்லே தடவட்டுமா? உள்ளங்கால்லேயும் தடவுனா... சூடு தணிஞ்சிடும்."

"கண்ணாம்பா? பொத்துப் புண்ணாப் போயிரும்."

"வெத்தலையிலே சோத்துக்குப் போடுற உப்புக் கல்லை சுத்திதாரேன். மென்னு முழுங்குறியா?"

"நீதான் முழுங்கு... அதை."

சகிக்க முடியாத வெறுப்பில் எரிந்து விழுகிற ஆறுமுகம். அவனது சின்னக் கண்ணில் கோபத்துடிப்பு. நிராசையின் அரூபச் சுமையை முன்னுணர்ந்து விட்ட வலியின் துடிப்பு. அம்மாவுக்கும் மெல்லிசான கோபம்.

"என்னதான்.... செய்யணும்கே? வவுத்த வலின்னு வந்து நின்னு, உசுரைப் புடுங்குறே?"

"சோடா குடிச்சா சரியாப் போவும்!"

"சோடாவா... கலரா...?"

ரெண்டு பேர் பார்வைகளும் திடுமென்று

மோதிக் கொண்டன. கண்ணாமூச்சி காட்டிக் கொண்டிருந்த மைய உண்மையை நெருங்கி விட்ட மாதிரியோர் உணர்வு.

அந்தரங்கம் பிடிபட்டுப் போச்சோ என்கிற தடுமாற்றத்தில் விலகுகிற மகனின் பார்வை. அவன் கண்ணுக்குள் முகம் காட்டிவிட்டு மறைகிற ஒரு கள்ளத்தனம்.

"சொல்லுடா... சோடாவா, கலரா....?"

"ஏதாச்சும் ஒன்னு."

முணுமுணுப்பாக கிசுகிசுக்கிற ஆறுமுகம். தொண்டைக்குள் உயிராக பம்மிப் பதுங்குகிற குரல்.

"கடையிலே போய்.... வாங்கிக்கறியா?"

"அப்ப... துட்டு குடு."

"ஊம்... சாயங்காலம் பால் வாங்கலாம்னு வைச்சிருந்தேன். அதுக்கும் சனியனா நீ வந்துட்டியா?"

கவலைப் பெருமூச்சோடு முந்திமுடிச்சை அவிழ்த்தாள். ஒன்னரை ரூபாய். எடுத்து நீட்டி விட்டு. வெறும் முந்தியை உதறினாள். கடந்த கால முடிச்சின் அடையாளமாய் கசுக்கங்கள். வெறுமனே காற்றில் அசைந்தது. சோகமாய்.

துட்டை வாங்கிக் கொண்டான். அவனுக்குள் ரெக்கையடிக்கிற சந்தோஷப் படபடப்பு. விசிலடிக்கிற மனப் பரபரப்பு.

ஓரே ஓட்டமாய் ஓடினான். சிட்டாய்ப் பறந்தான். ஆகாயத்தில் மிதக்கிற ஆனந்தக் கிறுகிறுப்பு.

ஆசை ஆசையாய் ஓடினான். அவனுக்கும் முன்னால், அவன் மனசு. பாய்ச்சல் வேகத்தில் கடையில் நின்றான். கலர் வாங்கினான். ஆசை ஆசையாகக் குடித்தான். ஆரஞ்சுக் கலர். மிடறு மிடறாக, பதறாமல், ஆற அமர... ரசித்து ரசித்துப் பருகி....

நாக்கில் பரவுகிற தித்திப்பு. வருகிற ஏப்பம். நாசிக்குள் முட்டுகிற ஆரஞ்சு வாசம். நாக்கில் படிந்திருக்கும் திரவ நிறத்தைப் பார்க்கணும். கண்ணாடியில். வீட்டுக்கு ஆவலாய் வந்தான். வாசலை நெருங்கினான். அங்கே -

சோகத்தில் நனைந்து துவண்டு போன அம்மாவின் அங்கலாய்ப்புக் குரல். அழுகைக் கசிவான குழைவுக் குரல். தனிமைப் புலம்பல்

"நாவுக்கு ருசியா நாவா பண்டங்க வாங்கிக் குடுக்குறதுக்கு வக்கத்துப் போன இந்தப் பாதகத்தி வவுத்துலே வந்தா... நீ பொறக்கணும்? ஏந் தங்கப் பெட்டி... ஒரு கலருத் தண்ணிக்கு இம்புட்டு வேஷமும் பாவ்லாவுமா.... நீ போடணும்?"

வாழ்வின் அவலமாய் அம்மாவின் குரல். ஆறுமுகத்தை கற்றையாய் அறைந்த அம்மாவின் உள் மன ரணம். இப்போது கலர் கசந்தது. ஆறுமுகத்துக்கு.

ஆன்மீகம் பேசிய பாவேந்தர்!

அப்போது நான் பம்பாயில் ஒரு பள்ளி ஆசிரியையாக இருந்தேன். அங்கு வாழும் தமிழர்கள் அழைப்புக்கிணங்க, பாவேந்தர் பாரதிதாசன் சொற்பொழிவுகள் ஆற்ற வந்திருந்தார். எனக்கு அவருடன் அறிமுகம் உண்டு. அவரது பேச்சுக்களைக் கேட்கவும் விருப்பம்தான். ஆனால் ஏதேதோ வேலைகள். செல்ல முடியாத சூழ்நிலை.

ஒரு நாள் நண்பகல். வாசலில் ஒரு கார் வந்து நிற்க, யார் என்று பார்க்கப் போன எனக்கு இன்ப அதிர்ச்சி. பாரதிதாசன் தான் என்னைத் தேடி வந்திருந்தார்!

"என்ன, நேற்று என் சொற்பொழிவுக்கு வந்தாயோ?" என்று கேட்டார்.

"இல்லை..." - தயங்கினேன்.

"போகட்டும். கோரேகான் பேச்சுக்கு?"

"மிகத் தொலைவு... இரவு நேரம் வேறு. அதனால், அதற்கும் வரவில்லை!"

அவருடன் வந்திருந்த சில ஆசிரியர்கள், "பிற்பகல் வீட்டில் இருப்பீர்களா?" என்று கேட்க, வெளியே சில வேலைகள் இருப்பதாகச் சொன்னேன்.

கோபம் வந்துவிட்டது பாவேந்தருக்கு.

"அவர்கள் வரவும் மாட்டார்கள். வீடு தேடி வந்தால் அழைக்கவும் மாட்டார்கள்" என்றார்.

நான் பதறி, "என் வீட்டுக்கு நீங்களெல்லாம் வருவீர்களோ என்னவோ என்று தயங்கித்தான் நிற்கிறேன். வாருங்கள்!" என்று முதல் மாடியில் என் வீட்டுக்குக் கூட்டிப் போனேன்.

வரவேற்பறையில், ஒரு வாழைமர மாடல் வைத்திருந்தேன், கன்றுகளுடன். இந்தி இலக்கியத்தின் ஆயிரமாண்டு தோற்றம், வளர்ச்சி குறித்து, பள்ளியின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவுக்காகச் செய்து வைத்திருந்த project அது.

"தங்களுக்கு இந்தி பிடிக்காது. இது பள்ளி விழாவுக்காகச் செய்தது" என்று தயங்கிச் சொன்னேன், அவர் அதை கவனித்ததைப் பார்த்துவிட்டு.

"யார் சொன்னது நான் இந்திக்கு எதிரி என்று? எத்தனை மொழிகள் தெரிந்து கொண்டாலும் நல்லதுதான். நீயும் படி. நன்றாகக் கற்றுக் கொடுக்கவும் செய்!" என்றார்.

இது எனக்கு முதல் வியப்பு.



சற்று நேரம் இருந்து, பேசிவிட்டுப் புறப்பட்டார்.

"இனிய கனவு போல் உள்ளது. நீங்கள் வந்த போது என் கணவர் இல்லாததுதான் குறை" என்று வருத்தப்பட்டேன்.

"எப்ப வருவான்?" என்றார்.

"மாலை ஆறரை ஆகிவிடும்!"

'சரி' என்று புறப்பட்டு விட்டார்.

இரவு ஏழரைக்கு கதவு தட்டப்பட, திறந்தால், மீண்டும் பாவேந்தர்!

"உன்னே வான்னு சொல்லு. நீதானே உன் புருஷன், நான் வந்தா சந்தோஷப்படுவான்னு சொன்னே? வந்தேன்!"

சிலிர்த்துவிட்டது எனக்கு!

"இரவு ஒன்பது மணிக்கு 'பாண்டுப்'பில் கூட்டம் இருக்கிறது.

நேரமாகி விடும்தான். ஆனால் வண்டி இருக்கிறது. கிளம்புங் கள்!" என்றார்.

கிளம்பினோம்.

போகிற வழியில், "நீதான் இன்றைய கூட்டத்துக்குத் தலைமை!" என்றார். அதிர்ந்து விட்டேன்.

"ஐயோ, அதெல்லாம் முடியாது!" என்று உடனே மறுத்துவிட்டேன்.

அவரா விடுவார்? மேடைக்குப் போனதும் பொதுமக்கள் எதிரிலேயே என்னைக் கூப்பிட்டு தலைமைக்கு உட் கார வைத்துவிட்டார்!

அந்தக் கூட்டத்தில் எனக்கு இரண் டாவது ஆச்சர்யம். அவரது பேச்சு முழுக்க ஆன்மிகமாகவே இருந்தது! பட்டி னத்தார், அடிகளார், தேவாரங்கள், திவ்யப்பிரபந்தம் என்று ஏராள மேற் கோள்கள்!

கூட்டமே வியந்தது!

திரும்புகையில், "நான் ஏன் உன் வீட் டுக்கு வந்தேன் தெரியுமா? சங்கத்துல உன்னை 'எங்கே'ன்னு கேட்டப்போ, பயலுங்க சரியா பதில் சொல்லலை. தவிர, திட்டிப் பேசினாங்க. 'சரிதான் சரக்கு இருக்கும் போல'ன்னுதான் நேர்லயே பார்க்க வந்தேன்!" என் றார்.

'முதுகுக்குப் பின்னால் ஒருவ ரைப் பற்றிச் சிலர் தூற்றி னால், அதை நம்பாத இப் படி ஒரு பண்பாளரா!' என எண்ணிச் சிலிர்த் துப் போனேன்.

- மீனாட்சி சேஷன், சென்னை - 4.

மெய்சிலிர்த்த அனுபவம்



முஸ்தபா

நெகடிவ் ஹீரோ கதையாகத் தொடங்கி, இந்து - முஸ்லிம் இணக்கம் பற்றியெல்லாம் சொல்லி, குடும்பப்பாங்கு முகம் பெற்று, சென்ட்டிமெண்ட்களில் மூழ்கி எழுந்து, உணர்ச்சி கொப்பளிக்க முடித்து விடுகிறார்கள் - ஒரு வழியாக!

நாடகக்காரர் பிரசன்னாவின் கதை, வசனம் என்பதால் அடிக்கடி, 'நாம் இருப்பது உதயம் தியேட்டரிலா, ராணி சீதை ஹாலிலா?' என்ற சந்தேகம் வந்து விடுகிறது. ஆனாலும் ரொம்ப நாட்களுக்குப் பிறகு வசனங்களுக்காகக் கைதட்டல் வாங்குகிற படம் என்ற வகையில் கவனம் பெறுகிறது.

முஸ்தபாவாக வந்து 'வாப்பா, வாப்பா' என்று கூப்பிட்டு, ஒரு காட்சியில் குரான் ஓதி, மிச்சத்தில் கருட்டு கடித்து, சண்டை போட்டு, செத்துப் போகிறார் நெப்போலியன். பாவங்கள் ஏதும் காட்ட, முகம் மறுக்கிறது. ஒரே மாதிரி பார்வை. ஒரே மாதிரி பேச்சு. ஒரே மாதிரி அழுகை. ரசிகர்கள் ஒரே மாதிரி முகம் சுளிக்கிறார்கள்.

ஆனால் கவுண்டமணி வரும்போதெல்லாம் கலகலப்பும் வந்து விடுவதால் கொஞ்சம் சுவாசிக்க முடிகிறது. குரலைக் கொஞ்சம் குறைத்துக் கொண்டால் ரசிக்கவும் முடியும்.

இரட்டை வழிப் பாதையில் செல்லும் கதை. ஒன்று, நெப்போலியனின் அடியாள் உத்தியோகமும் அதில் சந்திக்கும் சோகங்களும்.

இன்னொரு பாதையில் ஒரு நேர்மையான அரசு ஊழியரின் குடும்பமும் ஏழ்மையும்.

இரண்டும் உரசுகையில் இந்து - முஸ்லிம் சமத்துவம் பற்றிப் பேச ஒரு மேடை கிடைக்க, வசனகர்த்தா பிரசன்னா நகைச்சுவை மூலாம் தடவி என்னவோ தருகிறார். ரசிக்கலை.

படத்தில், பளிச்சென்ற விஷயங்கள் இரண்டு. 1. சார்மிளா 2. கேமரா.

பாடல்களோ, இசையோ, தொகுப்போ - ஏதும் சுகமில்லை. படம் அபார நீளமாகத் தெரிகிறது. கண்ணை மூடிக் கொண்டு முதல் அரைமணி நேரக் காட்சிகளைத் தூக்கிப் போட்டார்களென்றால் சுமாரான நாடகம் பார்த்த உணர்ச்சியாவது மிஞ்சும்.

பாதன் அச்சகத்தில் அச்சிட்டவர் : வி. முரளி, பாதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் : வி. ராஜேந்திரன்.
ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல், சென்னை - 600 097. தொலைபேசி : ஆசிரியர் குழு அலுவலகம் : 2345624; மானேஜிங் டைரக்டர் : 2345621.
சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; சந்தா, விளம்பரம் : 2345622;
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா : உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 200/-; விமானத் தபால் : ரூ. 525/-.

மாற்றமில்லாத கொள்கைகள்
1946 முதல்

A TRADITION OF TRUST & SERVICE
SINCE 1946
FIFTY GOLDEN YEARS

50 ஆண்டு திட நம்பிக்கை மற்றும் சிறந்த சேவைக் கொண்டாட்டம்

பிக்செட் டெபாசிட்டுகளை வரவேற்கிறது

பிக்செட் டெபாசிட் திட்டங்கள்

காலம் மாதங்களில்	ஆண்டுக்கு வட்டி விகிதம்	
	மாதாந்திரம்	காலாண்டு (மாதந்தோறும் கூட்டு வட்டியாக)
12 மாதங்கள் & 1 நாள் 25 மாதங்கள் 36 மாதங்கள் 48 மாதங்கள் 60 மாதங்கள்	15%	15.19%

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின், அதன் மடங்குகளில்.
** ரூ. 16,000 வரையிலுள்ள டெபாசிட்டுகளுக்கு இங்கு வரிக்கழிப்பு இல்லை.

குமுலேட்டிவ் டெபாசிட் திட்டங்கள்

காலம் மாதங்களில்	ரூ. 1000 டெபாசிட்டுக்கு முதிர்வடையும் போது தரப்படும் தொகை	ஆண்டு வருவாய் (மாதந்தோறும் கூட்டு வட்டியாக)	கீழ்கண்ட டெபாசிட்டுகள் வரை வரிக் கழிப்பு இல்லை
12 மாதங்கள் & 1 நாள்	ரூ. 1161	16.10%	ரூ. 15000
25 மாதங்கள்	ரூ. 1364	17.47%	ரூ. 13000
36 மாதங்கள்	ரூ. 1564	18.80%	ரூ. 11000
48 மாதங்கள்	ரூ. 1815	20.38%	ரூ. 10000
60 மாதங்கள்	ரூ. 2107	22.14%	ரூ. 8000

* குறைந்தபட்ச டெபாசிட் ரூ. 1000/- பின், அதன் மடங்குகளில்.

ரெக்கரிங் டெபாசிட் திட்டங்கள்
(குறைந்தபட்ச தொகை ரூ. 500)

காலம் மாதங்களில்	ஆண்டு ஒன்றுக்கு வட்டி	முதிர்வடையும் போது மதிப்பு (ரூ. 500-க்கு)	கூடுதலான ஒவ்வொரு ரூ. 100-க்கும்
12 மாதங்கள் & 1 நாள்	14%	ரூ. 6477	ரூ. 1295
25 மாதங்கள்	15%	ரூ. 14749	ரூ. 2949
36 மாதங்கள்	15%	ரூ. 22840	ரூ. 4568

ICRA RATING
MAA +
HIGH SAFETY

தி இன்வெஸ்ட்மென்ட் டிரஸ்ட் ஆஃப் இந்தியா லிட்
ஒரு H. C. கோத்தாரி குரூப் நிறுவனம்

மஸ்கூர் பில்டிங்ஸ், 1 கிருஷ்ணமாச்சாரி சாலை, நுங்கம்பாக்கம் சென்னை 600 034
தொ. பே. 827 6297, 827 4871, 823 3202

For statutory details, refer to our advertisement in The Hindu dated 7.9.95

REGISTERED NO. M. 4392
Registered as Newspaper in Srilanka